# வேதங்களும் ஆகமங்களும்



வெளியீடு :

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
248, 1/1, காலி வீதி, கொழும்பு - 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதங்களும் ஆகமங்களும்

தொகுப்பு -
அறநெறிப்பிரிவு

வெளியீடு:
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
இல. 248 1/1, காலி வீதி,
கொழும்பு - 04

2 – CM 014072

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புத் தரவுகள்

| | | |
|---|---|---|
| நூல் | : | **வேதங்களும் ஆகமங்களும்**<br>**அறநெறிப்பாடசாலைகளுக்கான இலவச வெளியீடு** |
| முதற் பதிப்பு | : | நவம்பர் 2008 |
| அளவு | : | 1/8 Demy |
| பக்கங்கள் | : | I - IV + 1 - 146 |
| பிரதிகள் | : | - 2000 |
| கடதாசி | : | 80 GSM இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை அச்சடித்தல் கடதாசி |
| அச்சு | : | ஓவ்செற் |
| முன் அட்டை | : | 230GSM ஆர்ட்போட் |
| தொகுப்பு | : | அறநெறிப்பிரிவு,<br>இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம். |
| உரிமை | : | இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.<br>இல. 248-1/1, காலி வீதி, கொழும்பு - 04. |
| அச்சுப்பதிவு | : | அரசாங்க அச்சுத் திணைக்களம் |

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title | : | **VETHANGALUM AGAMANGALUM**<br>Free Issue |
| First Edition | : | November 2008 |
| Size | : | 1/8 Demy |
| Pages | : | I - IV + 1 - 146 |
| No. of. Copies | : | 2000 |
| Paper | : | 80 GSM Imported White Printing |
| Printing | : | Offset |
| Cover | : | 230GSM Art Board |
| Compiled by | : | Aranery Unit, Department of Hindu Religious and Cultural Affairs. |
| Copyright | : | Department of Hindu Religious and Cultural Affairs. No. 248 - 1/1, Galle Road, Colombo - 04. |
| Printed at | : | Government Press |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிகளில் முக்கிய இடத்தை வகிப்பது இந்து அறநெறிப் பாடசாலைகளின் அபிவிருத்தியாகும். திணைக்களம் அறநெறிப் பாடசாலைகளின் மேம்பாட்டிற்காக நாடளாவிய ரீதியில் பல்வேறுபட்ட சேவைகளை வழங்குகிறது. பாடநூல்கள் வழங்குதலோடு ஆசிரியர் கையேடு, பாடத்திட்டம், தினவரவு, இசைக்கருவி, சீருடைகள் என்பவற்றை வழங்கி ஊக்கிவிக்கிறது. அத்துடன் அறநெறி இறுதிநிலைப் பரீட்சை, இந்து தர்மாசிரியர் பரீட்சை எனும் இரு பரீட்சைகளையும் பரீட்சைத்- திணைக்களத்தினூடாக நடாத்தி அதற்கான பெறுபேற்றைப்பெற்றுக் கொடுக்கிறது. அத்துடன் இவ்விரு பரீட்சைகளுக்கும் உரிய பாடத்திட்டத்திற்கமைவான கருத்தரங்குகளும் நடத்தப்படுகின்றன. பரீட்சைப் பாடத்திட்டத்திற்கு அமைவான நூல்களை வெளியிடுவதன் மூலம் பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கு உந்துசக்தியாகத் திணைக்களப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று கூறினால் மிகையாகாது.

இந்து மக்களின் சமய, சமுதாய வளர்ச்சிக்கு உதவும் வகையில் இந்து தர்மாசிரியர் பரீட்சையினை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 2005ஆம் ஆண்டு ஆரம்பித்தது. தற்போது இப்பரீட்சையை பரீட்சைத் திணைக்களம் நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஐந்து வினாத்தாள்களைக் கொண்ட இப்பரீட்சையில் இடம்பெறும் வேதங்களும் ஆகமங்களும் என்னும் வினாத்தாளுக்குரிய உசாத்துணை நூலாக இந்நூல் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றது.

இந்நூலில் இந்துமதப் பிரமாணங்களான வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள் என்பனவற்றைப் பற்றி விரிவாக விளக்கிக் கூறப்பெற்றுள்ளது. அதாவது வேதங்கள், அவற்றின் பிரிவுகள், வேதகாலச் சமூகம் என்பன பற்றியும் உபநிடதங்கள் பற்றியும் ஆகமங்களின் சிறப்பு, அவற்றின் பிரிவுகள், அவை கூறும் சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் நெறிமுறை பற்றியும் விரிவாக விளக்குவதாக அமைந்துள்ளமை சிறப்பானதாகும்.

இந்து அறநெறிப் பாடசாலை இறுதிநிலைப் பரீட்சையில் சித்தியடைந்தோர் அல்லது க.பொ.த (உ.த) பிரிவில் இந்து சமயம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களில் சித்திபெற்றவர்கள் அல்லது பாலபண்டிதர் பரீட்சையில் சித்திபெற்றவர்கள் மட்டுமே இத்தர்மாசிரியர் பரீட்சைக்குத் தோற்ற முடியும். வேதங்களும் ஆகமங்களும், சமய ஞானிகளும் சமயப் பெரியார்களும், சைவசமய வரலாறு, பன்னிரு -திருமுறைகள், கோயில்களும் கலைகளும் ஆகிய ஐந்து வினாத்தாள்களைக் கொண்டதாக இத்தேர்வு அமைந்துள்ளது. இவ் ஐந்து வினாத்தாள்களிலும் சித்திபெறும் பரீட்சார்த்திகள் "இந்து தர்மாசிரியர்" எனும் சான்றிதழினைப் பெறும் தகைமை உடையவராவர். இப்பரீட்சை தொடர்பான பாடத்திட்டத்தினை உருவாக்கி இந்நூற் தொகுப்பிற்கு ஆலோசனை வழங்கிய பேராசிரியர். சி. பத்மநாதன் அவர்களுக்கும், தொகுப்பிற்கு வழிகாட்டிய சைவப்புலவர். சு. செல்லத்துரை அவர்களுக்கும், கட்டுரைகளை வழங்கிய பேராசிரியர்களுக்கும் ஏனையோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலைத் தொகுத்து வெளியிடுவதில் எனக்கு உறுதுணையாக இருந்த அறநெறிப்பிரிவில் பணிபுரியும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றி உரியது.

இந்நூலினைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த தினக்குரல் பப்ளிக்கேஷன் (பிரைவேட்) லிமிட்டெட் நிவனத்தினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலைக் கற்று ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் சிறந்த பயனடைவார்கள் என நம்புகிறேன்.

**சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து தர்மாசிரியர் தேர்வு

இந்து தர்மாசிரியர் தேர்வானது 2005 ஆம் வருடம் முதல் ஒவ்வொரு வருட இறுதியிலும் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பெற்று வருகின்றது.

## பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வேண்டிய தகைமைகள்

அறநெறிப்பாடசாலை இறுதிநிலைப் பரீட்சையிற் சித்தி பெற்றவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகைமை பெறுவர். இவர்களோடு,

1. பண்டிதர் பட்டம் பெற்றவர்களும்,
2. சைவப்புலவர் பட்டம் பெற்றவர்களும்,
3. கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் இந்துசமயம், இந்து நாகரிகம் என்பவற்றுள் ஒன்றை ஒரு பாடமாகக் கொண்டு சித்தி பெற்றவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

பரீட்சைக்குத் தோற்றுவோர் பரீட்சைத் திணைக்களத்தினால் ஒவ்வொரு வருடமும் அனுப்பப்படும் விண்ணப்பப் படிவங்களைப் பிழையின்றிப் பூர்த்திசெய்து தம் அறநெறிப்பாடசாலைகளின் ஊடாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். குறித்த காலத்தில் விண்ணப்பப்படிவங்கள் தங்கள் அறநெறிப் பாடசாலைக்கு கிடைக்கத் தவறினால் மேற்குறித்த முகவரியில் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பப்படிவங்களின் அடிப்படையிலேயே தகைமையானவர்கள் தெரிவு செய்யப்பட்டுப் பரீட்சைக்குரிய அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். அனுமதிப்பத்திரமின்றி எவரும் பரீட்சைக்குத் தோற்றவியலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சை பற்றிய விபரங்கள்

இப்பரீட்சை, ஐந்து வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும். அவை ஒவ்வொன்றும் மூன்று மணித்தியாலங்களுக்கு உரியன. வினாப்பத்திரங்கள் மேல்வரும் பாடங்களைப் பற்றியனவாய் அமையும்.

1. வேதங்களும் ஆகமங்களும்
2. சமய ஞானிகளும் சமயப் பெரியார்களும்
3. சைவசமய வரலாறு
4. பன்னிரு திருமுறைகள்
5. கோயில்களும் கலைகளும்

ஒவ்வொரு பாடத்திலும் சித்தி பெறுவதற்குக் குறைந்தபட்சம் 40% புள்ளிகள் பெறவேண்டும்.

இப்பரீட்சையிற் சித்தி பெறுவதாயின் குறித்த ஐந்து பாடங்களிலும் சித்தி பெறவேண்டும். ஐந்து பாடங்களிலும் சித்தி பெறுபவர்களுக்கு "இந்து தர்மாசிரியர்" எனும் பட்டத்துக்குரிய சான்றிதழ் வழங்கப்படும்.

இவற்றுள் ஏதாவது ஒரு பாடத்தில் மாத்திரம் 25 புள்ளிகளுக்குக் குறையாமல் பெற்றிருந்தால் பரீட்சார்த்தி நூனசித்தி பெற்றவராகக் கருதப்படுவார். அவ்வாறு நூன சித்தி பெற்றவர், பரீட்சைப் பெறுபேறு வழங்கப்பட்டு, அடுத்துவரும் மூன்று வருடங்களுக்குள், நூனசித்திக்குரிய பாடத்திற் தோற்றி சித்தி பெறுவதன் மூலம் பட்டத்துக்குரிய சான்றிதழைப் பெறும் தகுதியினை அடையலாம். குறித்த மூன்றாண்டு காலப் பகுதிக்குள் நூனசித்திக்குரிய பாடத்திற் தோற்றி சித்தி பெறும் பரீட்சார்த்தி, பரீட்சைப் பெறுபேறு கிடைத்து மூன்று மாதங்களுக்குள், பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அது பற்றி அறிவித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடத்திட்டம்

ஒவ்வொரு வினாப்பத்திரமும் மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கும். முதலாம் பகுதியான முதலாம் வினா **கட்டாய வினாவாகும்**. இரண்டாம் பகுதியிற் கட்டமைப்பு வினாக்கள் இடம்பெறும். கட்டுரை வினாக்கள் மூன்றாம் பகுதியில் வரும். ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுத வேண்டும். விடையெழுதுவதற்குரிய ஐந்து வினாக்களில் ஒவ்வொன்றுக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்.

## வினாப்பத்திரம் 1 - வேதங்களும் ஆகமங்களும்

இந்து சமயத்துக்கு மூலாதாரங்களான வேதங்கள், ஆகமங்கள் என்பவற்றைப் பற்றியதாக இவ்வினாப்பத்திரம் அமையும். மேல்வரும் விடயங்கள் முக்கியமானவை.

- வேதங்களும் அவற்றின் பிரிவுகளும்: சங்கிதை, பிராமணம், ஆரண்யகம், உபநிஷதம்
- வேதங்கள் வர்ணிக்கும் தேவர்கள்
- வழிபாட்டு முறைகள்
- வேதங்களில் ஒழுக்கம், நீதி பற்றிய சிந்தனைகள்
- வேதகாலச் சமுதாயம்
- வேதங்களும் இந்து சமயக் கிரியைகளும் சடங்குகளும்
- உபநிடதச் சிந்தனைகள்: பிரம்மம், ஆத்மா, வினைப்பயன், மறுபிறப்பு
- வேதங்களும் வேதாந்த தரிசனங்களும்
- வேதங்களும் சைவசமயமும்
- ஆகமங்களின் கோட்பாடுகள்
- ஆகமங்களும் ஆலய வழிபாடும்
- ஆகமங்களும் சைவ சித்தாந்தமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாப்பத்திரம் 2 - சமய ஞானிகளும் சமயப் பெரியார்களும்

இந்து சமயத்தின் நெடுங்கால வரலாற்றிலுள்ள பல்வேறு கட்டங்களில் அதனை அபிவிருத்தி செய்வதிலும் மேன்மைப்படுத்துவதிலும் பங்கு கொண்ட ரிஷிகள், ஞானிகள், பாவலர்கள், தத்துவதரிசனிகள், சமய இயக்கங்களின் தலைவர்கள் முதலியோரைப் பற்றிய தெளிவான அறிவைப் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ளுமாறு செய்வதே இப்பாடத்தின் குறிக்கோளாகும். மேல்வரும் விடயங்கள் சிறப்பான கவனத்தைப் பெறும்.

- வேதகால ரிஷிகளும் முனிவர்களும்
- வியாசர், வான்மீகி
- ஆதிசங்கரர்
- இராமானுஜர்
- மத்துவார்ச்சாரியாரும் அவரது சிந்தனைகளும்
- ஸ்ரீ சைதன்யர், துளசிதாசர்
- இராமானந்தர், கபீர்தாஸர், மீராபாய்
- அருணகிரிநாதர், குமரகுருபரர், தாயுமானவர்
- ராஜாராம் மோகன்ராயும், பிரம்மசமாஜமும்
- சுவாமி தயானந்தரும் ஆரிய சமாஜமும்
- இராமகிருஷ்ண பரமஹம்ஸரும் அவரின் போதனைகளும்
- சுவாமி விவேகானந்தரும் இராமகிருஷ்ண இயக்கமும்
- ஆறுமுகநாவலரும் சுவாமி விபுலானந்தரும்
- சுவாமி சின்மயானந்தரும் சின்மயா இயக்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாப்பத்திரம் 3 - சைவ சமய வரலாறு

தென்னாசியா, தென்கிழக்காசியா என்பவற்றிலுள்ள சைவசமய வரலாறு பற்றிப் பரீட்சார்த்திகளிடமிருந்து ஒரு அறிவுபூர்வமான, தெளிவான விளக்கம் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்விரு பிராந்தியங்களிலுமுள்ள அரசியல், சமூக, பண்பாட்டு மாற்றங்களோடு தொடர்புபடுத்திச் சைவசமய வளர்ச்சியைப் படித்தல் வேண்டும். தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் ஏற்பட்ட சைவசமய வளர்ச்சிகள் விசேட கவனத்தைப்பெறும். இலக்கியம், சாசனங்கள், பண்பாட்டுச் சின்னங்கள் என்பவற்றின் அடிப்படையிலே சமய வளர்ச்சிகளை விளக்குதல் வேண்டும்.

**பாடவிதானத்தில் மேல்வரும் விடயங்கள் மிக முக்கியமான அம்சங்களாகும்.**

- வேதங்களிற் சைவம் பற்றிய விபரங்கள்
- இதிகாசங்களிற் சைவம் பற்றிய விபரங்கள்
- மகாபுராணங்களும் சைவசமயமும்
- சைவசமயம் பற்றிய சங்க இலக்கியக் குறிப்புகள்
- பல்லவர் காலத்துப் பக்தி இயக்கம்
- சோழர் காலத்து சமய வளர்ச்சி
- விஜயநகர காலத்து முருக வழிபாட்டு மறுமலர்ச்சி
- காஷ்மீர சைவம்
- வீரசைவம்
- சைவசித்தாந்த சாஸ்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆதீனங்களும், வித்துவம், சமயம், பண்பாடு ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கு அவை ஆற்றிய பணிகளும்.

- ஆறுமுக நாவலரும் சைவசமய மறுமலர்ச்சியும்.

- சுவாமி விபுலானந்தரும் இலங்கையில் இராமகிருஷ்ண இயக்கமும்.

- இலங்கையிற் சைவசமய நிறுவனங்கள்.

- காம்போஜ தேசம், இந்தோனீசியா, மலேசியா சிங்கப்பூர் ஆகியவற்றில் இந்துசமயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாப்பத்திரம் 4 - பன்னிரு திருமுறைகள்

இப்பாடத்திலே பன்னிரு திருமுறைகளில் விளக்கப்படும் சமய சிந்தனைகள், ஆன்மீக அனுபவங்கள், சமய தத்துவங்கள் என்பவற்றில் விசேட கவனம் செலுத்தப்படும். பண்ணிசையின் வளர்ச்சி, கோயில்கள், அவற்றின் இயற்கைச் சூழல், அவற்றின் சமுதாயப் பின்னணி என்பன பற்றிய தெளிவான விளக்கம் அவசியமானது.

**மேல்வரும் விடயங்கள் மிகுந்த கவனத்திற்குரியவை.**

- திருமுறைகளின் தொகுப்பும், அவற்றின் அடங்கல் முறையும்
- நாயன்மார் வரலாறு
- கடவுள், ஆன்மா, உலகம் பற்றிய கோட்பாடுகள்
- திருமுறைகளிற் கோயில்களும் ஆலய வழிபாடும்
- பக்தியும் முக்தியும்
- தேவாரப் பண்ணிசை
- முருக வழிபாடும் திருமுருகாற்றுப்படையும்
- சேக்கிழாரும் பெரியபுராணமும்
- திருமுறைகள் போற்றும் பெண்கள்
- திருமுறைகளின் அறநெறிக்கோட்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாப்பத்திரம் 5 - கோயில்களும் கலைகளும்

இப்பாடத்திலே கோயில்கள் தொடர்பான கட்டிடக்கலை, சிற்பக்கலை, நடனக்கலை, இசைக்கலை, ஓவியக்கலை, என்பனபற்றி விசேட கவனஞ் செலுத்தப்படும். பரீட்சார்த்திகள் இக்கலைகள் தொடர்பான சாஸ்திர நூல்களைப் பற்றியும் கோயிலமைப்புகள், பண்பாட்டுச் சின்னங்கள் என்பன பற்றியும் தெளிவான விளக்கம் பெற்றிருக்க வேண்டும். நாகரம், வேசரம், திராவிடம் என்னும் கலைப்பாணிகளைப் பற்றிய விளக்கம் அவசியமானது.

கோயில்களும் கலைகளும் என்னும் பாடம் பற்றிய வினாப்பத்திரம் மேல்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாய் அமையும்

1. (1) சிற்பசாஸ்திரம் (2) நாட்டிய சாஸ்திரம்
   (3) ஓவிய நூல் (4) இசை நூல்கள்
   (5) பண்பாட்டுச் சின்னங்கள்

## 2. கட்டடக் கலை

(1) கோயிலமைப்பின் பிரதான அம்சங்களும் அவற்றின் வளர்ச்சிகளும்
(2) பல்லவர் காலத்துக் கோயில்களும் சிற்பங்களும்
(3) சோழர் காலத்திற் திராவிட கலைப்பாணி
(4) விஜயநகர, நாயக்கர் காலத்துக் கோயில்கள்.

## 3. சிற்பக் கலை

(1) கடவுட் படிமங்கள்
(2) தேவகோட்டச் சிற்பங்கள்
(3) கதைகள் விளக்கும் சிற்பங்கள்
(4) துவாரபாலகர் சிற்பங்கள்
(5) மனிதரின் உருவச்சிற்பங்கள்
(6) சமய குரவரின் படிமங்கள்
(7) அலங்கார வேலைப்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. நடனக் கலை

(1) கர்நாடகம், கலிங்கம், தமிழகம் ஆகியவற்றில் வளர்ந்த நடனக்கலை பற்றிய இலக்கிய, சாசனக் குறிப்புகள்.

(2) பரதம், கதக்களி, கதக், யக்ஷகானம், குச்சுப்படி, ஒடிஸி, மணிப்புரி ஆகிய நாட்டிய மரபுகள்

(3) கோயில்களில் உபசாரமான நாட்டியமும் அறக்கட்டளைகளும்.

(4) கோயிற் சிற்பங்களும் நாட்டிய கரணங்களும்

(5) பரத நாட்டியத்தின் வரலாறும் நவீனகால வளர்ச்சிகளும்

## 5. ஓவியக் கலை

(1) ஓவியங்களும் கலைக்கோட்பாடுகளும்

(2) சமய வழிபாடுகளிலும் மரபுகளிலும் ஓவியங்கள் கொண்டுள்ள சிறப்புகள்

(3) அஜந்தா ஓவியங்கள்

(4) பல்லவர் கால, சோழர்கால ஓவியங்கள்

(5) விஜயநகர, நாயக்கர்கால ஓவியங்கள்

(6) சிற்றோவியங்கள், சுவரோவியங்கள்

(7) இராசபுத்திரரின் ஓவியங்கள்

## 6. இசைக்கலை

(1) தேவாரப் பண்ணிசை

(2) திருப்பதிகங்களும் ஆலய அறக்கட்டளைகளும்

(3) தஞ்சை நாயக்கர், மராட்டியர் உருவாக்கிய இசை மரபுகள்

(4) கர்நாடக சங்கீத மரபின் வளர்ச்சி, தியாகராஜர், முத்துஸ்சுவாமி தீட்ஷிதர், சியாமா சாஸ்திரிகள், சதாசிவ பிரம்மேந்திரர், சுவாதித் திருநாள் முதலியோர் மூலம் ஏற்பட்ட அபிவிருத்திகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. தர்மாசிரியர் பரீட்சை விளக்கம் | 01 - 09 |
| 2. வேதங்களின் உலகப் பொது நோக்கு | 11 - 20 |
| 3. வேதங்களின் பிரிவுகள் | 21 - 32 |
| 4. வேதகாலச் சமுதாயம் | 33 - 48 |
| 5. உபநிடதங்கள் | 49 - 71 |
| 6. சிவாகம மரபு - ஓர் அறிமுகம் | 72 - 94 |
| 7. சைவ ஆகமங்கள் - ஒரு நோக்கு | 95 - 109 |
| 8. ஆகமங்கள் | 110 - 121 |
| 9. ஆகமங்களைப் பற்றித் தோத்திர சாத்திரங்களிற் காணப்படும் கருத்துக்கள் | 122 - 125 |
| 10. வைணவ ஆகமங்கள் | 126 - 129 |
| 11. பின் இணைப்பு - மூலாகமங்களும் உபாகமங்களும் | 130 - 138 |
| 12. உசாத்துணை நூல்களின் பட்டியல் | 139 - 146 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதங்களின் உலகப் பொது நோக்கு

பேராசிரியர் - வி-சிவசாமி

இந்து சமய **முதனூல்களாக** வேதங்கள் விளங்குகின்றன. வேதம் எனில் மிகச் சிறந்த அறிவு எனப் பொருள்படும். இறைவனைப் பற்றி ரிஷிகள் கூறியுள்ள கருத்துக்களை உள்ளடக்கிய மிக உயர்ந்த ஞானத்தைக் கொண்டிருப்பதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றன. பல்வேறு காலப்பகுதிகளிலே ரிஷிகள் அல்லது ஞானிகள் கூறிய கருத்துக்களையே இவை கொண்டுள்ளன. இவை பழைய வடமொழியிலே ஏறத்தாழ கி. மு. 2000 தொடக்கம் கி.பி. 500 வரையுள்ள காலப்பகுதியிலே தோன்றியவை எனப் பொதுவாகக் கொள்ளப்படுகின்றன. இக்கால வரையறைக்கு முன்பும், பின்பும் உள்ள சில நூற்றாண்டுகளிலும் இவற்றின் சில பகுதிகள் எழுந்திருக்கலாம். எனினும் இவற்றின் காலத்தைத் திட்டவட்டமாக வரையறை செய்ய முடியாதெனவும், அறிஞர்களில் ஒரு சாரார் கருதுவர். இவை செய்யுள் வடிவிலும், வசன வடிவிலும், அமைந்துள்ளன. இவற்றிலே நான்கு வேதங்களும் அவற்றின் சார்பு நூல்களான பிராமணங்கள், ஆரண்யகங்கள், உபநிஷதங்கள், சூத்திரங்கள் ஆகியனவும் அடங்குவன. மனிதர்கள் அன்றி இறைவன் இவற்றை அருளினார் எனக்கருதப்படுவதால் இவை **அபௌருஷேய** எனவும், இறைவனைத் தத்தம் அகக்கண்களிலே கண்டவற்றை அல்லது இயற்கையிலே கேட்டவற்றை ரிஷிகள் இயற்றியதாலும், செவிவழி மரபிலே பேணப்பட்டு வந்தமையாலும் இவை **சுருதி** எனவும் அழைக்கப்படுவன. எவ்வாறாயினும் இவற்றை இலக்கிய நூல்களாக நோக்கும் போது சமகால அரசியல், சமூக, சமய, பொருளாதார, பண்பாட்டு நிலைகளையும் இவை ஓரளவாவது பிரதிபலிப்பன.

சமய தத்துவ ரீதியிலே நோக்கும் போது ஏற்கனவே குறிப்பிட்டவாறு இவை காலத்தால் முந்திய இந்து சமய மூலநூல்களாக இந்தியாவிலே பிற்காலத்திலே மலர்ச்சி பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவிந்தர் போன்ற ஞானிகள் வேதங்களுக்கு ஆன்மீகக் குறியீட்டு ரீதியிலே விளக்கமளித்துள்ளனர். வேறு சிலர் மானிடவியல், சமூகவியல், ஒப்பீட்டு மொழியியல் எனப் பல கோணங்களிலிருந்தும் விளக்கங்கள் அளித்து உள்ளனர். சமய நூலாயினும் உலகியல் பற்றிய நூலாயினும், எந்த ஒரு நூலும் கூறும் கருத்துக்கள் பொதுவாகச் சமகாலத்திற்குப் பொருத்தமாகக் காணப்படுவன. அவற்றுட் சில கருத்துக்களாவது பிற்காலத்திற்கும் பொருத்தமானவை ஆகவும் அமைந்திருக்கலாம். இவை குறிப்பிட்ட மக்கட் கூட்டத்திற்கு மட்டுமன்றி எல்லா மக்களையும் சிலவேளை சகல உயிரினங்களையும் கருத்திற் கொண்டுள்ளனவாகவும் காணப்படும். சில நூல்கள் கூறும் கருத்துக்கள் அனைவருக்குமாயிருப்பினும் பின்வந்தவர்கள் தத்தம் சமூகங்களுக்கு மட்டுமே உரியன எனத்தவறாகவும் புரிந்து கொண்டுள்ளனர். இந்து சமய வேதங்களுக்கும் இத்தகைய நிலை பிற்காலத்திலேற்பட்டுள்ளது. ஆனால் குறிப்பாக கி.பி. 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் இந்து சமயத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் விளைவாகச் சிறப்பாக சுவாமி தயானந்தர், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், சுவாமி சித்பவானந்தர் போன்ற ஞானிகள் வேதங்கள் குறிப்பிட்ட சமூகத்தவர்களுக்கு மட்டும் உரியன என்ற கருத்தினை நிராகரித்து, அவை அனைவருக்கும் உரியன என்ற கருத்தினை மீண்டும் முன் வைத்து உள்ளனர். புனித நூல்கள் என்ற வகையிலே வேதங்கள் அனைத்து மக்களுக்குமுரியன என்ற கருத்தினை வலியுறுத்தினர். அதே வேளையில் இந்தியாவிலேற்பட்ட மேலைத்தேசத் தொடர்புகள், குறிப்பாகப் பிரித்தானியரின் ஆட்சித் தொடர்புகளாலே மேலைத்தேச அறிஞர்களில் ஒரு சிலர் வேதங்களை நன்கு கற்றதுமட்டுமன்றி அவற்றை முழுமையாகவோ அன்றி அவற்றுட் சில பகுதிகளையோ தத்தம் மொழிகளிலே குறிப்பாக ஆங்கிலம், ஜேர்மானியம் போன்ற மொழிகளிலே மொழி பெயர்த்தனர். தத்தம் நோக்கிலே இவைபற்றி ஆராய்ச்சிகளும் மேற்கொண்டனர், மேற்கொண்டு வருகின்றனர்.

நீண்டகாலமாக நிலவிவரும் இந்து சமூக மரபிலே இந்து சமூகத்தைச்சேர்ந்த பிராமணர், க்ஷத்திரியர், வைஷ்யர், சூத்திரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் நான்கு பிரிவினர்களில் (வருணத்தவர்களில்) முதல் மூன்று வகுப்பினர்களுமே -துவிஜர்- இருபிறப்பாளர் (தாயின் கர்ப்பத்திலே உருவாகிப் பிறக்கும் இயற்கையான பிறப்பு ஒன்று, உபநயனம் அல்லது பூணூற் சடங்கின் போது ஏற்படும் ஆன்மிகப் பிறப்பு மற்றதாகும்) மட்டுமே வேதங்களைக் கற்கத் தகைமை வாய்ந்தவர் எனவும் சூத்திரர்கள் இவற்றைக் கற்பதற்கு அருகதையற்றவர் எனவும் கருதப்பட்டு வந்தது. முதல் மூன்று வருணத்தினருள்ளும் உபநயனம் செய்யாதவர்கள் வேதங்களைக் கற்க அருகதை அற்றவர்கள்; அவர்களுக்கும் சூத்திரர்களுக்குமிடையில் அதிக வேறுபாடு இல்லை எனவும் கொள்ளப்பட்டது. ஆனால் வேத இலக்கியத்தை ஓரளவாவது உற்று நோக்கும்போது, வேதங்கள் அனைவருக்கும் உரியன என்பது பெருமளவு புலனாகும். ஆர்வமுடையோர் இவற்றைக் கற்பதற்கோ அல்லது இவை பற்றி அறிவதற்கோ தடைகள் இருந்தமைக்கு அகச்சான்றுகள் அதிகம் இருப்பதாகத் தெரியவில்லை. இது பற்றி நோக்கும் போது ஒரு வரலாற்று உண்மையினையும் மனத்திற்கொள்ள வேண்டும். அதாவது வேதங்கள் ஒரு குறிப்பிட்ட ரிஷியினால், குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட இடத்தில் இயற்றப்பட்டன அல்ல. மாறாகப் பல ரிஷிகள், பல கால கட்டங்களில், பல இடங்களில் இயற்றியனவற்றின் தொகுப்பாகும். இதனாலே ஒரேவிதமான கருத்துக்கள் எல்லாவற்றிலும் இடம்பெறா. எனவே காலத்திற்கேற்றவாறு எவை பொருத்தமான கருத்துக்களோ அவற்றையே முதன்மைப்படுத்தல் அவசியமாகும். இச்சிறு கட்டுரையிலே வேதங்கள் அனைத்துயிர்களுக்கும், குறிப்பாக மனிதர்களுக்கும் பொதுவானவை என்பதும், இவற்றிலுள்ள சில குறிப்பிட்ட கருத்துக்கள் இக்காலத்திற்கும் வரும் காலத்திற்கும் பொருத்தமானவை என்பதும் சுருக்கமாகச் சுட்டிக் காட்டப்படும்.

இறைவன் அனைத்து மக்களுக்கும் உரியவன் என்ற கருத்து இந்து சமயத்திலுள்ள அனைத்துப் பிரிவுகளிலும் பொதுவாகக் காணப்படுகின்றது. “இந்த நல்ல வார்த்தைகளை எல்லா மக்களுக்கும் பிராமணர், க்ஷத்திரியர், வைஷ்யர், சூத்திரர் ஆகியோருக்கும் எம்முடைய ஜனங்களுக்கும், வெளியே உள்ளவர்களுக்கும்



3 – CM 014072

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(யதேமாம் வாசம் கல்யாணீம், ஆவதானி ஜனேப்யஹ ப்ரஹ்மரா ஜந்யாப்யாம் சூத்ராய சார்யாய சஸ்வாய சாரணாய ச) கூறுவேன் என யஜுர் வேதம் (26.2) குறிப்பிடுகின்றது. "எங்களுடைய தேசத்திற்குரியவராக (சந்தேஸ்ய) மட்டுமன்றி, பிற நாட்டவர்க்குரியவராகவும் (விதேஸ்ய) இறைவன் இலங்குகிறான்" என அதர்வவேதம் (4.16.8) கூறுகின்றது. மேலும் "விண்ணுக்குத் தலைவனான கடவுளிடத்து மனவலுவுடன் அனைவரும் வருவீர்களாக" (ஸமேத விஸ்வா ஓஜஸா பதிம்) "மக்களுடைய அதிதியாக விளங்கும் ஒரேயொருவர் இவரே" (ய ஏக இத்பூர் அதிதிர்), "பழையவரான இவர் புதிய இடத்திற்கு வரவிரும்புகிறார். எல்லா வழிகளும் இவரை நோக்கியே உள்ளன. இவர் ஒருவரே. (ஸபூர்வ்யோ நூதனம ஆஜிகீசன், தம்வர்தனீம் அநுவாவ்ருத ஏக இத்) எனச் சாமவேதமும் (372), இந்திரனே தேவரீர் அனைவருக்கும் பொதுவானவர் (இந்த்ர ஸ்தாரணஸ்த்வம் - (இ.வே8.65.7) எனவும் "அனைவருக்கும் பொதுவான இந்திரனை நாம் கூவி அழைக்கிறோம்" (சமாந்தம் இந்த்ரம் அவஸே ஹவாமஹே) என இருக்கு வேதமும், அதுவே "இறைவன் அனைவருக்கும் பொதுவானவன்; அவன் ஒருவனே" என்பதையும் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கின்றமை ஈண்டு கவனித்தற்பாலது.

அதர்வ வேதத்திலுள்ள பூமிசூக்தம் (பாடல்) பூமியின் பலசிறப்புகளை வருணிப்பதுடன் உலகிலே பல்வேறு சமய ஆசாரங்களுடன் (தர்மானி) பலமொழிகளைப் பேசும் மக்கள் வாழுகின்றனர் எனவும் குறிப்பிடுகிறது. எனவே அது எழுந்த காலத்திலும் பல திறப்பட்ட மக்கள் வாழ்ந்தமை புலப்படும். இவர்கள் அனைவருக்கும் வேதங்கள் பொதுவானவை.

வேதங்களிலே குறிப்பாக இருக்குவேதத்திலே ஆரிய(ர்), தாச(ர்) ஆகியோருக்கிடையிலே கொடிய போர்கள் நிகழ்ந்து வந்தமை குறிப்பிடப்படுகின்றது. இப்போர்கள் ஆரியப் பண்பாட்டைச் சேர்ந்தோருக்கும் அப்பண்பாட்டைச் சேராதவர்களான தாசர்களுக்கும், (பூர்வீகக் குடிகளுக்கும்) இடையிலே நடைபெற்றவையென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றாசிரியர் பலர் கருதுகின்றனர். இங்கு இன ரீதியிலன்றி இருவேறு பண்பாடுகளைச் சேர்ந்தோருக்கிடையில் நடந்தவையே இப்போர்கள் எனவும் கருதப்படுகின்றன. இதைவிட என்றும் உலகில் நடைபெற்றுவரும் நன்மை தீமை, அறிவு-அறியாமைக் கிடையிலான போராட்டங்களே இவை என ஒருசாரார் இவற்றிற்குக் குறியீடான விளக்கம் கூறுவர்.

எவ்வாறாயினும் இருக்கு வேதத்திலே (8.51.9) "ஆரியருக்கும் தாசருக்குமுரியவராகவே மகிமையுள்ள இறைவன் விளங்குகிறார் (யஸ்யாயம் விஷ்வ ஆர்யோ தாஸஹ ஸேவாதிபஹ அரிஹி") எனவரும் குறிப்பு மூலம் தெய்வம் இருசாராருக்கும் உரியது: பொதுவானது என்பது ஈண்டு புலப்படுகின்றது. மேலும் தம்மவர்க்கும் வெளியூரைச் சேர்ந்த ஒருவருக்கும் எதிராகச் செய்த பாவங்களை மன்னிப்பதற்காக ஒருவர் வருண பகவானிடம் கூறும் பிரார்த்தனை ஒன்று இருக்கு வேதத்தில் (5.85.7) உள்ளது. அதாவது "வருணபகவானே! எம்மோடு உள்ளவர்களுக்கும் எங்களை விரும்புபவன், நண்பன், சகாயன், சகோதரன், அயலவன் ஆகியோருக்கும், வெளிநாட்டவனுக்கும் எதிராகச் செய்த பாவங்களை மன்னித்து விடுவிப்பீராக" என்பதாகும். இங்கும் தமர் பிறர் என்ற வேறுபாடு இல்லை.

மனித உறவுகளிலே வேற்றுமையில் ஒற்றுமை காணப்படுகின்றது. இக்கருத்து ஏனைய உயிர் வர்க்கங்களையும் (ஸ்ர்வானிபூதானி) உள்ளடக்கியதாக யஜுர்வேதத்திலே (36.18) கூறப்படுகின்றது. இதைத் தொடர்ந்து உலகளாவிய ரீதியிலே - பிரபஞ்ச ரீதியிலே எங்கும் நிலவுதற்கான சாந்தி - அமைதி பற்றியும் கூறப்படுகின்றது. வேதகால ரிஷிகள், மக்கள் வணங்கிய அனைத்துத் தெய்வங்களையும் பொதுவாக ஏற்று அவர்களை ஒன்றுபடுத்தி அனைத்தும் (எல்லாத் தெய்வங்களும்) ஒரே தெய்வத்தின் பல்விதமான வெளிப்பாடுகள் எனக் கருதினர். இதனால் ஒரு தெய்வத்தினை மற்றொரு தெய்வத்தின் வெளிப் பாடாகவோ ஏனைய தெய்வங்களின் வெளிப்பாடாகவோ அடையாளம் காணமுடியும். எடுத்துக் காட்டாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கினி பகவானே! வீரர்களின் வீரனான இந்திரனாக தேவரீர் இலங்குகின்றீர். போற்றத் தக்கவரும் வலுவாகத் திருப்பாதத்தை எடுத்து வைப்பவருமான விஷ்ணுவாகவும் விளங்குகிறீர் (இ.வே.2.1) எனத் தொடர்ந்து கூறப்படுவனவும், "உண்மைப் பொருள் ஒன்றே, ஞானிகள் அதனைப் பலவாறு கூறுகின்றனர் (ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி) இ.வே.1.164.46" எனக்கூறப்படுவதும் காண்க. இவை போன்ற கருத்துக்கள் பொதிந்துள்ள பிறவற்றையும் வேதங்களிலே காணலாம். உபநிஷதங்களில் இக்கருத்து "பரம்பொருள் இரண்டன்றி ஒன்றே (ஏகமேவாத்துவிதீயம்)" எனச் சாந்தோக்ய உபநிஷதம் போன்றவற்றிலே வருகின்றது. இறைவன் ஒருவனே என்பது வேதங்களிலே நன்கு விளக்கப்படுகின்றது.

மனிதனோடு மனிதன் மட்டுமன்றி, எல்லா உயிர் வர்க்கங்களுக்கிடையிலும் தோழமை நிலவ வேண்டுமென்ற கருத்து "எல்லா உயிரினங்களும் என்னை நட்புக் கண்ணுடன் நோக்குவனவாக, எல்லா உயிரினங்களையும் நான் நட்புநிலையில் நோக்குவேனாக. நாங்கள் அனைவரும் நண்பர்போல ஒருவரையொருவர் நோக்குவோமாக" என யஜுர்வேதத்திலே (32.8) கூறப்பட்டிருப்பது உற்றுநோக்கற்பாலது. 'வேன' (அன்புள்ளவன்) எனும் ஞானி இதே பகுதியிலே உண்மைப் பொருளிலே (ஸத்-பரம் பொருள்) தான் பிரபஞ்சமனைத்தும் அடங்கி உள்ளதெனக் கூறியுள்ளார்.

வேள்வியைச் செய்வோர் ஆன்மீக ரீதியிலும் தகுதியுள்ளவராக இருக்கவேண்டும். அவர்கள் என்றும் உலக ஒழுங்கின்படி (ரிதம்) வாழ்க்கையை நடத்துவோராகவும். உலக ஒழுங்கு பற்றிக் கூறுவோராகவும் உண்மையைப் பேசுவோராகவும் செயல்களில் உண்மையுள்ளவராகவும் இருக்கவேண்டும் என இருக்கு வேதம் (9.113.114) கூறுகின்றது. கிரியையில்லாத பிரார்த்தனைக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதை இருக்குவேதம் (4258) "பலத்தினை விரும்பிய மக்கள் அனைவரும் இந்திரனைப் பிரார்த்திக்கின்றனர்" எனக் கூறியிருப்பது கவனித்தற் பாலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்களில் உண்மைக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலை தொடர்ந்து நிலவி வந்துள்ளது. இறைவன் உண்மையைத் தன் வடிவமாகக் கொண்டுள்ளான் என்பது "ஸவிதா ஸத்யதா்ம", என அதர்வவேதம் கூறுவதிலிருந்து அறியலாம். மேலும் "ஆத்மாவை (பரம் பொருளை) உண்மை மூலமே பெறவேண்டும் (ஸத்யேன லப்யஹு)" எனவும் "பொய்யன்றி உண்மையே வெல்லும் (ஸத்யமேவ ஜயதே நாநிருதம்)" எனவும் முண்டகோபநிஷத் (3.1.5.6) கூறுகின்றது.

"அஸத்திலிருந்து என்னை ஸத்திற்குக் கொண்டு செல்வீராக. இருளிலிருந்து ஒளிக்குக் கொண்டுசெல்வீராக' மரணத்திலிருந்து அழியா நிலைக்குக் கொண்டு செல்வீராக. (அஸதோ மாஸத்கமய, தமஸோமா ஜ்யோதிர் கமய, மிருத்யோர் மாமிருதம் கமய)" எனும் உபநிஷத் பிரார்த்தனை சில உயர்ந்த இலட்சியங்களைச் சுட்டிக் காட்டுவது தெளிவாகும்.

மேலும் "ஒருவர் தனக்காக மட்டும் வாழக் கூடாது. தனியே உண்பவன் பாவம் செய்கிறான்" (இ.வே.10.117.6) எனவும். முயற்சித்துக் களைத்தவர்களையன்றி மற்றவர்களைத் தேவர்கள் நண்பர்களெனக் கருதமாட்டார்." (இ.வே. 4.33.1) எனவும் இருக்கு வேதத்திலே வரும் கருத்துக்கள் நன்கு குறிப்பிடத்தக்கவையே.

வேதங்கள் வாழ்க்கையை யதார்த்தமாகவே கூறுகின்றன. பூமியின் சிறப்புகள், வளங்கள் முதலியன பற்றிய குறிப்புகள் அதர்வவேதத்திலும் (12) காணப்படுகின்றன. இந்தப் பூமி மிகவும் விரும்பத்தக்கது எனவும் "இங்கு நூறாண்டுகள் வாழவேண்டும்" எனவும் வேதங்களிலே அழுத்திக் கூறப்படுகின்றன. இருக்கு வேதம் முதலாம் பாடலிலே (இ.வே.1.1) "ஒருவன் அக்கினி மூலம் செல்வத்தையும், செழிப்பையும், புகழையும், வீர மைந்தர்களையும் பெறுவானாக" எனக் கூறப்பட்டிருப்பது உலகியல் நோக்கிலானதாகும்.

இறைவனுடைய திருவருள் பெற்ற எவனும் பிராமணன் (ஆத்மீக அறிஞன்), ரிஷி, மேதை ஆகலாம் என்பது வாக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம் பற்றிய பாடல் (இ.வே.10.125.5) மூலம் புலனாகும்.

நல்ல அறிவு வள்ர்ந்து வருவதையும், அதனை எப்பக்கங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற யதார்த்தமான கருத்தினையும் வேதகால ரிஷிகள் நன்கு உணர்ந்து போற்றினர். "எங்களுக்கு நல்ல கருத்துக்கள் எப் பக்கங்களிலிருந்தும் வருவதாக (ஆநோபத்ராஹ ருதவோ யந்து ஸர்வதஹ (இ.வே.1.891) என வருவதிலே மேற்குறிப்பிட்ட கருத்துத் தெளிவாகின்றது.

இறைவன் பாதுகாவலன், தாய், தந்தை, நண்பன், குரு முதலிய பலவாறான ப்ாவனைகளிலே வேதங்களிலே போற்றப்படுகிறான். வேதங்களிலுள்ள பல மந்திரங்களிலே காயத்திரி மந்திரம் நன்கு குறிப்பிடற்பாலது. இது காலைச் சூரியனாகிய சவித்ரு தெய்வம் பற்றியதாகும் "பூமி, வானம், உயர்ந்த விண்ணுலகம் ஆகியனவற்றிலுள்ள சவித்ரு தெய்வத்தின் போற்றத்தக்க சிறப்பினைத் தியானிக்கிறேன். அவர் எமது அறிவாற்றலை (நுண்ணறிவை)த் தூண்டுவாராக! (ஓம் பூர்புவர்ஸ்வர் தத் சவித்திருவரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோ நஹ ப்ரசோதயாத்)" எனவரும் இம் மந்திரம் (இ.வே.3.62.3 சா.வே.36:3) உற்று நோக்கற்பாலது. மனிதனுக்கு அறிவாற்றல் மிக முக்கியமானதே. அதுவும் காலையிலே செவ்வனே தூண்டப்பெற்றால் வாழ்க்கை சிறப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை. இம் மந்திரத்திலே பொதிந்த கருத்து எக்காலத்திற்கும், எச்சமயத்திற்கும் பொதுவானதாக அமைந்துள்ளது. சவித்ரு எனும் பதம் ஊக்குவிப்பவர், தூண்டுபவர் எனப் பொருள்படும். காலைச்சூரியனே பொதுவான எல்லா உயிரினங்களும் விழித்தெழுந்து தத்தம் செயற்பாடுகளில் ஈடுபடச் செய்கிறான், எனவே இவ்வாறு அழைக்கப்படுகிறான். கோடிக்கணக்கான இந்துக்கள் இன்றும் இதனை நாடோறும் பக்தியுடன் தியானித்து வருகின்றனர். இதன் மகத்துவத்தினையும், இதனை யாவரும் தியானிக்கலாம் என்பதையும் சமீபகாலத்திலே சுவாமி சித்பவானந்தர், பகவான் சத்யசாயிபோன்ற ஞானிகள் தெளிவாகக் கூறியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைந்து கொண்டிருக்கும் உலகம் அடங்கலும் பரம்பொருள்-இறைவன் நிறைந்திருக்கின்றமையும், எனவே ஒருவர் பற்றின்றி(உலக) இன்பங்களைத் துய்க்க வேண்டும் என்பதும், மற்றவர்களுடைய செல்வத்தினை விரும்பக் கூடாது எனவும் (இவ்வாறாகிய நிலையில்) தனக்குரிய செயற்பாடுகளைச் செய்து கொண்டு நூறாண்டுகள் வாழ வேண்டுமெனவும், இவ்வாறு அவன் செய்வதால் செயல்களிலே பற்றிருக்காது எனவும் கூறப்படும் அறிவுரை யஜுர் வேதத்தின் இறுதியிலுள்ள ஈசாவாஸ்ய உபநிஷதத்திலே காணப்படுகின்றது. சுதந்திர இந்தியாவின் தந்தையெனப் போற்றப்படும் காந்தியடிகளைக் கவர்ந்தவற்றில் மேற்குறிப்பிட்ட பகுதியுமொன்றாகும். இறைவன் எங்கும் நிறைந்திருப்பதால் அனைத்தும் அவருக்கே உரியன. எனவே ஒருவன் பற்றின்றி, மற்றவர்களின் செல்வத்தை விரும்பாது தான் செய்ய வேண்டியவற்றைச் செய்துகொண்டு நிம்மதியாக நூறாண்டுகள் (பல ஆண்டுகள்) உயிர் வாழலாம். பின்னர் வீடு பேற்றினை அடையலாமென்பதும் தொனிப்பாக உள்ளது. உலக துன்பங்களுக்குக் காரணம் ஆசைதான் எனப் புத்தபெருமானும் கூறியிருப்பது ஈண்டு ஒப்பிடற்பாலது.

யஜுர்வேதத்தில் அக்கினி பற்றிய பாடல் (ய.வே.18.48) " தெய்வீகத் தன்மையுடைய எங்களுடைய பிராமணர்களுக்கும், எங்களுடைய க்ஷத்திரியர்களுக்கும், வைஷ்யர்களுக்கும், சூத்திரர்களுக்கும் தெய்வீக ஒளியைத் தருவீராக" என அத்தெய்வத்தை விளித்துக் கூறும் பாங்கு உற்று நோக்கற்பாலது. இங்கும் எல்லோருக்குமே தெய்வீக ஒளி அல்லது ஞானப்பிரகாசம் வேண்டப்படுகின்றது.

எனவே வேதகால ரிஷிகளும், ஞானிகளும் கூறியுள்ள கருத்துக்கள் பெருமளவில் அனைத்து மக்களுக்கும் உரியன என்பதும், இவற்றுட் குறிப்பிடத்தக்கவை இக்காலத்திற்கும் வருங்காலத்திற்கும் பொருத்தமானவை என்பதும் புலப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை**

**மூல நூல்கள்**

01. வேதங்கள்
02. உபநிடதங்கள்

**பிறநூல்கள்**


01. Bose, A.C. — The Call of the Vedas, Bombay, 1960

02. Majumdar R.C.(ed.) — The Vedic Age, London, 1951.

03. Winternitz M., — History, Vol.I, Calcutta, 1921

04. சிவசாமி வி. — ஆரியர் - ஆதிவரலாறும் பண்பாடும், யாழ்ப்பாணம், 1976

05. சித்பவானந்தர், — ஸ்ரீமத் சுவாமி, காயத்திரி, திருப்பராய்த்துறை, 1993




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதங்களின் பிரிவுகள்

பேராசிரியர் சி. பத்மநாதன்

சமயங்கள் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறான ஆதார நூல்கள் உண்டு. பௌத்தசமயம் திரிபீடகத்தை ஆதாரமாகக் கொண்டது. அது புத்தர் பெருமானின் வசனங்கள் அடங்கிய பெரும் திரட்டாகும். கிருஸ்தவ சமயம் யேசுநாதரின் போதனைகள் அடங்கிய விவிலிய நூலை ஆதாரமாகக் கொண்டது. இஸ்லாமிய சமயம் திருக்குறான் என்பதை அடிப்படையாகக் கொண்டது. அது முகமது நபிகளின் உபதேசங்கள் அடங்கிய நூல். இந்து சமயத்தைப் பொறுத்தவரையில் அதற்கு அடிப்படை நூல்கள் பலவாகும். அவற்றிலே வேதம் முதன்மையானது. மிகவும் பழமையானது. உலகிலே வழங்குகின்ற இலக்கியங்கள் யாவற்றிலும் மிகவும் பழமையானது அதுவே.

இந்து சமுதாயம் முதல் நூல்களாகக் கொள்கின்ற ஏனைய நூல்கள் வேதத்தை மூலமாகக் கொண்டவை. அவை அதன் வழி வந்தவை. வேதத்தினை மறை நூல் என்று சொல்வர். அது சுருதி அல்லது எழுதாமறை என வழங்கும். நெடுங்காலமாக எழுத்து வடிவம் பெறாது வாய் மொழி மூலமாக வழங்கி வேதம் பேணப்பட்டு வந்தது. இலக்கிய வரலாற்றில், மிகப் பரந்த, பல துறைசார்ந்த பேரிலக்கியத்தை எழுத்து வடிவம் கொடாது, வாய்மொழி மூலமாக எதுவித மாற்றமும் இன்றிப் பேணிக்காத்தமை ஒரு அபூர்வ சாதனை ஆகும். சொற்களின் பதங்கள் திரிபுடையாதும், உச்சரிப்புக்கள் சீரழியாதும் நிலை பெறும் வண்ணம் பாதுகாப்பதற்கு மரபு வழியான யுக்திகள் இருந்தன. இந்த யுக்திகளே ஆறு அங்கங்கள் விருத்தி பெறுவதற்கு ஏதுவாக இருந்தன.

வேதங்களைப் பற்றி வைதீக மரபில் சில கதைகள் உண்டு. வேதங்கள் இறைவனால் திருவாய் மொழிந்தருளப்பட்டவை என்பது மரபுவழிக் கதை. "வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறிப் பூதம் சூழப் பொலிய வருவார்" என்பது சிவபெருமானைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய தேவாரத் திருவாக்கு. இறைவனை "வேத நாயகன்" என்பார் நாவுக்கரசர். அதேபோல மணிவாசகர் "வேதமும் வேள்வியும் ஆயினார்" என்று சிவபெருமானைப் போற்றுவார். சைவ சமயத்தைப் போல இந்து சமயத்தில் உள்ள ஏனைய சமய நெறிகளும் வேதங்களை மூல நூல்களாகக் கொள்கின்றன.

வேத வரிசையில் அடங்கிய இலக்கியங்கள் எல்லாம் கி.மு. 1300 - 600 கி.மு ஆகிய காலத்துக்கு உரியவை என்பது நவீனகால அறிஞர்களின் கருத்தாகும். இந்து சமய தத்துவ சிந்தனையில் வேதம் என்ற சொல் சிறப்பாக உபநிடதங்களையே குறிக்கும். சமய தத்துவ வளர்ச்சியில் உபநிடதங்களே வேதத்தின் மிக முக்கியமான பகுதியாகும். பிரஸ்தான திரயங்களில் ஒன்றாக உபநிடதங்கள் கொள்ளப்படுகின்றன. உபநிடதங்கள் வேதசாரமானவை என்ற கருத்து உண்டு. வேத கால சமய நெறி காலப்போக்கில் பெருமளவிற்கு மாற்றமடைந்துள்ள போதும் இந்துக்களின் சமய வழிபாடுகளில் வேதங்களுக்கு ஒரு சிறப்பிடம் உண்டு. ஆலயங்களுக்கு ஆதாரமான ஆகமநெறி, வேதநெறி சார்ந்ததாகும். ஆலயங்களிலும் பொது இடங்களிலும் நடைபெறுகின்ற விழாக்கள், உற்சவங்கள் என்பவற்றிலே உச்சாடணம் செய்யும் மந்திரங்களில் பல வேத மந்திரங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கலியாணச்சடங்கு போன்ற சமுதாய சடங்குகளிலும் அவை இடம்பெறுகின்றன. ஏதோ வகையில் இன்னும் இந்துக்களுடைய வாழிபாட்டிலும் வாழ்வியலிலும் வேதங்களின் செல்வாக்குத் தொடர்கின்றது.

வேதங்களை ஆதாரமாகக் கொள்ளுகின்ற எல்லாச் சமயங்களையும் இந்து சமயம் என்று குறிப்படுவது வழக்கம். வேதம் என்பது அறிவு என்று பொருள்படும். இந்துமரபில் அது பரஞானம் பற்றிய அறிவுக் களஞ்சியமான நான்கு வேதங்களைக் குறிக்கும். வேதங்கள் நான்கு வகையானவை. இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம், அதர்வண வேதம் என்பவை நான்கு வேதங்கள். இவை ஒவ்வொன்றும் சங்கிதை, பிராமணம், ஆரணியம், உபநிடதம் எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு பிரிவுகளைக் கொண்டவை. இவற்றைச் சுருதி என்று சொல்வர். முன்கண்டவாறு வாய்மொழியாக அவை பேணப்பட்டு வந்தமையால் அவ்வாறு சொல்லப்படும். வேதங்களுக்கு உரை எழுதிய சாயன ஆச்சாரியார் வேதத்தினை அலௌகிக உபாயம் என்று வர்ணிப்பார். உலகியலுக்கு அப்பாலான மறைஞானம் தொடர்பான அறிவு என்பதனால் அவர் அவ்வாறு கொள்வார். பெறுவதற்கு அரிதாகிய நிலையினை அடைவதற்கும் வேண்டப்படாதனவற்றைத் தவிர்ப்பதற்கும் ஏதுவான வேதம் என்றும் அவர் கொள்வார்.

விஷ்ணுபுராணத்திலே வேதங்களைப் பற்றிய ஒரு கதையுண்டு. அது ஆதியிலே வேதம் இறைவனால் ரிஷிகளுக்கு ஓதப்பட்டது. அதிலே ஒரு லட்சம் அல்லது நூறு ஆயிரம் பாடல்களும் நான்கு பிரிவுகளும் இருந்தன. காலப்போக்கில் அவை வேறுபாடற்றுக் கலப்புற்றன. பல பகுதிகள் தெளிவற்று வழக்கொழிந்துவிட்டன. அதனால் துவாபரயுகத்திலே கிருஷ்ண வைசம்பாயனரால் நால் வேதங்களாக அவை மீண்டும் உருப்பெற்றன. நான்கு வேதங்கள் என்ற பாகுபாடு அவரால் உருவாக்கப்பட்டது. வேதங்கள் அழியாது நிலை பெறும் வண்ணமாக அவற்றில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு மகரிஷிகளிடத்தில் ஒப்படைத்தார். இருக்கு வேதத்தைப் பைலரிடமும், யசுர் வேதத்தை வைசம்பாயனரிடமும், சாம வேதத்தை ஜைமினியிடத்தும், அதர்வ வேதத்தைச் சுமந்த முனிவரிடத்தும் ஒப்படைத்தார். வேதங்களை மீண்டும் வகைப்படுத்தியதால் கிருஷ்ணவைசம்பாயனருக்கு வேதவியாசர் எனும் பெயர் உண்டாகியது. மிகப் பழங்காலத்தில் வேதங்கள் மூன்று என்பது மரபு. எனவே *திரையீவித்யா* என வேதங்களை அழைத்தனர். கௌடல்ய அர்த்தசாத்திரத்திலும் அரசர்களும் மந்திரிமார்களும் மூன்று வேதங்களிலும் பயிற்சி உடையவர்களாக இருத்தல் வேண்டும் என்று சொல்லப்படுகின்றது. அதர்வ வேதம் காலப் போக்கில் நான்காவது வேதமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேத இலக்கிய வரிசை

வேதம் ஒவ்வொன்றிலும் சம்ஹிதை, பிராமணம், ஆரணியகம், உபநிடதம் என நான்கு பகுதிகள் உண்டு. ஆயினும் வேதங்களின் சொற்களை விளக்கிய 'யாஸ்கர்' வேதங்களின் இரு பிரிவுகளைப் பற்றி மட்டும் பேசுவார். சம்ஹிதை, பிராமணம் என்பவை வேதத்தின் பிரிவுகள் என்று அவர் கொண்டார். ஆரணியங்களைப் பிராமணங்களின் பகுதிகளாகக் கொள்வார். தர்ம சூத்திர ஆசிரியர்களில் முதன்மையானவரான ஆபஸ்தம்பரின் கருத்தும் இதுவேயாகும். உபநிடதங்கள் ஆரணியங்களின் அத்தியாயங்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அறிஞர் சிலர் சூத்திரங்களின் ஒரு வகையான கல்பசூத்திரங்களையும் வேதங்களின் அம்சமாகக் கொள்வர்.

சம்ஹிதை. பிராமணம் என்பவற்றைக் கர்மகாண்டம் என்றும் குறிப்பிடுவது வழக்கம். அதேபோல ஆரணியங்கள் உபாசனைக் காண்டம் எனப்படும். அவை தியானம் பற்றியவை. பரஞானம் பற்றிச் சொல்லுவதால் உபநிடதங்கள் ஞானகாண்டப் பகுதி என்று கொள்ளப்படும்.

## சங்கிதை

சம்ஹிதைகள் வேதங்களின் பெயர்களால் ரிக்வேதத்தில் 1017 பாடல்கள் உள்ளன. அவற்றிலே ஏறக்குறைய 10500 செய்யுள்கள் அடங்கும். அவற்றைப் பத்து மண்டலங்களாக வகுத்துள்ளனர். மண்டலங்கள் அளவிலே வேறுபட்டவை. அவற்றில் அடங்கும் பாடல்களைக் குறிப்பிட்ட ரிஷிகளும் அவர்களின் குலத்தவர்களும் பாடியுள்ளனர். முதலாவது மண்டலத்திலும், பத்தாவது மண்டலத்திலும் அடங்கிய பாடல்களை ரிஷிகள் பலரும் அவர்களின் வம்சாவழியினரும் பாடியுள்ளனர். அவை ஒவ்வொன்றிலும் 191 பாடல்கள் உள்ளன. 2-7 வரையான மண்டலங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரிஷியின் பெயரோடும் சம்பந்தமானவை. கிருஷ்மதர், விஸ்வாமித்திரர், வாமதேவர், அத்திரி, பரத்துவாசர் ஆகியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையே அவை ஒவ்வொன்றினுடனும் தொடர்புடையவர்கள். அவர்களோடு அவர்களின் சந்தான வழியினரும் பாடல்களை இயற்றியுள்ளனர். எட்டாவது மண்டலத்திலுள்ள பாடல்கள் கண்வ ரிஷியாலும் அவரது குலத்தவராலும் இயற்றப்பட்டவை. 9வது மண்டலத்துப் பாடல்கள் எல்லாம் சோமன் பற்றியவை. அவற்றைப் பல ரிஷிகள் பாடியுள்ளனர். இருக்கு வேத மண்டல வரிசையில் குலத்தவருடன் தொடர்புடைய பாடல்கள் நடுவில் வைக்கப்பட்டு. வழங்குகின்றன. எனவே ரிக்வேத சங்கிதை, யசுர்வேத சங்கிதை, சாமவேத சங்கிதை, அதர்வணவேத சம்கிதை என்று அவை சொல்லப்படும். யசுர்வேத சங்கிதையில் இரு பிரிவுகள் உண்டு. அவை சுக்கிலயசுர்வேத சங்கிதை, கிருஷ்ணயசுர்வேத சங்கிதை என்பவையாகும். இவற்றை விட கிருஷ்ணயசுர்வேத சங்கிதையில் காடாக, கபிஸ்டல, கட மைத்திராயளி எனும் மூன்று வேறு சங்கிதைகளும் இணைக்கப்பட்டுள்ளன. அவை அதிக சிறப்புப் பெறுவதில்லை. ஒவ்வொரு சங்கிதையிலும் இனிய சந்தங்களான செய்யுள்கள் அடங்கிய பாடல்கள் உண்டு. ரிக் வேத சங்கிதைகளில் 1028 பாடல் தொகுதிகள் உண்டு. வழிபாடாற்றும் சமயங்களில் தேவர்கள் மீது பாடப்பட்டவை. இந்திரன், வருணன், சூரியன் முதலான தேவர்கள் மீது அவை பாடப்பட்டவை. யசுர் வேதத்திலும் சாம வேதத்திலும் இடம்பெறும் பாடல்கள் ரிக்வேதத்தில் உள்ளவை என்பது கவனத்திற்கு உரியது. வேறுவேறு குழுவினரால் வெவ்வேறான சந்தங்களில் உச்சரிக்கத்தக்கவாறு அவை உருவாக்கப்பட்டன. பொதுவாக ஆரம்பத்திலிருந்து இறுதி வரை பாடல்களின் எண்ணிக்கையில் ஏற்றமுண்டு. இதற்கு நான்காவது மண்டலம் புறநடையானது. விசுவாமித்திரனுடைய பாடல்கள் அடங்கிய மூன்றாவது மண்டலம் வாமதேவரின் பாடல்களில் அடங்கிய ந்ர்ன்காவது மண்டலத்தைக் காட்டிலும் நீளமானது. காயத்ரி மந்திரம் இடம் பெறுவதால் அது மண்டல வரிசையில் முன்னே வைக்கப்பட்டது என்று உரைகாரரான மாதவ ஆச்சாரியர் விளக்குவார்.

யசுர் வேதம் அளவிலே ரிக்வேதத்தின் 2/3 பகுதி மேலானது. அதில் யாகத்திலே பயன்படுத்தும் உபகரணங்கள் பற்றியும் பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. சில சமயங்களில் யாகம் பற்றிய செயல் முறைகளும் தோத்திரங்களும் இடம்பெறுகின்றன. சாம வேதம் யாகங்கள் செய்யும் பொழுது இனிய மெட்டுக்களோடு இசைப் பாடல்களாகப் பாடக் கூடிய செய்யுள்களைக் கொண்டுள்ளது. அது அளவில் இருக்கு வேதத்திலும் அரைவாசி போன்றது. அதனுடைய பாடல்கள் ஒழுங்கு முறையாக விதிகளுக்கு ஏற்ப அமைந்திருக்கும்.

அதர்வவேதத்திலே இருபது மண்டலங்கள் அமைந்துள்ளன. ஏனைய 3 வேதங்களும் யாகங்களோடு தொடர்புடையவை. ஆனால் அதர்வணத்துக்கும் யாகங்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லை. அது பெரும்பாலும் இனிய சந்தங்களால் அமைந்த செய்யுள்களைக் கொண்டது. அதன் 2ஆம் பாகத்தில் வசனநடைச் செய்யுள்களும் காணப்படுகின்றன. நோய்களைக் குணப்படுத்தல், பகைவருக்கு இம்சை செய்தல், அரசனுக்குச் செல்வமும் தீர்க்க ஆயுளும் பெறுதல், மனைகளில் ஒற்றுமை நல்லுறவை ஏற்படுத்துதல், விரும்பியோரை வசப்படுத்தல் முதலான பல விடயங்கள் பற்றிய பல பாடல்கள் காணப்படுகின்றன. அதர்வவேதத்தில் உள்ள 20% வீதப் பாடல்கள் ரிக்வேதத்தில் உள்ளவை. ஆனால், அவற்றை ஓதும் முறையில் வேறுபாடு கொண்டவை. முதல் 2 மண்டலங்களும் அளவுப் பிரமாணத்துக்கு ஏற்ப அளவுபடுத்தப்பட்டுள்ளது (செய்யுள்கள் குறைந்தவை முன்பும் கூடியவை பின்புமாக வருகின்றன). 14வது மண்டலத்தின் பாடல்கள் எல்லாம் கலியாணச் சடங்குக்கு உரியவை. அவை பெரும்பாலும் இருக்கு வேதப் பாடல்களாகும். 15ஆம் மண்டல பாடல்கள் பரப்பிரமத்தை போற்றும் பாங்கில் அமைந்தவை. 18ஆம் மண்டலத்திலே தகனக்கிரியைகள் பற்றிய பாடல்கள் வருகின்றன. அவற்றில் பெரும் பாலானவையே இருக்கு வேதத்திலும் உள்ளன. 19ஆம் மண்டலத்தில் பல விடயங்களைப் பற்றிய பாடல்கள் உண்டு. 20ஆவது மண்டலத்தில் உள்ள பாடல்கள் எல்லாம் இருக்கு வேதத்துப் பாடல்கள்.

இருக்கு வேத பாடல்களிலே ஏறக்குறைய 50% மானவை இந்திரன், அக்கினி ஆகியோரைப் பற்றியவை. ஏனைய பாடல்களிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலானவை அஸ்வினிதேவர், சாவித்திரி, சூரியன், வருண்ன், உஷை, பூசன், மருத்துகள், உருத்திரன், சோமன், விஷ்ணு, விஸ்வதேவர் முதலியோரைப் பற்றியவை. இவற்றோடு இரணியகர்த்த புருஷசூத்தம், சிருஷ்டி பற்றிய சூத்தம், மரணம் பற்றிய பாடல் தென்புலத்தார் பற்றிய பாடல்கள் ஆகியவை தத்துவார்த்தமானவை. விஷ்வதேவர்களைப் பற்றி விஸ்வதர்ம பாடிய பாடலும் அத்தகையதே. அதிலுள்ள கருத்துகள் பல உபநிடதங்களிலே மேற்கோளாக வருகின்றன. சம்பாதப்பாடல்களும் குறிப்பிடத்தக்கவை. யமன், ஜமி ஆகியோரிடத்திலும் உருரவஸ், ஊர்வசி ஆகியோரிடையேயும் இடம்பெற்ற கருத்துப் பரிமாற்றங்கள் சம்பாஷணை வடிவில் செய்யுள்களாக அமைந்துள்ளன. யாகங்கள் நடைபெறுகின்ற போது அவ் அவ்வற்றுக்குரிய குழுவினரால் ஓதப்பெற்றவை. சாம வேதப் பாடல்கள் இசை மெட்டுக்களோடு ஓதப்படுவதற்கு என்று அமைக்கப்பட்டவை.

## பிராமணங்கள்

பிராமணங்கள் வசன ரூபமானவை. இந்திய இலக்கியங்களில் வசனநடை இலக்கியங்கள் காலத்தால் முற்பட்ட வடிவங்கள் இவற்றிலே காணப்படுகின்றன. பிராமணங்கள் எட்டு வகையான விடயங்கள் பற்றியது என சாயணார் கூறியுள்ளார். அவை இதிஹாசம், புராணம், வித்யா, உபநிடதம், சுலோகம், சூத்திரம், வியாக்கியானம், அனு வியாக்கியானம் என்பவையாகும். ஒவ்வொரு வேதத்திலும் பிராமணங்கள் உண்டு. ஐதரேயம், கௌகீதகி என்னும் சாங்காயணம் என்பவை இருக்கு வேத பிராமணங்களாகும். காற்றிய மகாபுராணம் (பஞ்சவந்த), சத்விஞ்ச என்பன சாம வேதத்தில் அடங்கும். கிருஷ்ணயசுர் வேதத்திலே தைத்திரிய பிராமணம் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டுள்ளது. சதபத பிராமணம் சுக்கில யசுர் வேதத்தின் அம்சமாகும். அதிலே காண்ப மக்தன்ஜன என்னும் பிரமனைப் பற்றிய விவரணம் பிராமணம் என்று சொல்லப்படும். அதற்கு பிரமன் திருவாய் மலர்ந்தருளியது என்னும் பொருளும் உண்டு. மேலும் பிராமணங்கள் பிராமண குலத்தவர்களின் தொழில் சார்பானவை என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்படும். யதார்த்த நிலையில் யாகம் தொடர்பான எல்லா அம்சங்களையும் பற்றிய சிந்தனைகள், விவாதங்கள் வர்ணனைகள் பற்றியவை. புராதன காலத்தில் பிரபஞ்சக் கோட்பாடுகள், பௌராணிகமான கதைகள், உபாக்கியானங்கள் போன்ற யாவும் அவற்றிலே சங்கமம் ஆகின்றன. வேதக் கதைகளோடு தொடர்புடைய கோத்திரங்களைச் சேர்ந்த பிராமணங்களின் பார்வையிலே அவற்றின் சடங்குகள் வர்ணிக்கப்படுகின்றன. இருக்கு வேத பிராமணங்கள் கோத்திரு என்ற வகையில் உள்ள பிராமணர்களின் கடமைகளைச் சொல்வதோடு அவற்றுக்குரிய ரிக்வேத மந்திரங்களையும் வரிசைப்படுத்திச் சொல்லுகின்றன. சாம, யசுர்வேத பிராமணங்கள் முறையே உத்காத்திரு, அத்தான என்ற வகைகளைச் சார்ந்த பிராமண குருமார் கடமைகளையும் அவர்கள் ஒத வேண்டிய மந்திரங்கள் கிரமவரிசைகளையும் விளக்குகின்றன. சாம வேத பிராமணங்கள் பெரும்பாலும் இசைப் பாடல்களாக வேதப்பாடல்களை அமைக்கும் முறை பற்றியும் அவற்றை உச்சரிக்கும் விதங்கள் பற்றியும் வர்ணிக்கின்றன. சதபத பிராமணத்திலே மந்திரங்கள் இடம்பெறவில்லை. பிராமணங்களுக்கு உரிய பண்புகள் எல்லாம் அதிலே காணப்படுகின்றது. யசுர் வேத சம்ஹிதைகளும் பாடல்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் வரிசைக் கிரமமாக அது விளக்குகின்றது.

பிராமணங்களிலே விதி, அர்த்தவாதம் என்னும் இரண்டு பகுதிகள் உள்ளன. அவற்றில் விதி என்னும் பகுதியில் யாகங்கள் பற்றியும் அவற்றுக்குரிய முறைகள் பற்றியும் விளக்கப்படுகின்றன. அர்த்தவாதப்பகுதி விரிவான விளக்க உரையாக அமைகின்றது. சடங்குகளைப் பற்றிய விளக்கம் அவற்றில் ஒதப்படும் மந்திரங்கள் பற்றிய விளக்கம் என்பன அதிற் காணப்படும். யாகம் தொடர்பாக எல்லா அம்சங்களும் மிக விரிந்த நிலையில் இவற்றில் அடக்கப்படுகின்றன. பாடபேதங்கள் உண்டு. கோபத பிராமணம் அதர்வ வேதத்துக்கு உரியது.

**ஆரணியகம்**

ஆரணியங்களில் பல வழக்கொழிந்து விட்டன. ஆயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் பகுதிகளான உபநிடதங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. வியாஸ்கர் ஆரணியங்களை பிராமணங்களின் பகுதிகளாக கொள்கின்ற போதிலும் அவை ஒரு தனிப்பிரிவாக கொள்ளத்தக்க பண்புகளை உடையவை. தைத்திரிய ஆரணியம் மட்டுமே சற்று வேறுபட்டதாகும். அது விஷ்ணு யசுர் வேதத்தின் பாகமான தைத்திரிய பிராமணத்தின் ஓர் அங்கமாக விளங்குகின்றது.

## உபநிடதங்கள்

ஈசோ உபநிடதம் தவிர்ந்த உபநிடதங்கள் ஆரணியங்களின் அத்தியாயங்களாக அமைந்துள்ளன. ஈசோ உபநிடதம் சுக்கில யசுர் வேதத்துக்கு உரிய இறுதியான (40வது) அத்தியாயமாக உள்ளது. இந்நாட்களிலே வேத வரிசையில் உள்ளவை என்று 200க்கும் மேலான உபநிடதங்களைக் குறிப்பிடுவர். ஆயினும் ஆதிசங்கரர் பதினான்கு உபநிடதங்களையே அதிகாரபூர்வமான ஆதி உபநிடதங்களாகக் கொள்வர். அவற்றிலே ஐதரேஜ உபநிடதம், கௌகீதகி உபநிடதம் என்பவை ரிக் வேதத்திற்கு உரியவை. கட, தைத்திரிய, கைவல்ய, சுவேதாஸ்வர, நாராயண முதலிய உபநிடதங்கள் கிருஷ்ணயசுர் வேதத்திற்கு உரியவை. ஈச, பிருகதாரணியக, யாபால ஆகிய மூன்றும் சுக்கில யசுர் வேதத்தில் அடங்கியவை. கேனா, சாந்தோத்தி, மைத்திராயான என்பன சாமவேத உபநிடதங்கள். பிரஸ்சின, முண்டக, மாண்டுக்கிய, நர்சிம்மதாபணி, என்பன அதர்வவேத உபநிடதங்கள். சமூக ஒற்றுமை, நல்லிணக்கம், கருத்து ஒற்றுமை முதலியன பற்றிய கருத்துக்கள் பொதிந்துள்ள இருக்குவேதப்பாடல் ஒன்றினைக் கவனிக்கலாம் "ஒன்று கூடுங்கள் ஒருவரோடு ஒருவர் மனம் திறந்து பேசுங்கள் உங்களுடைய உள்ளங்கள் ஒன்றுபட்டுச் செயலாற்றட்டும். எவ்வாறு முற்காலத்திலே தெய்வங்கள் ஒன்றுபட்டுத் தங்களுக்குரிய (அவிப்) பாகத்தைப் பெற்று மகிழ்ச்சியடைந்தார்களோ அவ்வாறே உங்கள் மத்தியிலே கருத்தொற்றுமை நிலவட்டும். உங்களின் சபையினர் கருத்தொருமித்துச் செயலாற்றுவர்ராக. உள்ளத்திலும், சிந்தனைகளிலும் ஒன்றிணைந்து இலங்குவீர்களாக. உங்கள்



4 – CM 014072

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிலையில் ஒரு பொதுவான நோக்கத்தை முன்வைக்கிறேன். உங்களுடைய பொதுவான அவிப்பாகத்துடன் வழிபடுவீர்களாக. உங்களுடைய நோக்கம் பொதுவாக இருக்கட்டும், உள்ளங்களில் ஒன்றுபடுவீர்களாக. உங்களுடைய மனம் ஒரே இலக்குக் கொண்டதாக விளங்கட்டும். இதனால் யாவரும் ஒன்றுசேர்ந்து இன்பமாக வாழுவீர்களாக" என்பதாகும். இருக்கு வேத முடிவில் (10.191) வரும் இப்பாடல் மக்களுடைய சபையொன்றினை விளித்து அல்லது மக்களை விளித்து ஒரு ரிஷி கூறியுள்ள மேற்குறிப்பிட்ட அறிவுரையாக அமைந்திருப்பினும், இதிலுள்ள கருத்துக்கள் இக்காலத்திற்கும், வருங்காலத்திற்கும் சாலப் பொருத்தமுள்ளன எனலாம். அவர் உரை எழுதிய உபநிடதங்கள் மேல்வருவன ஈசாவாஸிய, கேன, கடவள்ள, பிரஸ்ண, முண்டக, மாண்டுக்கிய, தைத்திரிய, ஐதரேஜ, சாந்தோக்கிய, பிருகதாரணிய, நரசிம்ம, பூர்வதாபனி, சுவேதாஸ்வரத உபநிதத்திற்கும் அவர் உரை எழுதியுள்ளார் என்றும் சொல்லப்படும்.

ஏறக்குறைய இதேயளவு தொகையிலுள்ள உபநிடதங்களில் இருந்து இராமனுஜர் மேற்கோள்களைக் கையாண்டுள்ளார் ஆயினும் அவர் உபநிடதங்களுக்கு உரை எழுதவில்லை. இராமனுஜர் பயன்படுத்திய உபநிடதங்கள் சில சங்கரர் அறிந்தவற்றிலும் வேறுபட்டதாகலாம். காலாகாலம் உபநிடதங்கள் தேவைக்கேற்ப எழுதப்பட்டன. ஏனையவை பின்பு தோன்றியவை என்பதில் ஐயம் இல்லை. வேதப் பாடல்களைப் போல உபநிடதங்களும் நெடுங் காலமாக வாய்மொழி மூலமாகவே பேணப்பட்டு வந்தன. சிலமுக்கியமான விடயங்கள் பல உபநிடதங்களிலும் ஒரே விதமாக வர்ணிக்கப்படுகின்றமை குறிப்பிடப்படுகின்றது. பஞ்சார்த்தினி வித்யா என்பது பற்றிய தத்துவம் சாந்தோக்கிய (V.B.IO) பிருகதாரணிய (Vi:2) ஆகியவற்றிலே விளக்கப்படுகின்றது. அத்துடன் பிராணனைப் பற்றிய தியானமும் இவ்விரண்டிலும் விளக்கப்படுகின்றன. அதேபோல வைஸ்வாணர ஹத்ய என்பது பிருகதாரணிய (11.1) கௌசீதகி (IV:4) ஆகியவற்றிலே விபரிக்கப்படுகிறது. ஒரே விதமான செய்யுள்கள் பல உபநிடதங்களிலே வருகின்றமை குறிப்பிடுதற்குரியது. சில சமயங்களிலே ஒரே விடயம் இரண்டு இடங்களிலே எதுவித மாற்றமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றிச் சொல்லப்படுகின்றது. யஞ்ஞவல்யர், மைத்திரேஜி என்போருக்கிடையிலான சம்பாதம் பிருகதாரணியகத்திலே இரண்டு இடங்களிலே அமைந்துள்ளது (IX.5) இது வாய்ப்பாடமாக இலக்கியவடிவம் பேணப்பட்டு வந்த மரபு ஒன்றில் இயல்பாக உள்ளது.

## பொருள் விளக்கம்

உபநிடதம் என்பது வெவ்வேறு விதமாக விளக்கப்படுகின்றது. உப என்ற முன்னொட்டும் நி, ஸத் என்னும் சொற்களும் சேர்வதால் அது உருவாகியது என்பது மரபுவழியான கதை. மெய்ஞானம் பற்றிய அறிவு நூல் என்று அது பொருள்படும். கடோபநிடதத்தின் உரையிலே காணப்படும் முன்னுரையில் சங்கரர் மேல்வருமாறு கூறுவார். ரிஷி சம்சாரசாகரத்திலிருந்து விடுபட விரும்புவோர் புலன்களின் வழிச் செல்லாது பக்தி சிரத்தையோடு இந்த ஞானத்தைப் பற்றும் இடத்து அறியாமையில் நீங்கி பிறவிப் பிணிக்கு ஏதுவான எல்லாவற்றையும் முற்றாக அழித்துக் கொள்கிறார்கள்..... அல்லது அத்தகையோர் பரமாத்திகனான பிரமனை பிரமத்தோடு இணைத்துவிடுகின்றனர்.

தைத்திரிய உபநிடதத்திலே அவர் வேறுவிதமாகக் கூறுகிறார். ரிஷி மிகவும் மேலான உண்மையை உறுதிப்படுத்துவதாலோ மாதா உதரத்திலிருந்து பூமியில் அவதரித்து பிணி, நரை, திரை, மூப்பு எனும் நிலைகளில் உழலும் துன்ப சாகரத்திலிருந்து விடுவிப்பதாலோ அது உபநிடதம் எனப்படும். உபநிடதங்களை வேதாந்தம் என்பர். வேதங்களின் இறுதிப்பகுதியாக வருவதால் இவை வேதாந்தம் எனப்படும். வேதங்கள் அனைத்திலும் காணப்படுகின்ற பரஞானம் பற்றிய சிந்தனைகளில் சாரமானவை என்பதாலும் அவற்றை வேதாந்தம் என்பர். சைவசமய மரபிலே அந்த வகையிலும் அவர்கள் உபநிடதங்களை வேதம் என்று குறிப்பிடுவது வழக்கம். புராணங்களில் உபநிடதங்களை வேதசிரசு என்றும் வர்ணிப்பர். வேதத்தில் காணப்படுபவை எல்லாவற்றிலும் உன்னதமான சிந்தனைகள் அவற்றில் அடங்குவதால் இவ்வாறான எண்ணம் ஏற்பட்டது. சுருதிப்பிரமாணம் என்று கொள்ளுமிடத்து அது உபநிடதங்களையே குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தின் ஏனைய பகுதிகள் புறநோக்கானவை. இயற்கை உலகம் என்பன பற்றிய கட்புலனுக்கு அகப்படும் காட்சிகளைப் பற்றியவை. உபநிடதங்களோ அகப்புல காட்சி பற்றியவை ஆகும். தன்னை உணர்தலைப் பற்றியது உபநிடதம் அவனே தானே என்ற உணர்வைப் பற்றியது.

பொதுவாக உபநிடதங்கள் பிரமம், ஆன்மா, வினைப்பயன், வீடுபேறு என்பன பற்றியவையாகும். இந்து சமய தத்துவங்கள் எல்லாம் இந்நான்கினை அடிப்படையாகக் கொண்டவை. அவை ஒவ்வொன்றினைப் பற்றிய விளக்கத்திற்கும் உபநிடத சிந்தனை ஆதாரமாக இருக்கின்றது. இந்திய தத்துவ சிந்தனைகள் எல்லாம் உபநிடதங்களில் இருந்து தோற்றம் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

..................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதகாலச் சமுதாயம்

திருமதி. இந்திரா சதானந்தன்

வேதம் வித் எனும் அடியாகப் பிறந்தது. இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்ற நான்கையும் வேதங்கள் என அழைப்பர். இதன் மொழியை வைதிக மொழி என்றும் வேதங்களை வைதீக இலக்கியங்கள் என்றும் அழைப்பர். முதன் மூன்று வேதங்களையுமே வேதங்கள் என அழைத்தனர். இதனை திரயீவித்யா எனக் குறிப்பிடுவர். அதர்வ வேதம் பின் சேர்க்கப்பட்டது. வேதங்கள் பல்லாயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் எவ்வாறு இருந்தனவோ அவ்வாறே மாற்றம் பெறாமல் பரம்பரை பரம்பரையாக வாயால் ஒதிச் செவியால் கேட்டு வந்துள்ளன. இதன் காரணமாகவே வேதத்தினை சுருதி என்றும் எழுதாமறை என்றும் அழைத்தனர். பதம், கிரமம், ஜடை, கனம் என நான்கு முறைகளைக் கடைப்பிடித்தே வேதங்களை அத்தியாயனம் செய்வர். இதன்படி வேதங்களை ஓதுபவர்களை கனபாடிகள் என்பர்.

## இருக்கு வேதம்

வேதங்களில் முதன்மையும் பழமையும் வாய்ந்தது இருக்கு' வேதமாகும். கி.மு 1200 அளவில் தொகுக்கப்பட்டு சம்ஹிதை (தொகுப்பு) வடிவம் பெற்றது என்பர். இவ்வேதத்தில் உள்ள 1028 பாடல்களும் பத்து மண்டலங்களாக அமைந்துள்ளன. இருக்கு எனில் பாட்டு எனப்பொருள்படும். இங்கு உரை நடைகிடையா. பத்துமண்டலங்களில் இரண்டு முதல் ஏழாம் மண்டலம் வரையுள்ள பாடல்கள் மிகப் பழமை வாய்ந்தவை. இவற்றைப் பாடியவர்கள் ரிஷிகள் எனப்பட்டனர். இவ் ரிஷிகள் பற்றிய விவரங்களைக் கூறும் நூல் அநுக்கிரகமணி என அழைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கூறப்பட்ட ஏழு மண்டலங்களில் இருக்கும் பாடல்களை இயற்றியவர்கள் கிருத்ஸமதர், விசுவாமித்திரர், வாமதேவர், அத்திரி பாரத்துவாசர், வசிட்டர் என்பவர்கள். எட்டாம் மண்டலத்தைக் கண்வர், அங்கிரஸ எனும் இரு இருஷிகள் இயற்றினர். முதலாம் ஒன்பதாம் பத்தாம் மண்டலங்களை பல்வேறு பரம்பரையைச் சேர்ந்த கவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியுள்ளனர்; இதில் பெண்கவிகளும் அடங்குவர்.

## மொழிநடை

இங்கு காணப்படும் மொழிநடை மிக எளிய நடை. தொகைச் சொற்கள் குறைவு. உவமை அணி ஒன்று மட்டுமே உள்ளது. இங்கு கருத்தைத் தெரிந்தபொருள் ஒன்றுடன் ஒப்பிட்டுத் தெளிவாகக் கூறும் தனிநோக்குடன் கையாளப்பட்டிருக்கின்றது. எண்ணிறந்த இலக்கண முடிபுகளால் வளம் பெற்ற வினை உருவங்கள் அதாவது முற்றுக்கள் எச்சங்கள் வடிவில் காணப்படுகின்றன.

இருக்கு வேதத்தில் பிற்சேர்க்கையாக இணைந்த சில கையெழுத்துப் பிரதிகளும் உண்டு. இவற்றை இலங்கள் (மிகுதியானவை) என்பர். வேதம் ஓதும் போது எழுப்பப்படும் ஒலியமைப்பை, அசைவை உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம் என மூவகையாகப் பகுத்துள்ளனர். உயர்த்திப் பாடுவது உதாத்தம், தாழ்த்திப் பாடுவது அநுதாத்தம், சமமாகப் பாடுவது ஸ்வரிதம்.

## வேதகால அரசியல்

இருக்கு வேத காலத்தில் குடிமக்கள் அரசனது ஆட்சியின் கீழ் வாழ்ந்தனர் என்பதனை ஊகிக்கமுடிகின்றது. எனினும் நேரடியாகக் குறிப்புக்கள் எதுவுமில்லை. ராஜா எனும் சம்ஸ்கிருத சொல் குறிக்கும் அரசனே அடிக்கடி வேதத்தில் குறிப்பிடப்படுகிறான். தலைவனை விஸ்பதி என அழைப்பர் (மக்களின் தலைவன்). குடும்பத்தில் ஆண்மகனே தலைவன். திலோதாஸன், சுதாஸன், திரிசதஸ்பு போன்ற மன்னர்களின் பெரும் தீரச் செயல்களையும் அறிய முடிகின்றது. இவர்கள் வளபளப்பான ஆடை அணிந்திருந்தனர். அழகு மிக்க மாளிகையில் வசித்தனர். மக்கள் அளித்த நன்கொடையில் இருந்தே அரசன் அரசோச்சி வந்தான். பகைவரிடமிருந்து நிலம், அடிமைகள், ஆடு, மாடுகள் எல்லாம் கவரப்பட்டன. புரோகிதனே நாளடைவில் அரசனாக உயர்ந்தான். சேனாநீ அரசனால் நியமிக்கப்பட்ட அதிகாரி. கிராமணி இவன் சேனையின் மிக்க சிறிய பிரிவைப் போருக்குச் செலுத்திச் செல்பவன். இருக்கு வேதத்தில் வரும் தானஸ்துதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடை வள்ளல்களான அரசர்கள் கவிகளுக்கும் புரோகிதர்களுக்கும் வாரிவழங்கிய பரிசில்களைப் பற்றிக் கூறுகின்றன. மக்கள் தேர்ந்தெடுத்த அங்கத்தினரைக் கொண்ட சமிதியும் நாட்டின் முக்கிய பிரமுகர் அங்கம் வகிக்கும் சபையும் இங்கு காணப்பட்டது.

# வேதகால மக்களின் குடும்ப வாழ்க்கை

குடும்பங்களாக இயங்கியது அக்காலச் சமுதாயம். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு தலைவன் இருந்தான். தாய் தந்தையருக்கு அடங்கிக் குழந்தைகள் வளர்ந்தார்கள் என்பதனை சுனஸ்சேபன் கதை குறித்து நிற்கின்றது. சூதில் ஈடுபட்டு பொருளிழந்தவனை அவன் தந்தை தாயாரும் உடன்பிறந்தாரும் வெறுத்தொதுக்கினர். விருந்தினரை ஓம்பும் பண்பு இருந்தது. அக்கினியை அதிதி (விருந்தினன்)என அழைப்பதனைக் காணலாம்.

## சாதிப்பாகுப்பாடு

இருக்கு வேதத்தில் ஒரே ஒரு இடத்தில் மட்டும் பிராமணன் சத்திரியன், வைசியன், சூத்திரன் எனும் சொற்கள் காணப்படுகின்றன. புருஷனுடைய நான்கு உறுப்புக்களான முகம், தோள், தொடை, கால் முதலியவற்றுடன் முறையே பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் தொடர்புபடுத்தப்படுகின்றனர். புருஷ சூக்தம் ஒன்றைத் தவிர வேறு எங்கும் சாதி பற்றிய குறிப்புக்கள் இல்லை. இருக்கு வேதத்தில் இன்னொரு சூக்தம் தந்தை, தாய், தனயன் ஆகிய மூவரும் வெவ்வேறான மூவகைத் தொழில்களில் ஈடுபட்டதாகவும் ஒருவன் கவி, ஒருத்தி மாஅரைப்பவள், மற்றவன் பிணிதீர்க்கும் மருத்துவன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொழிலின் அடிப்படையில் சாதி தோன்ற வழிவகுத்திருக்கலாம்.

## பெண்கள் நிலை

விவாகமாகாத பெண்கள் பருவமடைந்தோராய் தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையருடன் வசித்து வந்தனர் என்பதனை அறிய முடிகின்றது. பருவம் முதிர்ந்த பின்னரே பெண்கள் விவாகம் செய்தனர். காதலித்த ஆடவரை அடைய வேண்டிப் பெண்களால் அணியப்பட்ட அணிகலன்களைப் பற்றிய குறிப்பும், காதலன் காதலிக்குப் பரிசுப் பொருள் கொடுப்பதும் இங்கு குறிப்பிடப்படுகின்றது. தந்தை - மகள், உடன்பிறந்தவன் - உடன் பிறந்தவள் ஆகியோர் ஒருவரை ஒருவர் மணம்புரிதல் தடை செய்யப்பட்டிருந்தது. பொருள் கொடுத்துப் பெண்ணைப் பெறும் வழக்கம் இருந்திருக்கலாம். ஊறுபட்ட உடம்பினராயின் பொருள் கொடுத்தே பெண்களுக்கு மணம் முடித்து வைத்தனர். விவாகக் கிரியைகள் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது. மணமகனும் அவனைச் சார்ந்தவர்களும் மணமகள் இல்லம் சேருவர், அங்கு மணமகள் அழகுற அலங்கரிக்கப்பட்டுத் தோற்றம் அளிப்பாள், அத்தருணம் பல கிரியைகள் நடைபெறும், பெண்ணின் கையைப் பிடித்துக் கொண்டு மணமகன் அக்கினியை வலம் வருவான், கைப்பிடித்தல் வலம்வருதல் முதலியன முக்கிய கிரியையாகும். மனைவி மணமகன் வீட்டுக்கே செல்வாள். மணமானபெண் குடும்பத்தில் முக்கிய இடம் வகிப்பாள். யாகம் வேட்டல் முதலிய கிரியைகளில் இவளுக்குத் தனி இடம் உண்டு. மணம் புரிதலின் நோக்கம் சிறந்த ஆண்மகனைப் பெறுதலேயாகும். மக்கட்பேறின்மை ஒருவகை வறுமையாகவே கருதப்பட்டது. மறுவிவாகம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பல பெண்களை விவாகம் செய்யும் வழக்கமும் இருந்திருக்கிறது.

**கல்விமுறை**

தவ்ளைகள் கத்துவதை வேதங்களை உரக்க ஓதுவதுடன் ஒப்பிட்டுக் கூறும் பாட்டொன்று உண்டு. பிரம்மசாரி சூக்தம் என்றொரு வேறொரு பாட்டும் உண்டு. எழுத்துக்கலை இருந்ததிற்கு சான்றில்லை. வேதங்கள் வாயால் ஒதப்பட்டு வந்தவையே. சங்கீதக் கலை தோன்றி வளர்ந்ததிற்கு அறிகுறிகள் உண்டு. வாசிக்கப்படும் வாத்தியங்களான வீணை முதலியனவும், வாயாலே ஊதி இசைக்கப்படும் கருவிகளான குழல் முதலியனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. சூது விளையாட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரோட்டம் முதலியன இக்கால மக்களின் பொழுது போக்காகக் காணப்பட்டன.

**உணவு**

பால், வெண்ணெய், தயிர் முதலியனவற்றை உணவாகக் கொண்டிருந்தனர். யவம் எனும் தானியத்தை மாவாக அரைத்து பாலுடன் சேர்த்து அப்பங்களாகச் சுட்டனர். காய் கறிகளும் பழங்களும் உண்டனர். ஆடு, மாடு முதலியவற்றின் இறைச்சியும் உணவாயிற்று. ஆனால் பசுவைக் கொல்லவில்லை. சோமலதா் எனும் கொடியின் சாறுடன் பால் கலந்து பருகினர்.

**உடை**

மேலுடை, கீழுடை என இருவகையாக உடைகளை உடுத்தனர். மான்தோல் ஆடையாக அணியப்பட்டுள்ளது. முனிவர்கள் அழுக்கேறிய ஆடைகளை அணிந்திருந்தனர் என முனி சூக்தம் குறிப்பிடும். பெண்கள் கரை பொருந்திய உடைகளை அணிந்தனர். மருத்துக்களின் உடைகள் பொன் வேலைப்பாடுடையவை. ஆண்களின் உடைகளுக்கும் பெண்களின் உடைகளுக்கும் அதிக வேறுபாடு இல்லை. காதணிகள் தலையில் அணியப்பட்ட அணிகள் விரலணிகள் நிஷ்கம் எனப்படும். கழுத்தணி மணிகள் ருக்மம் எனப்படும். பொன்னாலான அணிகளும் மாலைகளும் அக்காலத்தில் அணியப்பட்டது. தலைமயிரைச் சீர்படச் அமைத்துக் கபர்தம் எனப்படும் முறையில் தலையை சீர் செய்தனர், மீசை தாடி வளர்த்தல் மழித்தல் இருந்துள்ளது.

**நோய்**

பக்ஷ்மா, க்ஷயம் முதலிய நோய்களைப் பற்றி அறியக் கூடியதாகவுள்ளது. இதற்குரிய மூலிகைகள் குணமாக்கவல்ல வைத்தியர்கள் பற்றிய குறிப்பும் காணப்படுகின்றது. அஸ்வினி தேவர்கள் சிறந்த வைத்தியர்களாகக் கருதப்பட்டனர். கண் பார்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்றவர்களுக்கு கண் பார்வை அளித்தும், கை கால் இழந்தவர்களுக்கு அவற்றைப் பொருத்தியும் இளமை குன்றிய சியவனா என்பவர்க்கு திரும்பவும் இளமையை வருவித்தும், அக்கால மருத்துவர் சிகிச்சை முறையை வளர்த்தமையினை அறியலாம்.

**தொழில்**

உழவுத் தொழில் நன்கு வளர்ந்திருந்தது. உழவர் நிலத்தில் மரத்தாலான கலப்பைகள் ஆழப்பதியும் வண்ணம் மாடுகளைப் பூட்டி உழுதனர், விதை விதைத்தனர். அவை கதிர்களாகி முற்றியதும் அவற்றை வெட்டிப் பின் அடித்துத் தூவித் துப்புரவு செய்தனர். யவம் எனும் ஒருவகை நெல் பெரும்பாலும் விளைவிக்கப்பட்டது. அரிசியைத் தரும் நெல் பயிரிடப்பட்டமைக்குச் சான்றில்லை. பசுவே விலை மதிப்பற்ற செல்வம். யாகத்துக்குத் தட்சணையாகப் பசுக்களையே கொடுத்தனர். பசுக்கள் போருக்கும் காரணமாய் இருந்தன, கவிஷ்டி எனும் சொல் பசுவைத் தேடுதல் எனப் பொருள் குறித்து நிற்கின்றது. பசுக்களை அகன்யா (கொல்லப்படத்தகாதது) என அழைப்பர். வியாபாரம் சிறந்த தொழிலாகக் கருதப்பட்டது. பண்டமாற்று இக்காலத்தில் பெருவழக்காயிருந்தது. நிஷ்கம் எனும் சொல் பொருளளவைக் குறித்து நின்று பின் நாணயத்தைக் குறித்தது. போரில் ஈட்டிய வெற்றி அரசருக்குப் பெரும் செல்வத்தைக் கொடுத்தது. பெரும் செல்வம் என்பது ஆடு, மாடு, குதிரை மந்தைகளையே குறிக்கும்.

தச்சர்கள் இருந்திருக்கின்றனர். தேர்களையும் கலப்பைகளையும் பண்டங்களை இழுத்துச் செல்லும் வண்டிகளையும் இவர்கள் மரத்தால் செய்தனர். உலோகங்களில் வேலை செய்யும் திறமை வாய்ந்த கருமான் உலோகங்களை உருக்கி பல உருவங்களில் பொருள்களை வடித்தனர். மட்கலங்கள் உபயோகத்தில் இருந்தன. தோலைப் பதனிட்டு செய்பவனும் இருந்துள்ளான். வில், ஞாண், குதிரைகளைப் பிணைக்கும் கடிவாளம், முதலியவற்றைச் செய்வதற்கு மாட்டுத் தோலையே பயன்படுத்தினர். புல், ஓலை முதலியவற்றால் பாய் முடைதல், துணிநெய்தல், தைத்தல் முதலியன மக்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியப்பட்டிருந்தது. கூத்தாடி, அம்பட்டன் தத்தம் தொழில்களைச் செய்தனர். வீடுகள் மண்ணாலும் மரத்தாலும் மூங்கில் கம்புகளாலும் ஆக்கப்பட்டிருந்தன. வழிகள் தெருக்கள் அமைக்கப்பட்டிருந்தது. குதிரைச்சவாரி செய்துள்ளனர்.

**வேதகாலத் தேவர்கள்**

இயற்கையை வழிபட்ட மக்கள் இயற்கைக்குத் தெய்வ சக்தியைக் கொடுத்து வழிபடத் தொடங்கினர். இயற்கையை தேவர்களாகக் கொண்டனர். தேவர் (திவ்-ஒளி) ஒளியுடையவர். அதீத சக்திபடைத்தவர் எனப்பட்டனர். இயற்கைத் தேவர்கள் மனித உருவிலேயே கற்பனை செய்யப்பட்டனர். எனினும் முழுமையான மனித உருவல்ல. இத்தேவர்களின் தலை, முகம், சடை, தாடி, கை, கால் போன்ற ஒருசில உறுப்புக்களே குறிப்பிடப்படுகின்றன. சிலவிடங்களில் தேவர்களின் பிறப்புக்கள் கூறப்படுகின்றன. உதாரணமாக மருத்துக்கள் உருத்திரனின் புத்திரர்கள் என்றும் யமன் விவஸ்வத்தின் மகன் என்றும் இந்திரன் தியௌவின் மகன் என்றும் வர்ணிக்கப்பட்டுள்ளனர்.

இருக்குவேதகாலத் தேவர்களை ஆகாயத்திற்குரியவர்கள், இடைவெளிக்குரியவர்கள், பூமிக்குரியவர்கள் என மூன்றாக பகுத்துள்ளனர். விண்ணின் தேவர்களாக் தியௌ, மித்திரன், வருணன், ஆதித்தியன், சூரியன், கவிதா, பூவுன், விஸ்ணு, இருஅஸ்வினி தேவர்கள், உணவு, ராத்திரி என்பவர்கள் குறிப்பிடப்படுகின்றனர். பிருதுவி, அக்கினி, பிருகஸ்பதி, சோமன் துவஷ்டா, சரஸ்வதி என்பவர்கள் மண்ணுக்குரிய தேவர்களாகவும் இந்திரன், திருதஅப்தயன், அஜஏகபாதன், உருத்திரன், மருத்துக்கள் வாயு, பாஜன்யன், அப்பு என்பவர்கள் விண்ணுக்கும் மண்ணுக்கும் இடைப்பட்ட தேவர்களாகவும் குறிப்பிடப்படுகின்றனர்

வேதகாலத் தேவர்களில் தலைசிறந்தவனான வர்ணன் பன்னிருபாடல்களில் வர்ணிக்கப்படுகின்றான். 'நாங்கள் செய்த பாவங்களினின்றும் எங்களுடைய பெற்றோருடைய பாவங்களினின்றும் எங்களை விடுதலைசெய்வாயாக ' என விழித்துப்பாடுவதில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவத்தைப் பொறுத்து மன்னிக்கும் கடவுளாகவும், ஒழுங்கைக் கடைப்பிடிக்கும் தெய்வமாகவும், தேவனாகவும் விளங்கினான் என்பதனை அறிய முடிகின்றது. நீருக்குத் தேவனாக விழிக்கப்படுகிறான்.

மித்திரன் பற்றி ஒரு சூக்தமே காணப்படுகின்றது. இமைகளை இமைக்காது மக்களையும் உழவர்களையும் பார்த்த அளவிலே இயங்கச் செய்பவனாகவும், மூவடியால் உலகை அளந்த பெருமை உடையவனாகவும் இவன் வர்ணிக்கப்படுகிறான்.

ஆதித்தியர் ஒரு குழுவாகவே வர்ணிக்கப்படுகின்றனர். இவர்கள் அறுவர் என வேதப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. சூரியனைப் பற்றிப் பத்துப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. இவனது தேரை இழுத்துச் செல்ல ஏழு குதிரைகள் இருக்கின்றன. இவனை உலகம் முழுவதும் பரந்து காணப்படும் பறவை என வர்ணிக்கின்றனர். இருளை நீக்குபவனும், நாட்களைப் பிரித்து மக்களின் வாழ்க்கையை நீடிக்கச் செய்பவனும் இவனே.

பூஷன் எனும் தேவன் விண்ணுக்குரியவன். இவனைப் பற்றி எட்டு சூக்தங்கள் உண்டு. கை கால் முதலிய உறுப்புக்களுடன் இவன் வர்ணிக்கப்படுகின்றான். இவன் பொன்னாலான ஈட்டியையும், அங்குசத்தையும், தாங்கி நிற்கிறான். இவனது தேரை ஆடுகள் இழுத்துச் செல்லும். இவனே பகலையும் இரவையும் தோற்றுவிக்கிறான். இருக்கு வேதத்தில் காயத்திரி என்று பெயர் பெறும் மந்திரம் இவனைக் குறித்துப் பாடப்பட்டதே. இவனே சூரியனை இயங்கச் செய்கிறான்.

வேத இலக்கியத்தில் விஷ்ணு ஐந்தாறு சூக்தங்களில் மட்டுமே வர்ணிக்கப்படுகின்றான். மூவடியால் இவன் உலகை அளக்கும் அழகு பலமுறை வர்ணிக்கப்படுகிறது. இவனது மூவடி உலகின் உதயம், நண்பகல், அஸ்தமனம் ஆகிய மூன்று நிலைகளையும் குறிக்கும். இந்திரனின் நண்பன் என்றும் மக்களின் பார்வையில் சூரியன் என்றும் வர்ணிக்கப்படுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குவேதத்தில் பெண் தேவதைகளாக உஷை இராத்திரி வர்ணிக்கப்படுகின்றனர். உஷை கிழக்கே தோன்றுபவளாகவும் இருளை அகற்றுபவளாகவும் வர்ணிக்கப்படுகின்றாள். நாள்தோறும் விடியற்காலைவேளை தோறும் திரும்பத் திரும்ப பிறந்து கொண்டிருப்பவளாக வர்ணிக்கப்படுகின்றாள். இவளை இருபதுக்கு அதிகமான பாடல்களில் வர்ணித்துள்ளனர். இவளை ஆகாயத்தின் புதல்வி, இரவுக்கு உடன் பிறந்த மூத்தவள், சூரியனின் மனைவி, அக்கினியே இவள் காதலன் என்றெல்லாம் இவள் வர்ணிக்கப்படுகின்றாள். இராத்திரி நக்தம் என வர்ணிக்கப்படுகின்றாள். இவள் தோன்றும் போதே தாரகைகள் தோன்றுகின்றன என வர்ணிக்கப்படுகின்றாள்

இருக்கு வேத தெய்வங்களுள் அஸ்வினி தேவர் முக்கியமானவர். இவர்கள் மேல் ஏறக்குறை ஐம்பது சூக்தங்கள் பாடப்பட்டுள்ளன. அதிவிடியற் காலத்திற்கும் சூரியன் உதிப்பதற்கும் இடைவேளை இவர்கள் தோன்றும் நேரம். இவர்கள் பவனிவரும் தேர் மூன்று சில்லுகளையுடையது. இவர்கள் மதுப்பிரியர், வைத்தியர் என்றெல்லாம் வர்ணிக்கப்படுகின்றனர்.

இந்திரன் விண்ணுக்கும் மண்ணுக்கும் இடைப்பட்ட தேவன். இருக்கு வேதத்தில் மிகக் கூடிய பாடல்கள் இவனையே வர்ணிக்கின்றன. வச்சிராயுதத்தை தாங்கியவனாக விருத்திரன் என்னும் அரக்கனுடன் போர் செய்து அவனைக் கொன்று கோட்டைகளாகிய மலைகளைப் பிளந்து நீர்களை விடுவித்தவனாகவும், விடியற்காலைத் தெய்வமாகிய உஷையையும் சூரியனையும் தோன்றச் செய்தான் என்றும், இடிமுழங்க மின்னல்ஒளிர மேகங்களினின்றும் மழை பொழிவதையே இடிமுழக்கத்தின் தெய்வமாகிய இந்திரனின் வீரச் செயல் என்றெல்லாம் வர்ணிக்கப்படுகின்றன. தியௌ இவன் தந்தை. அக்கினி பூஷன் இவன் உடன்பிறந்தோர். இந்திராணி அவன் மனைவி என்றெல்லாம் வர்ணிக்கப்படுகின்றான். விருத்திரனை அழித்தபடியால் விருத்திரஹன் எனப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திரன் மூன்று பாடல்களில் வர்ணிக்கப்படுகிறான். இவன் அழகானவன், சிவந்த மேனியன், கிரணங்களை அள்ளி வீசிப் பிரகாசிக்கும் சூரியனை நிகர்த்தவன், மிக்க வலிமையுடையவன் இளமைத் தோற்றம் உடையவன், என்றெல்லாம் வர்ணிக்கப்படுகிறான். மருத்துக்கள் 33 பாடல்களில் வர்ணிக்கப்படுகின்றனர். இவர்கள் வாயு புத்திரர்களாகவும் விண்ணிடைப் பிறந்தவர்களாகவும், பொன்னாற் செய்த கோடரி அம்பு வில் ஆயுதங்களைத் தரித்தவர்களாகவும் பொன் ஆடை, பொன் அணி, பொன்மலை எல்லாம் அணிந்தவர்களாகவும் வர்ணிக்கப்படுகிறார்கள்.

வாயு வாதம் என்ற தேவர்கள் இங்கு வர்ணிக்கப்படுகின்றனர். வாயுவை விழித்து ஒரு பாடலே உண்டு. கை கால் முதலிய உறுப்புக்கள் பொருந்திய தெய்வமாகவும், இந்திரனுடன் இணைத்து வர்ணிக்கப்படுகின்றான். ஒளிவீசும் தேர் இவனுக்குண்டு சோமபானத்தில் விருப்பம் உடையவன். இவன் புகழ், சந்ததி, செல்வம் என்பனவற்றைத் தன்னை வழிபடுபவனுக்கு அளிப்பவன் என்று வர்ணிக்கப்பட்டுள்ளான். நான்கு சூக்தங்களில் 'அப்பு' வர்ணிக்கப்படுகின்றான். நீர்த் தேவதைகள் எனவும், இளம்பருவ மங்கையராகவும் மனைவிகளாகவும் வர்ணிக்கப்படுகின்றனர்.

நீர்த்தேவதைகள் அன்னையர்களாகி அக்கினியைத் தோற்றுவித்து பொய் கோபம் கொடுமை முதலிய தீய அழுக்குகளை நீக்கி பலத்தையும் ஆரோக்கியத்தையும் அளித்து நீண்ட வாழ்வு செல்வம் இறப்பின்மை ஆகியவற்றைக் கொடுத்து அருள் புரிபவர்களாக வர்ணிக்கப்படுகின்றனர். அபாம் தபாத் என்னும். தேவர்கள் நீர்த் தேவதைகளின் புதல்வர்கள் என வர்ணிக்கப்படுகின்றனர். இவர்கள் மீது ஒரே ஒருபாடல் மட்டுமே உண்டு. பிருதுவி நிலத்தைக் குறிக்கும் தெய்வம். இத் தேவதை மேலும் ஒருபாடலே உண்டு.

இருக்கு வேதத்தில் முக்கிய இடம் பெறுபவன் அக்கினிதேவனே. இவனுக்கு இருநூற்றுக்கதிகமான பாடல்கள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய் இவன் முதுகு. சுவாலைகள் இவன் தலை மயிர், பழுப்பு நிறமான தாடி, கூரிய தாடைகள், பொன்மயமான கண் இவன் முக்காரம் இடும் எருதை ஒப்பான். இவன் கொம்புகள் கூரானவை. ஆகாயத்தில் திரியும் பொழுது கழுகு எனவும், தண்ணீரில் வசிக்கும் பொழுது அன்னப்பறவை எனவும் வர்ணிக்கப்படுகின்றான். இவன் மூலம் தேவர்கள் யாகங்களில் தம் பங்கைப் பெறுவர், தீ மூட்டும் இருகடைக்கோல்கள் இவன் பிறப்பிடம். காய்ந்த விறகிலிருந்து இவன் பிறப்பதாக வர்ணிக்கப்படுகின்றான். தேவர்களுக்கு அவிப்பாகத்தை எடுத்துச் செல்வதனால் இவனை ஹோதா என அழைப்பர்.

பிருஹஸ்பதி பற்றி பதினொரு பாடல்கள் உள்ளன. மந்திரங்களின் தலைவன் எனவும், கூரிய கொம்பும், நீல நிறம் பொருந்திய முகமும், பொன்னிற முடியும் உடையவனாக வர்ணிக்கப்படுகின்றான். நீண்ட ஆயுளைக் கொடுப்பவன். சோமன் வேதகாலக் தெய்வங்களுள் ஒருவனாக வர்ணிக்கப்படுகின்றான். சோமலதா எனும் செடியைப் பிழிந்து சோமரசம் எடுக்கும் முறையும், அதனைத் தேவர்களுக்கு அளிப்பதும் இங்கு குறிப்பிடப்படுகின்றது.

## வழிபாட்டு முறை

இயற்கையைப் பயத்தின் அடிப்படையிலும் பொருள், நீண்ட ஆயுள் வேண்டியும் வழிபட்ட மக்கள், நெருங்கிய ஒரு உறவினையே அங்கு வைத்திருந்தமையை அறிய முடிகின்றது. இயற்கைத் தேவர்களை வழிபடும் போது அதாவது யாகங்கள் கிரியைகள் செய்யும் போது 'நான், நெய், தேன், பால் முதலியனவற்றை ஆகுதிகளாக உனக்குத் தருகிறேன். நீபெரும் வீரர்களான புத்திரர்களையும், மாடு முதலிய செல்வங்களையும், நோயற்ற நீண்டவாழ்வினையும் தா' என வேண்டினர். மக்களுக்கும் தேவர்களுக்கும் மிகநெருங்கிய தொடர்பினை வேதகால மக்களிடையே காணமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யசுர் வேதம்

யசுர் செய்யுள்நடையிலும் உரைநடையிலும் அமைந்த வேள்வி மந்திரங்களைக் கொண்டுள்ளது. இவை வேள்விக் கிரியைகளைச் செய்யும் அத்துவரியு எனும் புரோகிதனால் ஓதுதற்குரியவை. இவை கிருஷ்ண யசுர்வேதம், சுக்கில யசுர் வேதம் என இருவகைப்படும்.

கிருஷ்ண யசுர்வேதம் வேள்வி மந்திரங்களை அவற்றிற்குரிய கிரியை நெறியை அறிவுறுத்தும் விதிகளோடு தருகிறது. சுக்கில யசுர்வேதம் அம்மந்திரங்களோடு கிரியை முறை பற்றிய விரிவான அறிவுறுத்தல்களைப் பிராமணம் எனப்படும் நீண்டதோர் பின்னிணைப் -பாகச் சேர்த்துத் தருகின்றது.

யசுர் வேதத்தில் கிரியைகள் மட்டுமன்றி மந்திரங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. தர்ச பூர்ண மாசத்துக்கு வேண்டிய மந்திரங்கள், பிண்ட பித்ரு யஞ்ஞத்திற்கு வேண்டிய மந்திரங்கள், நித்தியாக்கினி ஹோத்திர மந்திரங்கள், சதுர் மாஸ்யம் என்பன குறிப்பிடப்படுகின்றன. இவற்றுடன் இராசசூயவேள்வி, அவ்வேள்வியின் போது அக்கினி குண்டம் எவ்வாறு அமைக்கப்படவேண்டும், அஸ்வமேதயாகம், புருஷமேதயாகம் என்பனவும் குறிப்பிடப்படுகின்றன. ஈமக்கிரியைகளுக்கு வேண்டப்படும் மந்திரமும் இங்கு கூறப்படுகின்றது. காயத்திரி மந்திரத்தின் சிறப்பும் கூறப்படுகின்றது

ஓம் பூர் புவ ஸ்வஹ
தத் ஸவிதுர் வரேண்யம்
வர்தோ தெவஸ்ய தீமஹி
தியோ யோ ந பிரசோதயாத்

இ.வே.III

தெய்வத்திற்குப் பல பெயர் கொண்டு அழைக்கும் முறை இங்கு காணப்படுகின்றது. சதருத்திரியம் எனும் பகுதியில் அதனைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாம வேதம்

இங்கு இசையே முக்கியத்துவம் பெறுகின்றது. இதனை ஒதுபவர் உத்காதா என அழைக்கப்பட்டனர். இது இரு பிரிவுகளைக் கொண்டது. ஆர்ச்சிகம் - 585 பாடல்களையும், உத்தராச்சிகம்-400 பாடல்களையும் கொண்டு விளங்குகின்றது. யாப்பு முறை பற்றியே இப்பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு வரும் கானங்கள் எனும் பகுதி இராகங்கள் இன்னவை எனக் குறிப்பிடுகின்றன. அக்ஷரங்களை நீட்டியும் சிலவற்றை திரும்பத் திரும்பக் கூறியும் சில சொற்களை மேலதிகமாக உள்ளே நுழைத்தும் சாமகானம் நிகழ்த்தப்படும் என்பர்.

ஸ்வஹா, ஸ்வதா, வவுட், வேட் போன்ற மந்திரங்கள் இவ் வேதத்தில் சிறப்பிடம் பெறுகின்றன. ஸ்வாஹா என்பது மிக முக்கியமானது. அவியாக ஒவ்வொரு பொருளையும் அக்கினியில் சொரியும் போது வேட்போர் இதனை ஒலிப்பர். ஸ்வதா பிதிரர்களுக்கு உணவை அளிக்கும் போது இவ் ஒலியை எழுப்புவர். வவுட் வேட் வரத் இவை யாகங்களின் போது ஒலிக்கப்படுவன. பூ.புவ ஸ்வஹ இம்மூன்று அட்சரங்களும் விசேடமாகக் கூறப்படுபவை என்ற கருத்தை உணர்த்துவதால் 'வியாகிருதி' என்பர். இம்மூன்று அட்சரங்களும் விண்ணையும் மண்ணையும் இடையையும் குறிக்க வரும் சொற்களாகும். வேதங்களில் இவையே முக்கியத்துவம் பெறுகின்றன.

## அதர்வ வேதம்

இருக்கு வேதத்திற்கு அடுத்ததாக அதிமுக்கியம் வாய்ந்ததென்று கருதப்படுவது அதர்வ வேதமே. இருக்குவேதம் இயற்கைச் சக்திகளைத் தெய்வமாக வழிபடும் ஒரு சமய நிலையைக் காட்ட, அதர்வ வேதம் நன்மையும் தீமையும் பயக்கவல்ல பேய்களையும், பசாசுகளையும், அரக்கர்களையும் வேத சக்திகளையும் மாந்திரிகத்தாற் தன்வயப்படுத்தும் தன்மையது. நான்காவது வேதமாக இது முன்பு சேர்க்கப்படவில்லை. காலப்போக்கில் அதர்வ வேதம், இருக்குவேத பாடல்கள் சிலவற்றைச் சேர்த்தும் பிராமண இருஷிகளின் குலங்களின் முயற்சியினால்



5 – CM 014072

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமண சாயலைப் பெற்றும் நான்காம் வேதம் என்ற மதிப்பைப் பெறலாயிற்று.

அதர்வவேதத்தினை அதர்வாங்கிரஸ் பிருகுவாங்கிரஸ் என அழைப்பர். அதர்வவேதம் இருபது அத்தியாயங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. பிரமவேதம் எனவும் அழைப்பர். தெய்வங்களைப் பற்றிய பாடல்களும் உண்டு. தீங்கு விளைவிக்கும் மந்திரங்கள் இங்கு காணப்பட்டாலும் பிரயோகிப்பவரைப் பொறுத்தமட்டில் நன்மை பயப்பனவே. அதர்வ சம்ஹிதையில் எழுநூற்று முப்பத்தொரு சூக்தங்கள் உள. ஏறக்குறைய ஆறாயிரம் பாட்டுக்கள் இதில் அடங்கும். இருபது காண்டங்கள் உள்ள இவ்வேதத்தில் பதினான்காம் காண்டம் விவாகக் கிரியைகளைப் பற்றியும், பதினெட்டாம் காண்டம் மரணக் கிரியைகளைப் பற்றியும் குறித்து நிற்கின்றன. வேதத்தில் கூறப்படும் தெய்வங்களே இங்கு கூறப்பட்டாலும் மாந்திரிகமே முதலிடம் பெறுகிறது.

## பேஜயானி

அதர்வ வேத மந்திரத்தின் ஒரு பகுதி இது நோய் நீக்கவல்லது. நோயைத் தோற்றுவிக்கும், நோயைப் பெருகச் செய்யும், நோயைத் தீர்க்கும் மூலிகைகள் பற்றி இவை குறித்து நிற்கின்றன. நோய்தொற்றும் முறை பற்றியும் இம் மந்திரம் குறிப்பிடுகின்றது. ஆயுஷ்ய சூக்தங்களும் இதிலேயே அடங்கும். நோயை நீக்கினால் மட்டும் போதாது நீண்ட ஆயுளையும் அளித்தல் வேண்டும். நூறு சூத் காலங்கள் வாழ்வு அமைதல் வேண்டும். நூறு மழைக்காலங்கள் வாழ்தல் வேண்டும் என இந்நூல்கள் குறித்து நிற்கின்றன.

## பௌஷ்டிகானி

இவை நன்மை விளைவிப்பன. புதிதாக வீடு கட்டும் பொழுதும் உழும் பொழுதும் விதைக்கும் பொழுதும் பயிர் வளரும் பொழுதும் கிருமிகளும் புழுக்களும் பயிரை அழிக்கும் பொழுதும் நெருப்பினால் அபாயம் நிகழும் பொழுதும் இவை பிரயோகிக்கப்படும். மழையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெய்விக்கவும், மாட்டு மந்தையைச் செழிக்க வைக்கவும், அதைத் திருடர்கள் கவராது தடுக்கவும், வர்த்தகம் நன்கு நடைபெறவும், சூதாட்டத்தில் வெற்றி ஈட்டவும், பாம்பைக் கட்டி வசப்படுத்தவும் இவை உபயோகப்படுத்தப்படும்.

மூன்று வேதங்களிலும் புரோகிதர் யாகத்தை நடத்துவதற்குரிய விதிகள் கூறப்பட்டுள்ளன. யாகத்தை நடத்தும் போது விடப்படும் தவறுகள், மந்திர உச்சாடனத்தில் ஏற்படும் தவறுகள் முதலியவற்றைக் கவனித்து அவற்றின் தீய விளைவுகளை நிவர்த்தி செய்யுமுகமாகச் செய்யப்படும் பிராயச்சித்தம் விரிவாக இவ்வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்திரி கர்மாணி என்று குறிப்பிடப்படுவை ஆண், பெண் உறவில் வெவ்வேறு நிலைகளிற் பிரயோகிக்கப்படுவன. ஓர் இளம் பெண்ணோ, ஆடவனோ தான் விரும்பும் வாழ்க்கைத் துணையைப் பெற விரும்பி உச்சரிக்கும் மந்திரங்கள். புதுத் தம்பதியினர்களுக்கான ஆசீர்வாதங்கள், புத்திரப்பேற்றிற்காகவும், ஆண்மகவிற்காகவும் உச்சரிக்கப்படும் மந்திரங்கள், கர்ப்பத்தில் இருக்கும் சிசுவைக் காக்கும் மந்திரங்கள் இதில் அடங்கும். காதலிலும் தாம்பத்தியத்தில் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்க்கும் மந்திரங்கள், கணவனின் சந்தேகத்தைப் போக்க மனைவி உச்சரிக்கக் கூடிய மந்திரங்கள், நடுநிசியிற் காதலியைச் சந்திக்க செல்லும் காதலன் அவன் இல்லத்திலுள்ளோர், காவல் நாயும் கூட ஆழ்ந்த நித்திரையிலிருக்க வேண்டுமென்று உச்சரிக்கும் மந்திரம் யாவும் இதில் இடம்பெறுகின்றன.

மிரகார சூக்தானி என்பன சந்தோஷத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும் வேண்டும் பொதுவான மந்திரங்களாகும். இங்கு காணப்படும் ஏழு பாடல்கள் முறையே அக்கினி, இந்திரன், வாயு, சவித்திரு, ஆகாயம், பூமி மருத்துக்கள் பவ, சர்வ மித்திரன், வருணன் ஆகிய தேவர்களுக்கு ஏறெடுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மை பயக்கும் மந்திரங்கள் பல இங்கு காணப்பட்டாலும் பலாத்காரமாக ஒருவனது அன்பைப் பெற உதவும் மந்திரங்கள் பெண்கள் திருமணமாகாமல் கன்னியாகவே இருக்க வேண்டும் மென்று சபிக்கும் மந்திரங்கள், ஆடவன் வீரியத்தை இழக்கவும் பெண் மலடியாகவும் மாற்றக் கூடிய மந்திரங்களும் அதர்வ வேதத்தில் உண்டு. இதனாலே இதனை நான்காவது வேதமாக ஏற்றுக் கொள்வதற்கு தயங்கினர் எனலாம்.

.......................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபநிடதங்கள்

திரு. கி. லக்ஷ்மணன் (இந்திய தத்துவஞானம்)

## பிரஸ்தானத் திரயத்தில் உபநிடதம்

இந்து சமயங்கள் அனைத்துக்கும் அடிப்படையாக மூன்று நூல்களைக் குறிப்பிடுவது வழக்கம். இம்மூன்று நூல்களையும் சேர்த்துப் 'பிரஸ்தானத் திரயம்' எனக் குறிப்பிடுவதுண்டு. 'பிரதானமான மூன்று' என்பதை உணர்த்தும்பொருட்டே இப்பிரயோகம் ஏற்பட்டதெனலாம். இம்மூன்றுள் ஒன்றுதான் உபநிடதம். மற்றைய இரண்டும் பிரம்மசூத்திரமும் பகவத்கீதையும் ஆகும். இந்து சமயங்களுக்கு இம்மூன்றுமே மிக முக்கியமானவை எனினும், இவற்றுள் உபநிடதமே மிக முக்கியமானது எனக் கொள்வது மிகையாகாது. இந்து சமயங்களுக்கு மட்டுமன்றி இந்திய தத்துவ ஞானம் முழுவதற்குமே இந்த உபநிடதத்தை மூலமாகக் கொள்ளலாம். இந்திய தத்துவ ஞானிகள் அனைவரையும் இரு பிரிவாகப் பிரிக்கலாம். ஒரு பிரிவினர், வேதங்களிலும் உபநிடதங்களிலும் கூறப்படுவனவற்றை ஏற்றுக்கொள்வோர். மற்றப் பிரிவினர் அவற்றை ஏற்க மறுத்து, அம்மறுப்பை அடிப்படையாகக் கொண்டு புது மதங்களைத் தாபித்தோர். இந்த இரண்டாவது. பிரிவினருடைய கொள்கைகள் தோன்றுவதற்கு உடன்பாட்டு முகமாக ஆகாவிடினும், எதிர்மறைமுகமாகவாவது மூல காரணமாயிருந்தவை இவ்வுபநிடதங்களே. ஆகையால், ஒரு விதத்திலே இந்திய தத்துவ ஞானம் அனைத்துக்கும் உபநிடதங்களே மூல இலக்கியங்கள் என்பது தவறாகாது. இத்தகைய சிறப்புடைய உபநிடதங்களைப் பற்றிய முக்கிய விவரங்கள் சிலவற்றை இங்கு குறிப்பிடுவோம். முதலிலே உபநிடதங்களைப் பற்றிய பொதுவான விவரங்கள் சிலவற்றைக் குறிப்பிடுவோம்.

வேதங்களை மந்திரப் பகுதி, பிராமணப் பகுதி, உபநிடதப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி என மூன்றாகப் பிரிப்பது மரபு. இங்ஙனம் மூன்றாகப் பிரித்த போதும் மூன்றையும் சேர்த்து வேதங்கள் என வழங்குவதுண்டு என்பதே அக்கட்டுரையிலே நாம் குறிப்பிட்டது. இது ஒரு சமாதானம். மற்றது, "வேதங்களின் சாரமே உபநிடதங்கள்: ஆகவே, வேதங்களைக் குறிப்பிடாமல் உபநிடதங்களைக் குறிப்பிடுவதில் குற்றமெதுவுமில்லை" என்பது. உபநிடதங்களுக்கு வேதாந்தம் என்று ஒரு பெயருமுண்டு. வேதங்களின் வரிசையில் அந்தமாக, கடைசியாக வைக்கப்பட்டவை என்பதல்ல. உபநிடதங்களுக்கு இப்பெயர் ஏற்பட்டமைக்கு முக்கிய காரணம், வேதங்களின் முடிவை, அதாவது வேதங்களின் உட்கிடையைக் கூறுகின்றன என்பதே உபநிடதங்களுக்கு வேதாந்தம் என்ற பெயர் ஏற்பட்டதற்கு முக்கிய காரணமாகும். ஆகவே, பிரஸ்தானத்திரயத்தில் வேதங்கள் இடம்பெறாவிடினும் அவற்றின் உட்கிடையாகிய உபநிடதங்கள் இடம்பெறுவது வேதங்கள் இடம்பெறுவதற்குச் சமானமாகும் எனக் கருதலாம்.

உபநிடதம் பிரஸ்தானத் திரயத்தில் ஒன்றாகக் கொள்ளப்படுவதிலிருந்து அதன் முக்கியத்துவத்தையும் அப்பிரஸ்தானத் திரயத்திலே வேதம் இடம் பெறாமல் உபநிடதமே இடம் பெறுவதற்குரிய நியாயங்களையும், வேதத்தில் கன்மத்தை விதந்து பேசும் பகுதியாகிய பிராமணமும், ஞானத்தை விதந்துபேசும் பகுதியாகிய உபநிடதமும் ஒன்றையொன்று எதிர்ப்பன எனக் கருதுவது தவறு என்பதையும் இதுவரை விளக்கினோம். இனி உபநிடதம் என்ற சொல்லுக்குக் கருத்து என்ன, உபநிடதங்களின் அமைப்பு முறையாது, அவை யாரால், எக்காலத்தில் ஆக்கப்பட்டன, அவை எப்பொருளைப்பற்றிப் பேசுகின்றன, அப்பொருளைப்பற்றி என்ன பேசுகின்றன என்பனவற்றை ஒவ்வொன்றாக ஆராய்வோம்.

## பெயருக்குக் காரணம்

உபநிடதம் என்ற வடமொழிச் சொற்களுக்குச் சிரத்தையோடு மிகச் சமீபத்தில் இருத்தல் என்பதே நேர்க்கருத்து. குருவுக்கு மிகச் சமீபத்தில் சிரத்தையோடு உட்கார்ந்த சீடனுக்குக் குரு உபதேசித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபதேச மொழிகளே உபநிடதங்களாகும். சீடன் எதை அறிய விரும்பினான். குரு அவனுக்கு எதை உபதேசித்தார் என்பதைப் பின்பு குறிப்பிடுவோம். எல்லோரும் அறியக்கூடாத இரகசியத்தைப் பேசுகிறவர்களே ஒருவரோடொருவர் மிக நெருங்கியிருந்து பேசுவது வழக்கம். உபநிடதங்கள் போதிப்பனவும் எல்லோருக்கும் சொல்லக்கூடாத பரம இரகசியங்கள் என்ற கருத்தும் இப்பெயரிடுகை மூலம் தொனிக்கின்றது. வேதத்துக்கு மறை என்றொரு பெயருண்டு. வேதத்தில் ஒரு பகுதியாகிய உபநிடதத்துக்கு அப்பெயர் பொருந்தும். மறை என்பதற்கு ஒரு விளக்கம் வேதத்தைப்பற்றிய கட்டுரையிலே குறிப்பிட்டோம். இங்கு இன்னொரு விளக்கத்தைக் குறிப்பிடுவோம். வேத உபநிடதக் கருத்துகள் இரகசியமாக இருக்க வேண்டும்; எல்லோரும் அறியாமல் அவற்றை மறைத்து வைத்திருக்க வேண்டும் என்னும் போது பெண்களோ அல்லது குறிப்பிட்ட சில சாதியினரோ அவற்றை அணுகாது அவர்களிடமிருந்து அவற்றை மறைத்து வைத்திருக்க வேண்டுமெனக் கொள்ளலாகாது. உபநிடதக் கருத்துகளை அறிவதால் பயன்படத்தக்க பரிபக்குவத்தை அடையாதவர்களுக்கு அவை உரியனவல்ல. அத்தகையவர்களிடமிருந்து அவற்றை மறைத்து வைப்பதே நன்மை பயக்கும் என்பதே நோக்கமாகக் கொள்ள வேண்டும். இங்ஙனம் கொள்வதே பொருத்தம் என்பதற்கு உபநிடதங்களிலேயே தக்க ஆதாரம் உண்டு. அன்றியும், எத்தனையோ முனிவர்கள் தம்மிடம் வந்த எல்லோருக்குமே தங்கள் உபதேசங்களை உபதேசிக்கவில்லை. சீடராக வந்தவர்களைப் பலவித சோதனைகளுக்குள்ளாக்கி, அவர்களுள் தகுதியற்றவர்களை விலக்கிவிட்டுத் தகுதியுடையோர் எனக் கண்டவர்களுக்கே ஆத்மிக உண்மைகளை முனிவர்கள் உபதேசித்ததாகப் பல சான்றுகளை உபநிடதங்களிலே காண்கிறோம்.

## அமைப்பு முறையும் அதன் விளைவும்

உபநிடதம் என்ற பெயரின் விளக்கத்தையும், அப்பெயர் உபநிடதங்களிலே பேசப்படும் விஷயத்துக்கு எவ்வாறு பொருந்தும் என்பதையும் இதுவரை காட்டினோம். உபநிடத நூல்களின் அமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைபற்றி இரண்டொரு வார்த்தைகள் கூறுவதற்கு இதுவே ஏற்ற இடமாகும். மேலே கூறியதிலிருந்து குருவுக்கும் சீடனுக்குமிடையில் நடந்த உரையாடல்களே பெரும்பாலும் உரையாடல் வடிவத்திலேயே அமைந்தவையே உபநிடதங்கள் என்பதை உணரலாம். பற்பல சமயங்களில் பற்பல முனிவர்கள் தங்களை அணுகிய சீடர்கள் வினாவிய வினாக்களுக்கு அளித்த விடைகள் யாவும் உபநிடதங்களில் இடம் பெற்றுள்ளன. உபநிடதம் முழுவதையும் ஒரே ஓர் ஆசிரியரே ஆக்காத காரணத்தால் எந்த ஒரு விஷயமும் தொடர்ச்சியாகவோ, ஓர் ஒழுங்குக்கு உட்படவோ ஆராயப்படுவதை உபநிடதத்திலே நாம் எதிர்பார்க்க முடியாது. ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் பற்பல இடங்களில் பற்பல விதமான குறிப்புகளைக் காணலாம். அவையாவற்றையும் ஒருங்கு கொணர்ந்து ஒழுங்குபடுத்தினால் தான் அவ்விஷயத்தைப்பற்றி முடிவாக உபநிடதங்கள் என்ன கூறுகின்றன என்பதை அறிய முடியும். அவ்வாறு செய்வது சுலபமான செயலன்று. குறிப்பிட்ட ஓர் உரையாடலில் ஆராய்ச்சிக்காக எடுத்துக்கொள்ளப்படும் விஷயத்தைப் பற்றி நாம் அறிய விரும்பும் விவரம் யாவும் அந்த உரையாடலிற் காணப்படுவதில்லை. சீடன் எழுப்பிய வினாக்களுக்கோ தடைகளுக்கோ மட்டும் விடை காணப்படும். அந்த விஷயத்தைப்பற்றிய குறிப்புகள் எங்கெங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அங்கங்கெல்லாமிருந்து அவற்றை எடுத்து ஒன்று சேர்த்தாலும் நாம் அவ்விஷயத்தைப்பற்றி அறிய விரும்பும் அனைத்தையும் அறிய முடியாது போதலுங் கூடும். ஒரே விஷயத்தைப்பற்றியே ஒரு முனிவர் ஒரு விதமாகவும், வேறொரு முனிவர் வேறுவிதமாகவும் கூறியிருக்கவும் காண்கின்றோம். இவைகளே உபநிடதங்களை நாம் பூரணமாக விளங்கிக்கொள்ளுவதற்குத்தடையாயிருப்பவை. பிற்காலத்தில் உபநிடதங்களுக்கு விளக்கமெழுதிய சங்கரர், இராமானுசர் போன்றோர் தம்முள் மாறுபட்டு, அதன் விளைவாக இந்து சமயத்துள்ளேயே பல உட்பிரிவுகளை ஏற்படுத்தியமைக்கும் இவைதாம் காரணம். உபநிடதங்களை நாம் பூரணமாக விளங்கிக்கொள்வதற்கு அவற்றின் அமைப்பில் எத்தகைய தடைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோதிலும், கருத்து வேறுபாடுகளுக்குச் சிற்சில உபநிடதக் கூற்றுகள் எவ்வளவு தூரம் இடந்தந்தபோதிலும் இந்திய தத்துவஞான சமய ஞானத் துறைகளிலேயுள்ள அடிப்படைக் கொள்கைகள் பலவற்றுக்கும் உபநிடதங்களே தோற்றிடமென்பதில் ஐயமில்லை.

## தொகையும் காலமும்

எல்லாமாக இருநூற்றுக்கு மேற்பட்ட உபநிடதங்கள் உள. அவற்றுள் நூற்றெட்டு பிரதானமானவை. அந்நூற்றெட்டுள்ளும் பத்தே மிக முக்கியமாகக் கருதப்படுபவை. அப்பத்துக்கும் சங்கரர் விளக்கம் எழுதியுள்ளார். சங்கரர் விளக்கமெழுதிய காரணத்தாலேயே அப்பத்தும் மிக முக்கியமாயின எனக் கொள்வாருமுளர். அவற்றுள் பெரும்பாலானவை புத்தர் பிறப்பதற்கு முன்பே ஆக்கப்பட்டவை. காலத்தால் முற்பட்ட உபநிடதங்கள் வசன நடையிலே உள்ளன. காலத்தால் பிற்பட்டவையே செய்யுள் நடையில் உள்ளவை.

## உபநிடதங்களை ஆக்கியோர்

இவ்வுபநிடதங்களை ஆக்கியவர்கள் முனிவர்கள் என்பதை முன்பே குறிப்பிட்டுவிட்டோம். இவர்கள் உள்ளுணர்வுடையவர்கள்; தெய்வ அருள் பெற்றவர்கள். தாங்கள் கூறுவனவற்றை அனுபவ வாயிலாகக் கண்டவர்களெனக் கொள்ளத்தக்கவர்கள். தமது சொந்த வாழ்க்கை விவரங்களைப் பிறர் அறியச் செய்வதில் சிறிதும் அக்கறை கொள்ளாதவர்கள். அதனால் தான் அவர்களுள் சிலருடைய பெயர்கள் தவிர, அவர்களுடைய வாழ்க்கை வரலாறு பற்றிய விவரம் எதுவும் கிடைக்கவில்லை

## உபநிடத உரையாடல்கள்

உபநிடதங்களிலே காணப்படும் உரையாடல்கள் சிலவற்றின் சுருக்கத்தை இங்குக் குறிப்பிடுவதே உபநிடதங்கள் எதைப்பற்றிப் பேசுகின்றன என்பதை உணர்த்துவதற்கு நேர்வழி. குருவுக்கும் சீடனுக்குமிடையில் நிகழ்ந்த உரையாடல்களே உபநிடதங்களாயமைந் -துள்ளன. சீடன் எதையெதை அறிய விரும்பினான், குரு அவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையெதை உபதேசித்தார் என்பனவற்றை அறிந்தால் உபநிடதப் பொருளை ஓரளவு அறிந்தவர்களாவோம். ராஜாஜி 'உபநிஷதப் பலகணி' என்ற பெயரில் சிறிய நூலொன்றை வெளியிட்டிருக்கின்றார். ராஜாஜி அவர்களுடைய ஏனைய நூல்களைப் போலவே இதுவும் நமக்கு நன்கு பயன்படத்தக்க நூல். வடமொழியிலுள்ள சில உபநிடதப் பகுதிகளை ராஜாஜி தமது நூலிலே சுருக்கித் தமிழ்ப்படுத்தியிருக்கின்றார். உபநிடதம் பேசும் பொருளை அறிவதற்கு இச்சிறு நூலிலிருந்து சில உதாரணங்களை எடுத்துக்கொண்டாலே போதும்.

**சந்தேகங்கள் எதைப்பற்றியன**

உபநிடதங்களிலே காணப்படும் குரு சீடர்கள் பல திறப்படுவர். சில இடங்களில் மனைவி சீடராகவும் கணவனே குருவாகவும் அமைவதைக் காண்கின்றோம். வேறு சில இடங்களில் மகனே சீடனாகவும் தந்தையே குருவாகவும் அமைவதைக் காண்கின்றோம். இன்னுஞ் சில இடங்களில் யமனே குருவாகவும் அவனிடம் செல்லும் சீவனே சீடனாகவும் அமைவதைக் காண்கின்றோம். இச் சீடர்களுக்கெழும் சந்தேகங்களுள் எதுவும் விஞ்ஞானம், பொருளாதாரம், சமூகம் போன்ற உலகியல் ஞானம் பற்றியதன்று. எவ்வளவு பெருந்தொகையான செல்வத்தை ஈட்டிக்கொண்ட போதிலும். விஞ்ஞானத்தின் துணைகொண்டு விதம் விதமான எத்தனை அற்புத சாதனங்களைக் கண்டுபிடித்த போதிலும் நம் வாழ்வு பூரண சுகமுடையதாயில்லை; நம் மனமும் திருப்திப்படுவதாயில்லை. அளப்பரிய செல்வமோ, நம் வாழ்வை இனிதாக்குவதற்கென ஆக்கப்படும் நவீன விஞ்ஞான சாதனங்களோ இந்தமானிட ஜன்மத்தின் நோக்கத்தையோ, இப்பிரபஞ்சத்தின் இரகசியங்களையோ அறியத் துணை செய்ய வல்லனவாயில்லை. பண்டைய இந்தியாவில் வாழ்ந்த தலைசிறந்த சிந்தனையாளர் பலர். இவ்வுலக வாழ்வை இன்பமாக்குவதற்கான சாதனங்கள் சிலவற்றையாவது கண்டுபிடிக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர்களாயிருந்தபோதிலும். அவர்கள் அத்திசையிலே தங்கள் சிந்தனையைச் செலவிடாததற்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமும் இதுவேயாகும்.

## மைத்திரேயியும் யஜ்ஞவல்கியரும்

உபநிடதங்களிலே வரும் சீடர்கள் வினவிய வினாக்கள் சிலவற்றை இப்போது குறிப்பிடுவோம். யஜ்ஞவல்கியர் என்பவர் இல்லறத்தை முடித்துவிட்டுத் துறவறத்தை மேற்கொள்ளப் புறப்படும்போது தம் மனைவி மைத்திரேயி என்பவளைப் பார்த்து, "மேற்கொண்டு நீ வாழ்வதற்கு வேண்டிய செல்வத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டு யான் வனம் செல்லக் கருதுகிறேன்" எனக் கூறினார். அதற்கு மைத்திரேயி, "பகவானே, சகல சம்பத்துகளையும் வைத்து இந்தப் புவி முழுவதையும் நீர் எனக்குத் தந்தாலும் அதைக்கொண்டு நான் இறவாமை அடைவேனா?" என்றாள். யஜ்ஞவல்கியர், "அது எவ்வாறு முடியும்? செல்வத்தினால் என்ன சுகங்கள் அடையலாமோ அவற்றையெல்லாம் நீயும் அடையலாம். இறவாமையை எதிர் பார்த்தல் கூடாது" என்றார். மைத்திரேயி, "முத்திதராத செல்வத்தை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வேன்? தாங்கள் வனம்போகுமுன் மெய்ஞானத்தை உபதேசித்தருளுவீராக" என்றாள். உடனே அவர் அவளைத் தம் அருகில் உட்காரவைத்து, மெய்ப்பொருள்பற்றிய உபதேசத்தைத் தொடங்குகின்றார்.

## நாரதமுனிவரும் சநற்குமாரரும்

நாரத முனிவர் சநற்குமாரரிடம் சென்று, "எனக்கு நான்கு வேதங்களும் தெரியும். இதிகாசங்கள், புராணங்கள் அனைத்தும் அறிவேன். கர்மங்கள், மந்திரங்கள் யாவும் அறிவேன். கணிதம், சோதிடம், காலஅளவுசாஸ்திரம், வியாகரணம், காவியம், யாப்பியல், அலங்காரம், பூத நூல்கள், ஆயுத நூல்கள், வான சாஸ்திரம், நாட்டியம், சங்கீதம் முதலிய எல்லாக் கலைகளும் கற்றிருக்கிறேன். இவைகளை எல்லாம் அறிவேனாயினும் ஆத்மாவைப்பற்றி நான் அறியவில்லை. ஆத்ம ஞானம் அடைந்தால்தான் துக்கம் தீரும் என்று தங்களைப் போன்ற பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். இன்னும் துக்கம் எனக்குத் தீரவில்லை; எனக்கு ஞானம் அருள்வீராக"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறினார் என்று சொல்லப்படுகின்றது.

## நசிகேதனும் யமனும்

யமனிடம் சென்ற நசிகேதன் என்ற இளைஞன் ஒருவன், யமன் அவனுடைய வருகையை அறிந்து எதிர்பார்த்திராத காரணத்தால் மூன்று நாள் காத்திருந்த பின்னரே யமனைக் காணக்கூடியதாயிற்று. விருந்தாக வந்தவனை மூன்று நாள் காக்கவைத்த குற்றத்துக்கு மன்னிப்புக் கோரு முகமாக யமன் தன்னிடம் மூன்று வரங்கள் கேட்குமாறு நசிகேதனை வேண்டினான். நசிகேதன் முதலாம் வரமாகத் தன்மீது கோபம் கொண்டிருந்த தன் தந்தையைச் சாந்தப்படுத்த வேண்டுமென்றும், இரண்டாம் மூன்றாம் வரங்களாகப் பரம்பொருளைப்பற்றிய அறிவைத் தனக்குத் தர வேண்டுமென்றும் வேண்டியதாக உபநிடதம் கூறுகின்றது.

ஆத்மா என்பது எத்தகைய பொருள், அது தேகத்துக்குள் எவ்வாறு மறைந்து நிற்கிறது, உடலுக்கும் ஆத்மாவுக்கும் என்ன உறவு என்பன போன்ற வினாக்களையும் நசிகேதன் யமனிடம் வினவியதாகக் கூறப்பட்டுள்ளது.

சூரியனுடைய ஒளி, சந்திரனுடைய நிலவு, வேறு வெளிச்சம் ஆகியவற்றின் துணையினாலேயே பொருள்களைக் காண்கிறோம். ஆயினும், நம் கண்ணுக்குள் படைத்த உணர்வெனும் ஒளி இல்லையேல் இப்புறஒளிகள் பயன்படா. பொருள்களைப் பார்ப்பது உள்ளத்துள் உள்ள ஒளியேயன்றி வெளியில் உள்ள ஒளியல்ல. ஒளிக்கெல்லாம் ஒளியாகி நம்முன் நிற்கும் பேரொளியே அந்தராத்மா. இந்த அந்தராத்மா தானாக ஒளிர்கிறதா அல்லது ஈசுவரனுடைய ஒளியினால் ஒளிர்கிறதா என்பது இன்னொரு வினா.

## இந்திரனும் பிரஜாபதியும்

இந்திரனும் விரோசனனும் பிரஜாபதியிடம் சென்று, “ஐயனே மூப்பு, மரணம், சோகம், பசி, தாகம் இவைகளில் யாதும் தீண்டாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மா என்ற ஒன்று உண்டென்றும், அதுவே அறியத்தக்கதும் அடையத்தக்கதுமான பொருள் என்றும், அதை ஒருவன் அடைந்துவிட்டால் எல்லாப் பதங்களும் பேரின்பங்களும் அடைவான் என்றும் தாங்கள் சொன்னதாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். அந்தப் பொருள்களைக் காண வந்தோம். ஆத்மா என்பது எது? எனக் கேட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

## சுவேதகேதுவும் உத்தாலகரும்

நிற்க; "அனைத்தும் ஒரு சக்தியிலிருந்து வந்ததாகச் சொல்லுகிறீர்களே, இந்த அற்புத உலகமும், இந்தப் பல்லாயிர உருவ வேற்றுமைகளும் பெயரும் வடிவுமற்ற ஒரு பொருளிலிருந்து எவ்வாறு உண்டாயின?" என்று சுவேதகேது என்பவன், தன் தந்தையாகிய உத்தாலகரிடம் வினவியதாகச் சொல்லப்பட்டுள்ளது. இது 'சாந்தோக்கியம் எனப்படும் உபநிடதத்தில் உள்ளது. இதே உபநிடதத்தில் இந்தச் சுவேதகேதுவே " உலகம் முழுவதும் பரவியிருக்கும் இந்தப் பொருள் எங்ஙனம் மறைந்து போயிற்று? என்றும் தன் தந்தையிடம் கேட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

பிற்கால இந்திய தத்துவ தரிசனங்களனைத்தினது விரிவுக்கும் வளர்ச்சிக்கும் உபநிடதங்கள் எவ்வாறு அடிகோலின என்பதை உணர்த்துவதற்கு இவ்வினாக்களே போதும்.

## இருபிரிவுகள்

உபநிடதங்கள் எதைப்பற்றிப் பேசுகின்றன என்பதை உணர்த்துவதன்பொருட்டு உதாரணமாக இதுவரை சில வினாக்களைக் குறிப்பிட்டோம். இந்த வினாக்கள் அனைத்திலும் இடம் பெறும் பொருள் முழுவதையும் இரண்டு பிரிவுள் அடக்கலாம். ஒன்று, நம்முள் நின்று நம்மை இயக்கும் சக்தி; மற்றது, நமக்கு வெளியே நம் புலன்களுக்கு விஷயமாய் இருக்கும் புறவுலகும் அதன் அடிப்படையும்; ஒன்று, புறவுலகு; மற்றது, அகவுலகு. ஒன்று, விஷயம்; மற்றது, விஷயி. ஆங்கிலத்தில் இவற்றை Object and Subject என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் ஒவ்வொருவருக்கும் உள் நின்று நம்மை இயக்கும் சக்தி ஆத்மா எனப்படும். இப்பிரபஞ்சம் அனைத்துக்கும் மூல காரணமான பொருள் பிரம்மம் எனப்படும். ஆத்மா, பிரம்மம் ஆகிய இந்த இரண்டுமே நாம் மேலே குறிப்பிட்ட இரு பிரிவுகள். ஆத்மா, பிரம்மம், அவையிரண்டுக்குமுள்ள தொடர்பு ஆகிய மூன்றுமே உபநிடதங்கள் முழுவதிலும் பேசப்படும் விஷயம். ஆத்மாவுக்கும் பிரம்மத்துக்குமுள்ள தொடர்பு மிக நெருங்கியது என்பதைப் புலப்படுத்தும்பொருட்டு இரண்டையுமே ஆத்மா எனக் குறிப்பிடுவதுமுண்டு. ஆயினும், அவற்றுக்கிடையிலுள்ள வேற்றுமையைக் காட்டுவதற்காக ஆத்மாவைச் சீவாத்மா என்றும் பிரம்மத்தைப் பரமாத்மா என்றும் கொள்வதுமுண்டு. உபநிடதம் பொருளைக் குறிப்பிடுவதன் பொருட்டு அங்கு எழுப்பப்படும் வினாக்களுக்கு மட்டுமே சில உதாரணங்களை இதுவரை தந்தோம். அந்த வினாக்களுக்குக் கொடுக்கப்பட்ட விடைகளை அறிய எவரும் ஆவற்படுவது இயல்பு. ஆத்மாவின் இயல்பு யாது, பிரம்மத்தின் இயல்பு யாது, அவை இரண்டுக்குமுள்ள தொடர்பு எத்தகையது என்ற வினாக்களுக்கு உபநிடதங்களிலே கூறப்பட்டிருக்கும் விடைகளைச் சுருக்கிக் கூறுவது இலகுவான செயலன்று. அன்றியும், மனிதனுடைய வார்த்தைகள் அவற்றைப் பூரணமாக விளக்குவதற்கு ஏற்ற ஆற்றல் வாய்ந்தவையுமல்ல. இருப்பினும், விடைகள் எந்த ரீதியில் செல்லுகின்றன என்பதைக் காட்டுவதன்பொருட்டு இரண்டொரு உதாரணங்களை இங்கு குறிப்பிடுவோம்.

## ஆத்மா

முதலில் ஆத்மாவை எடுப்போம். ஆத்மாவைப்பற்றி அறியும்பொருட்டுப் பிரஜாபதியிடம் சென்ற இந்திரன், விரோசனன் ஆகிய இருவருடைய மனோ நிலையையும் பரீட்சிக்கும்பொருட்டுச் 'சரீரமே ஆத்மா' எனப் பிரஜாபதி கூறியதாகவும், அசுரர் பிரதிநிதியாகிய விரோசனன் அந்த விடையோடு திருப்திபட்டுக்கொண்டு சரீரத்தைப் பூசிப்பதில் கருத்தைச் செலுத்தத் தலைப்பட்டதாகவும், தேவர் பிரதிநிதியாகிய இந்திரன் அந்த விடையில் திருப்தி காணாது மேலும் வினவ ஈற்றில் பிரஜாபதி, "வண்டியில் கட்டிய குதிரையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் ஆத்மா சரீரத்தில் கட்டுப்பட்டு நிற்கிறது. காண்பது கண் அல்ல; கண்ணைக் கருவியாகக் கொண்டு காண்பது ஆத்மா. பேசுவது நாக்கல்ல : நாக்கைக் கருவியாகக்கொண்டு பேசுவது ஆத்மா. காதைக்கொண்டு இதைக் கேட்பேன் என்பது ஆத்மா, மனதும் ஆத்மா அல்ல. இதை எண்ணுவேன் என்று மனத்தைக்கொண்டு எண்ணுபவனும், மனத்தை அடக்குபவனும் ஆத்மா. மனத்தையே கண்ணாகக்கொண்டு தியானத்தில் மூழ்கிப் பரமாத்மாவைக் கண்டு ஆனந்தம் கொள்பவன் ஆத்மா. இவ்வாறு உடலினின்றும், இந்திரியங்களினின்றும், உடலின் செயல்களினின்றும், மனத்தினின்றும் வேறான பொருளே ஆத்மா. அது தன்னில் தானே பரமானந்தம் அடையும். சரீரம் வேறு, அது வேறு" எனக் கூறியதாக அறிகிறோம். இது ஆத்மாவைப்பற்றிய விடைகளுள் ஒன்று.

## பிரம்மம்

இனிப் பிரம்மத்தைப்பற்றிய விடைகளுள் ஒன்றைக் குறிப்பிடுவோம். "சொல்லால் பிரம்மத்தை விளக்க முடியாது. அதனின்று அல்லவோ சொல் என்பதே உண்டாகின்றது. மனத்தைக்கொண்டு நினைப்பது பிரம்மம் அல்ல : எந்தச் சக்தியால் மனம் நினைக்கின்றதோ அதுவே பிரம்மம். கண்ணால் பார்ப்பது பிரம்மம் அல்ல. பிரம்மத்தினால் கண் பார்க்கிறது. காதுகளால் கேட்பது பிரம்மமல்ல. எதனால் காது கேட்கிறதோ அதுவே பிரம்மம். உயிர்ப்பதும் பிரம்மம் அல்ல. எதனால் சுவாசம் சுவாசிக்கிறதோ அதுவே பிரம்மம். வண்டி ஓடுவது சக்கரம் உருளுவதால். வண்டி, சக்கரத்தை உருட்டிப் பார்ப்பது போலாகும், நம் அறிவினால் பிரம்மத்தைக் காணப் பார்ப்பது. இதை இன்னோர் உவமை மூலம் கூறுவதாயின் ஒருவன் தான் தன் தோள்மீதே ஏறி நிற்க முயல்வது போன்றதே பிரம்மத்தைக் காணப்பார்ப்பது. அது நித்தியமாய் எங்கும் பரவிநிற்கும் மிகநுட்பமான பொருள். அது அழிவற்றது. அனைத்துக்கும் அது பிறப்பிடம்.

சிலந்திப்பூச்சி தன்னிலிருந்து நூலை உண்டாக்கி, அதைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிக்கொண்டு நிற்கிறது. அதைப் போலவும், பூமியிலிருந்து செடிகள் உண்டாவது போலவும், தலையிலும் உடலிலும் மயிர் முளைப்பது போலவும் உலகம் யாவும் அப்பிரம்மத்திலிருந்து உண்டானவை.

நுட்பமான ஒரு பொருளிலிருந்து இப்பருப்பொருள்கள் யாவும் எங்ஙனம் உண்டாயின என்ற வினாவுக்கு மிக நுண்ணிதான ஆலம் வித்திலிருந்து கிளைகளும் இலைகளும் விழுதுகளும் கொண்ட பிரம்மாண்டமான விருட்சம் உண்டாவது போல என்றும், உலகம் முழுவதும் பரவியிருக்கும் இப்பரம்பொருள் மறைந்திருப்பது எங்ஙனம் என்பதற்குத் தண்ணீருள் கரைந்த உப்பின் உருவம் கண்ணுக்குப் புலப்படாதபோதும், அதன் இயல்பு தண்ணீர் முழுவதும் செறிந்திருப்பது போல என்னும் உவமைகள் மூலம் விடைகள் கூறப்பட்டுள்ளன.

### சீவாத்மாவும் பரமாத்மாவும்

சீவன் தானாக ஒளிர்கிறதா, சீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்குமுள்ள தொடர்பென்ன என்ற வினாக்களுக்குத் "தேகத்துக்குச் சீவாத்மா எப்படியோ அப்படியே சீவாத்மாவுக்குப் பரமாத்மா. தேகத்தை, அதாவது சேதன மற்ற ஒரு சவத்தை உயிரும் சேதனமும் கொண்ட பொருளாக்கி அதற்குள் அந்தர்பாவமாய் சீவன் இருந்து வருகிறது. அம்மாதிரியே சீவனுக்கும் பரமாத்மா அந்தர்பாவமாய் நின்று, அந்தச் சீவனைத் தாங்கி வருகிறது. பரமாத்மா இன்றிச் சீவனில் ஒன்றுமிராது. அது உயிரற்ற உடலைப் போலாகிவிடும் என்பன போன்ற விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

### உடலை இயக்கும் சக்தி

படுக்கையிலே கிடக்கும் நமது உடலை எழுந்து உட்காரசசெய்வதும், உட்கார்ந்திருக்கும் உடலை எழுந்து நடக்கச் செய்வதும் உடலினுள்ளே இருக்கும் ஒரு சக்தியேயாகும். இவ்வாறு ஒவ்வோர் உடலையும் அதன் உள்ளே நின்று எழுப்பி, ஆட்டி இருத்தி அசைத்து இயக்கும் சக்தி எதுவோ, அதுவே ஆத்மா என்று வைத்துக்கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகை இயக்கும் சக்தி

இந்த உடலைப் போலவே உலகமும் இயங்குகின்றது. தீக்குச் சுடும் இயல்பு, நீருக்குக் குளிரச் செய்யும் இயல்பு ஆகியவற்றை அளிப்பது ஒரு சக்தி. பூமியைச் சுழலச் செய்வதும் ஒரு சக்தி. பூமியின் மேலுள்ள மரம், செடி, கொடிகளனைத்தும் வளர்வதும், பூப்பதும், காய்ப்பதும் அச்சக்தியினாலேயே. உடலுள் நின்று உடலை இயக்கும் சக்தியை ஒப்புக்கொண்டால் இப்பிரபஞ்சம் முழுவதனுள் நின்று, அதனை இயக்கும் சக்தி ஒன்று உண்டு என்பதையும் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். அச்சக்திதான் பிரம்மம். இந்தப் பிரபஞ்ச முழுவதையுமே ஒரு பிரம்மாண்டமான உடலாகக் குறிப்பிடும் இடங்களும் உபநிடதத்தில் உண்டு. ஆத்மாவுக்கு அதன் உடல் எப்படியோ அப்படியே பிரம்மத்துக்கு இப்பிரபஞ்சமும் உடல் ஆகும் என்ற **குறிப்பு** வசனங்களை உபநிடதத்திலே காண்கிறோம். விண் அப்பிரம்மத்தின் தலை. சூரிய சந்திரர் அதனிரு கண்கள். திக்குகள் அதன் செவிகள், வேதம் அதனுடைய வாக்கு. காற்று அதனுடைய மூச்சு என இவ்வாறு உபநிடதம் வருணிக்கின்றது.

இவ்வாறு உடலுக்கு ஆத்மா போலப் பிரபஞ்சத்துக்குப் பிரம்மம் அமைந்த போதிலும், ஆத்மாவுக்கும் பிரம்மத்துக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. உடலுள் இருந்து உடலை இயக்குவது மட்டுந்தான் ஆத்மாவின் வேலை. ஆனால் இப்பிரபஞ்சத்துள் நின்று பிரபஞ்ச முழுவதையும் இயக்குவது மட்டும் அல்ல பிரம்மத்தின் வேலை இப்பிரபஞ்சம் முழுவதையும் உற்பத்தி செய்வதும் அதன் வேலையாகும். ஆத்மா உடலை உற்பத்தி செய்வதில்லை; இயக்குவது மட்டுந்தான். ஆனால், பிரம்மமோ பிரபஞ்சத்தை இயக்குவது மட்டுமன்றி, அதனை உற்பத்தியும் செய்கின்றது. பிரம்ம் என்பது, 'பிரஹ' என்னும் வினையடியாகப் பிறந்தது. 'பிரஹ்' என்பதற்கு 'வளர்' என்பது கருத்து. பிரம்மம் தன்னிலிருந்து இந்த உலகம் முழுவதும் வளர்தற்கு மூலமாயுளது என்ற காரணத்தால் அதற்கு அப்பெயர் ஏற்படலாயிற்று.



6 – CM 014072

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடையும், மகாவாக்கியங்கள் மூலம் விடையும்

நமக்குள் ஆத்மா என்ற ஒன்று உண்டு என்பதை நாம் ஒப்புக்கொள்ளலாம். ஏனெனில், அதை நாம் ஒவ்வொருவரும் நேரடியாக உணரத்தக்கதாயிருக்கின்றது. ஆனால், அதிலிருந்து இந்தப் பிரபஞ்சத்துக்கும் ஓர் ஆத்மா இருந்தாக வேண்டும்; அதுதான் பிரம்மம் என்பதை எவ்வாறு ஒப்புக்கொள்ளலாம் எனச் சிலர் ஆட்சேபிக்கலாம். இந்த ஆட்சேபணைக்கு விடை கூறுவது போலவே சில வாக்கியங்கள் உபநிடதத்திலே அமைந்துள்ளன. அந்த வாக்கியங்களுக்கு மகாவாக்கியங்கள் என்று பெயர். அவை மிக முக்கியமானவை. அவற்றுள் "தத்வமஸி" என்பது ஒன்று "நீதான் அது" என்பது அதன் கருத்து. சீடனை நோக்கிக் குரு கூறுவதாக அமைந்தது இவ்வாக்கியம் "அகம் பிரம்மாஸ்மி" என்பது மற்றொன்று. "நான் பிரம்மம்" என்பது இதன் கருத்து. "சோ (அ) கம் அஸ்மி" என்பது இன்னொன்று. "நானே அவன்" என்பது அதன் கருத்து. அடிப்படை உண்மைகளை அனுபவ வாயிலாக உணர்ந்த அனுபூதிமான்களுடைய கூற்றுகளாக அமைந்தவையே இவ்வாக்கியங்கள்.

இந்த வாக்கியங்களில், நமக்குள்ளிருக்கும் ஆத்மாவே. அந்தப் பிரம்மம் என்பது வற்புறுத்தப்படுகின்றது. ஆத்மாவே பிரம்மம் என்று கூறுவதன் மூலம் இரண்டு பேருண்மைகள் வற்புறுத்தப்படுகின்றன என்பது அறிஞர்களது கருத்து. முதலாவது ஆத்மா உண்டென்பது நிச்சயம் என்பதை நாம் எவ்வளவு தூரம் ஒப்புக்கொள்ளுகிறோமோ அவ்வளவு தூரம் பிரம்மத்தின் உண்மையும் உறுதியாகின்றது. இவ்வாக்கியங்களிலே மேலே எழுப்பிய ஆட்சேபத்துக்கு விடையைக் காணுகிறோம். உனக்கு ஓர் ஆத்மா இருப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமே இப்பிரபஞ்சத்துக்குப் பிரம்மம் ஆகிய ஆத்மா இருப்பதும். "அதைப்பற்றிய ஐயம் உனக்குத் தேவையில்லை. ஏனெனில், அதுதான் நீ ; அது இல்லை என அதை நீ மறுப்பாயாயின், உன்னையே இல்லை என்பவனாவாய்" எனக் கூறுவது போன்று அமைந்துள்ளன இம்மகாவாக்கியங்கள். இங்கும் ஓர் ஆட்சேபணை எழலாம். அதாவது, உபநிடதங்களை நாம் ஏன் ஒப்புக் கொள்ள வேண்டும்? உபநிடதங்களிலே சொல்லப்பட்டிருக்கிறது என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தால் மட்டும் பிரம்மம் என ஒன்று உண்டு என்பது உண்மை என எங்ஙனம் ஏற்றுக்கொள்ளலாம். இந்த இடத்திலே தான் இந்திய தத்துவ ஞானிகள் வேத உபநிட்தங்களுக்குக் கொடுக்கும் மதிப்புப் புலனாகும். ஒரு விஷயத்தின் மெய்ம்மை பொய்ம்மையை நிச்சயிப்பதற்கு எதை எதை, யார் யார் கூறுவதை ஆதாரமாகக் கொள்ளலாம் என்பனபற்றி இந்திய தத்துவ ஞானிகள் மிக விரிவாக ஆராய்ந்துள்ளனர். இவ்விஷயத்தை அவர்கள் ஆராய்ந்த அளவு நுட்பமாக வேறெவரும் ஆராயவில்லை. நாம் அவ்வாராய்ச்சிகளை இங்கு விவரிக்கவில்லை. உபநிடதவாக்குகள் தெய்வ அருள் பெற்றோர் வாக்குகள். அவை தெய்வ வாக்காகவே கொள்ளத்தக்கவை. அவை தெய்வ அருள் பெற்றவர்களுடைய அனுபவ சாட்சியாலும் மெய்ப்பிக்கப்பட்டவை; நமக்குக் கிடைக்கக்கூடிய ஏனைய ஆதாரங்கள் எல்லாவற்றையும்விட இந்த அருள் வாக்கு ஆதாரமே வலிமை மிக்கது என்ற முடிவுக்கே இந்திய தத்துவ ஞானிகள் வந்துள்ளனர் என்ற குறிப்பை மட்டும் இங்குக் கூறி அப்பாற்செல்வோம்.

## சட உலகுக்கும் சித்துதான் மூலம்

ஆத்மாவும் பிரம்மமும் ஒன்று என்று கருதப்படும் இம்மகாவாக்கியங்கள் மூலம் வற்புறுத்தப்படும் இரண்டாவது பேருண்மை என்னவெனில், இச்சடப் பிரபஞ்சம் அனைத்துக்கும் மூலம் சடமல்ல; சித்து என்பதே ஆகும். மேலே, பிரம்மத்திலிருந்தே சடப்பொருள்களாலாய இப் பிரபஞ்சம் அனைத்தும் உற்பத்தியாகிறது எனக் கூறினோம். ஆத்மாவும் பிரம்மமும் ஒன்று என்ற கருத்துப்படும் மகா வாக்கியங்களையும் காட்டினோம். ஆத்மா சடப்பொருளல்ல. எனவே, சடமல்லாத ஒன்றே, சடவுலகு அனைத்தும் தோன்றுவதற்குக் காரணம் என்ற கருத்துப் பெறப்படுகின்றது. மகாவாக்கியங்கள் மூலம் வற்புறுத்தப்படும் இரண்டாவது உண்மையென மேலே நாம் குறிப்பிட்டது இதனையே.

## ஒருமை வாதமும் கருத்து வாதமும்

மனித உடல்கள் உட்பட, இச்சடவுலகமனைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மத்துள் ஒடுங்கும். ஏனெனில், அதனிடத்திலிருந்தே அவை யாவும் உற்பத்தியாகின்றன. தனியாகவும் பலவாகவும் காணப்படும் இந்த ஆத்மாக்கள் அனைத்தும் அந்தப் பிரம்மமே. ஆகவே, அடிப்படையாய் உள்ளது பிரம்மம் எனப்படும் ஒரு பொருள் மட்டுமே. இந்த உண்மையையே உபநிடத மகாவாக்கியங்கள் வற்புறுத்துகின்றன. இதுவே உபநிடதத்தின் சாரம். பிரபஞ்சம் அனைத்தும் பிரம்மத்துள் ஒடுக்கம். ஆத்மாக்கள்கூட அந்தப் பிரம்மந்தான். ஆகையால், அடிப்படையாக உள்ளது ஒரேயொரு வஸ்துவே என இவ்வாறு வாதிப்பதற்கு (monism) ஒருமைவாதம் என்று பெயர். அந்த அடிப்படைப் பொருளாகிய பிரம்மம் சடமல்ல; அது ஒரு சித்து என்ற கருத்தும் உபநிடத வாக்கியங்கள் மூலம் பெறப்படுவதையும் மேலே கண்டோம். இவ்வாறு மூலப்பொருள் சடமல்ல; சித்து என்று வாதாடும் கொள்கைக்குக் கருத்து வாதம் (Idealism) என்பது பெயர்.

## சைவ சித்தாந்திகள் கொடுக்கும் விளக்கம்

இந்திய தத்துவ ஞானிகள் அனைவரும் இம்மகா வாக்கியங்களுக்கு ஒரே மாதிரி விளக்கம் கொடுப்பதில்லை. மேலே குறிப்பிட்ட மாதிரி ஒருமைவாதமும், கருத்து வாதமுந்தான் உபநிடதங்களின் முடிவு என்பதையும் எல்லோரும் ஒப்புக்கொள்வதில்லை. பெரும்பாலும் வேதாந்திகளே மகாவாக்கியங்களுக்கு மேலே குறிப்பிட்ட மாதிரி விளக்கம் கொடுப்போர். இந்திய தத்துவ ஞானிகளுள்ளே ஒருமைவாதத்திலும் கருத்துவாதத்திலும் மிக முன்னணியில் நிற்போர் அவர்களேயாவர். இம்மகாவாக்கியங்களுக்கு ஏனையோர் எவ்வாறு விளக்கம் கொடுப்பர் என்ற வினா இவ்விடத்திலே எழுவது இயல்பு. ஏனையோருள். உதாரணத்துக்குச் சைவ சித்தாந்திகளது விளக்கத்தை மிகச்சுருக்கமாக இங்குக் குறிப்பிடுவோம். "நீயே அது" அல்லது "நானே பிரம்மம்" என்னும்போது ஆத்மாவும் பிரம்மமும் இரு வேறு பொருள்களல்ல; அவையிரண்டும் ஒரே பொருள்தான் என்பது அல்ல கருத்து. இரண்டும் வெவ்வேறு பொர்ருள்களே. ஆயினும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டும் இரண்டல்ல எனத்தக்க விதமாக ஐக்கியப்படக்கூடிய இயல்புடையன என்பது தான் கருத்து என்பதே சைவ சித்தாந்திகள் கொடுக்கும் விளக்கம். இரண்டல்ல என்ற கருத்துப்படும் "அத்வைதம்" என்ற சொல்லுக்கு விளக்கம் கொடுப்பதில் வேதாந்திகளும் சைவ சித்தாந்திகளும் வேறுபடும் விதமும் இத்தகையதே. இவ்வாறாக, ஆத்மாவும் பிரம்மமும் எண்ணிக்கையில் ஒரு பொருளல்ல; எண்ணிக்கையில் அவை வெவ்வேறு பொருள்களே எனக் கொள்வதால். அடிப்படையில் உள்ளது, ஒருமைவாதிகள் கருதுவது போல, ஒரு பொருளல்ல; அடிப்படையிலும் பல பொருள்கள் உள்ளன என்ற கொள்கை ஏற்படுகின்றது. இக்கொள்கை பன்மைவாதம் எனப்படும். சைவ சித்தாந்திகள் பன்மை வாதிகள்.

உடலுக்கு உயிர் போல உலகுக்குப் பிரம்மம். பிரம்மத்திலிருந்தே உலகம் உற்பத்தியாகின்றது. ஆத்மாவும் பிரம்மமும் ஒன்றே என்பது போன்ற கூற்றுகளுக்கு எவ்வாறு அர்த்தம் கொள்ள வேண்டும் என்பதிலே ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளால் எழுந்துள்ளவையே பின் வந்த இந்திய தத்துவ ஞானப் பிரிவுகளுள் பெரும்பாலன என்பதை இங்கு குறிப்பிடுவது பொருந்தும்.

## கருத்து வேறுபாடுகளும் அவற்றின் விளைவும்

மகாவாக்கியங்களின் அர்த்தமென்ன, அவற்றிற்கு எவ்வாறு விளக்கம் கொடுக்க வேண்டும், "ஆத்மாதான் பிரம்மம் அதுதான் நீ" என்பதன் உண்மையான கருத்தென்ன என்பன போன்ற வினாக்களுக்குரிய விடைகளைப் பற்றி அன்று தொடக்கம் இன்றுவரை இந்திய தத்துவ ஞானிகளிடையே தருக்கம். நிகழ்ந்துகொண்டிருக்கிறது. வேறுபட்ட விளக்கத்துக்கு இடம் தருவன இம்மகாவாக்கியங்கள் மட்டுமல்ல. கருத்து வேறுபாட்டுக்கு இடம் தரும் வாக்கியங்கள், உபநிடதங்களிலே இன்னும் எத்தனையோ உள. கருத்து வேறுபாடுகளுக்கு இடம் தரும் வாக்கியங்களை மட்டுமன்றி ஒன்றுக்கொன்று மாறாகத் தோன்றும் கருத்துகளையும் உபநிடதங்களிலே காணலாம். மூலப்பொருள் ஒன்றோ அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவோ? அப்பொருள் சித்தர் அல்லது சடமா என்ற வினாக்களுக்கு உபநிடதம் முழுவதும் ஒருமுகமான விடையைக் காண்பதற்கில்லை. மூலப்பொருள் ஒன்று என்ற கொள்கைக்கு ஆதாரம் தரும் வாக்கியங்களும் உள. மூலப்பொருள் பல என்ற கொள்கைக்கு ஆதாரம் தரும் வாக்கியங்களும் உள. இவ்வாக்கியங்களுள் எதனை, எவ்வாறு கொள்ள வேண்டும் என்பதிலேயே பல ஆயிரமாண்டுகளாக இந்திய தத்துவ ஞானிகள் அனைவரும் தங்கள் சிந்தனையைச் செலுத்தியுள்ளனர். இவர்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் தான் வேதாந்தம். விசிட்டாத்வைதம், துவைதம், சித்தாந்தம் என இந்து மதத்தினுள்ளே பல உட்பிரிவுகள் ஏற்பட்டமைக்குக் காரணம். இக்காரணத்தால் தான் உபநிடதங்களில் காணப்படும் கருத்துகளைத் தெளிவுபடுத்தும் நோக்கத்தோடு பல விளக்கவுரைகள் எழுதப்படலாயின. எழுதியவர்களின் மதிநுட்பத்துக்கும் அனுபவத்துக்கும் ஏற்றவாறு விளக்கங்களும் தம்முள் வேறுபடலாயின.

**பிரம்மத்தின் நிலைகள் - சப்பிரபஞ்சம்**

உபநிடதங்களிலே பிரம்மத்துக்கு இரண்டு நிலைகள் கூறப்படுகின்றன. இதனைப் பிரம்மத்தைப்பற்றிய இருவித வருணனைகள் எனக் கூறலாம். ஒன்று. பிரம்மம் உலகத்தோடு கூடி, உலகம் எங்கணும் வியாபித்திருக்கும் நிலை. இது சப்பிரபஞ்ச நிலை எனப்படும். அதாவது, சகபிரபஞ்சம்- பிரபஞ்சத்தோடு கூடியது- என்பது இதன் கருத்து. இந்த நிலை சாந்தோக்ய உபநிடதத்தில் நன்கு வருணிக்கப்பட்டுள்ளது. அங்குப் பிரம்மம் தஜ்ஜலன் என்ற பெயரால் குறிப்பிடப்படுகின்றது. தஜ்ஜலன் என்ற இச் சொல்லுக்குத் தோன்றுவதற்கும், நிலைபெறுவதற்கும், பின்னர் ஒடுங்குவதற்கும் காரணமாக உள்ளது என்பது கருத்து. இந்த உலகம் எதிலிருந்து தோன்றி, பின்னர் எதனால் நிலை பெற்று, ஈற்றில் எதனுள் போய் ஒடுங்குகின்றதோ அதுவே பிரம்மம்.

**நிஷ் பிரபஞ்சம்**

பிரம்மம் இந்த உலகம் எங்கும் வியாபித்துள்ளது எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும்பொழுது, இந்த உலகந்தான் பிரம்மம்; இந்த உலகத்துள் பிரம்மம் அடங்கிவிடும்; எனவே இயற்கை தான் பிரம்மம்; அதற்கப்பால் எதுவுமில்லை என்ற கருத்து ஏற்படக்கூடும். இதனை நோக்கிப் போலும் பிரம்மத்துக்கு உலகத்தைக் கடந்த ஒரு நிலையும் கூறப்படுகிறது. அதுவே நாம் மேலே குறிப்பிட்ட இரண்டாவது நிலை. அது நிஷ்பிரபஞ்சம் எனப்படும். நிஷ்பிரபஞ்சம் என்பதற்குப் 'பிரபஞ்சம் அற்ற' என்பது அல்லது பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்ட என்பது கருத்து. இது பிரஹதாரண்ய உபநிடதத்தில் நன்கு வருணிக்கப்பட்டுள்ளது. சப்பிரபஞ்சம். நிஷ்பிரபஞ்சம் என்ற இரண்டையும் கூர்ந்து நோக்கும்பொழுது ஓர் உண்மை புலனாகின்றது. இந்த உலகம் பிரம்மத்துள் அடங்குமே தவிர, பிரம்மம் உலகத்துள் அடங்காது. உலகம் பிரம்மத்துள் அடங்குவது போல, பிரம்மமும் உலகத்துள் அடங்கும் எனக் கொண்டால், இயற்கையே இறைவன் என்ற நிலைதான் ஏற்படும். அங்ஙனமன்றி, இறைவன் இயற்கையுமாகி அப்பாலுமானவன் என்ற உண்மையையே இந்த இருநிலைகளும் சேர்ந்து உணர்த்துகின்றன. சைவ சித்தாந்தத்தில் இறைவனுக்கும் உலகத்துக்குமுள்ள தொடர்பை மூன்று விதமாகக் குறிப்பிடுவதுண்டு. இவை முறையே ஒன்றாய், உடனாய், வேறாய் எனப்படும். சப்பிரபஞ்ச நிலை ஒன்றாய் உடனாய் என்ற இரண்டையும் குறிப்பதாகவும், நிஷ்பிரபஞ்ச நிலை வேறாய் என்பதைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

## ஆத்மாவின் கோசங்கள்

பிரம்மத்தைப்பற்றிய குறிப்பை இம்மட்டிலே நிறுத்தி ஆத்மாவைப்பற்றி இரண்டொரு குறிப்பை இங்குத் தருவோம். ஒன்றுக்கு மேல் ஒன்றாகப் பல கவசங்களால் மூடப்பட்டாற்போல ஆத்மா மூடப்பட்டிருப்பதாகக் கூறும் ஒரு குறிப்பைத் தைத்திரிய உபநிடதத்திலே காண்கின்றோம். எல்லாவற்றுக்கும் புறத்தேயுள்ள கவசமே இந்த உடம்பு. அது அன்னத்தால் அதாவது, உணவினால் ஆயது என்ற காரணத்தால் அதற்கு அன்னமய கோசம் என்று பெயர். கோசம் என்ற சொல்லுக்கு உறை என்பது கருத்து. இதற்குள்ளே இதைவிட நுட்பமாக உள்ளது பிராணமய கோசம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே சீவசக்தி. இதற்குள்ளே உள்ளது மனோமய கோசம். இதற்குமுள்ளே உள்ளது விஞ்ஞானத்தால் அதாவது, அறிவால்-ஆயது என்ற காரணத்தால் விஞ்ஞானமயகோசம் எனப்படும். இதற்கு முள்ளே உள்ளது ஆனந்தமயமானது என்ற காரணத்தால் ஆனந்தமயகோசம் எனப்படும். ஒன்றுள் ஒன்றாக இத்தனை உறைகளாலும் மூடப்பட்டு இவற்றுக்கு நடுவில் உள்ளதே ஆத்மா. மேனாட்டுத் தத்துவஞானிகள் பிராணன், மனம், அறிவு ஆகிய அனைத்துக்கும் அப்பாற்பட்டதே ஆத்மா என்ற அடிப்படைவரை செல்லவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆத்மா தனக்கு அந்நியமான இவைகளையே தான் எனக் கருதுவதாலேயே அதற்குக் கன்மங்களும் மறுபிறப்புகளும் அவற்றோடு சேர்ந்த துன்பங்களும் ஏற்படுகின்றன.

## ஆத்மாவின் உண்மை இயல்பு

ஆத்மாவின் உண்மை இயல்பை அறிவதற்காக நனவு நிலை, கனவு நிலை ஆகிய இரண்டுமன்றி அதற்கப்பாலும் இரண்டு நிலைகள் உபநிடதங்களில் ஆராயப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று, கனவில்லாத உறக்க நிலை; மற்றது, அதற்கும் அப்பாற்பட்ட நிலை. அது துரிய நிலை எனப்படும். இன்று உளதத்துவ ஆராய்ச்சியில் மிக முன்னணியில் நிற்கும் மேல்நாட்டவரும் அதிசயிக்கத்தக்க முறையில் இத்தகைய ஆழமான ஆராய்ச்சியில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்திய தத்துவ ஞானிகள் ஈடுபட்டமை வியப்புக்குரியது. நான்காவதாகச் சொல்லப்பட்ட துரிய நிலை சாதாரணமாக எல்லோராலும் உணரக்கூடியதன்று. அது யோகப் பயிற்சி உடையவர்களால் மட்டுமே உணரக் கூடியது. அதற்கு முற்பட்டதாகிய கனவற்ற உறக்கம் எவ்வித அனுபவமும் அற்ற நிலை. ஆனால் துரியம் அனுபவம் அற்ற நிலையல்ல. அது ஓர் ஆனந்த அனுபவம் உள்ள நிலை. அந்த ஆனந்தந்தான் ஆத்மாவின் உண்மை இயல்பு.

## இரு வித முக்திகள்

மேலே, ஆத்மா தனக்கு அந்நியமானவற்றோடு தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுபடுத்துவதாலேயே அது துன்பத்துக்குள்ளாகிறது எனக் கண்டோம். துன்பத்திலிருந்து நீங்கிய நிலையே முக்தி. இருவித முக்திகள் பேசப்படுகின்றன. ஒன்று விதேக முக்தி. அதாவது, தேகம் நீங்கிய பிற்பாடு ஏற்படுவது. மற்றது சீவன் முக்தி. அது இந்த உடலோடு இருக்கும்போதே பெறக்கூடியது.

## முக்தியை அடைவதற்கு வழிகள் :

### வைராக்கியம்

இந்த முக்திகளைப் பெறுவதற்கு உரிய வழிகளும் உபநிடதங்களிலே கூறப்படுகின்றன. அவற்றுள் வைராக்கியமும் ஞானமும் முக்கியமானவை. வைராக்கியமென்பது பற்றறுத்தல். இது அகங்காரத்தை நீக்குவதன் மூலமே கைகூடும். அகங்காரமே எல்லாக் கேடுகளுக்கும் காரணம். பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம் முதலிய வாழ்க்கைப் படிகளை முறையாகக் கடப்பதன் மூலமே அகங்காரத்தை நீக்கிப் பற்றற்ற நிலையை அடையலாம்

### ஞானம்

அடுத்ததாகிய ஞானத்துக்கு மூன்று வழிகள் கூறப்பட்டுள்ளன. சிரவணம், மனனம், நிதித்தியாசனம் என்பவை அவை. சிரவணம் என்பது தக்க குருவின் மூலம் உபநிடதங்களைக் கற்றல். மனனம் என்பது கற்றவற்றைச் சிந்தித்தல். நிதித்தியாசனம் என்பது அவற்றைத் தியானித்தல். இதுவே மிக முக்கியமானது. இது இலகுவிலே கைவரக்கூடிய ஒன்றல்ல. அதனாலேதான் இத்தியானம் கைவருவதற்கு வழியாகப் பலவித உபாசனைகள் உபநிடதங்களிலே கூறப்பட்டுள்ளன. இவ்வுபாசனைகள் மனத்தை ஒருவழிப்படுத்துவதற்குப் பயிற்சி அளிப்பனவாகும். இப்பயிற்சிகளுக்குப் பின்பே தியானம் பரிபூரணமாகக் கைகூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியானத்துக்கு உவமை

தியானத்துக்கு முண்டக உபநிடதத்திலே ஒரு சிறந்த உவமை சொல்லப்பட்டிருக்கிறது. தியானம் செய்பவன் வில்லாளி. குருவிடத்திலே அடைந்த வேதாந்த ஞானமே வில். தியானம் செய்பவனுடைய ஆத்மாவே அம்பு. அம்பாகிய ஆத்மாவை அதாவது, தன் உள்ளத்தை வில்லில் வைத்து நாணை இழுக்க வேண்டும். நாணை இழுப்பதென்றால் ஏகாக்கிரசித்தத்துடன் தான் அடைந்த ஞானத்தை உபயோகித்துத் தியானிப்பது. நாணை நன்றாக இழுத்துக் குறி பார்க்க வேண்டும். பரமாத்மாவே குறியாகும். நல்ல வில்லாளி வில்லை வளைக்கும் போது குறியும் அம்பும் ஒரு நேரில் அமையச்செய்கிறான். அந்த நிலையில் அம்பு குறியில் மறைந்து போகிறது. பரம் பொருளைத் தியானம் செய்பவன் அவ்வாறே தன் ஆத்மாவையும் பரமாத்மாவையும் ஒன்றாகவே காணவேண்டும். தியானம் செய்யும் காலத்தில் பரமாத்மாவில் தன் ஆத்மா முற்றிலும் அத்துவிதீயமாகப் போகல் வேண்டும்.

## இவ்வுலக வாழ்வுக்கு நேரடியாகப் பயன்படுபவை

நாம் சுலபமாக உணர முடியாத பொருள்களாகிய பிரம்மம், ஆத்மா போன்றவற்றைப்பற்றி மட்டுமா உபநிடதங்கள் பேசுகின்றன? நமது இக வாழ்வுக்குப் பயன்படக்கூடிய பொருளாதாரம், சமூக ஒழுக்கம் ஆகியவற்றைப்பற்றி உபநிடதங்களிலே ஒரு குறிப்பாவது கிடையாதா எனச சிலர் வினவக்கூடும். அவர்களுடைய வினாவுக்கு விடையாக உபநிடதங்களில் காணப்படுவனவற்றுள் சில கூற்றுகளை இங்குத் தருவோம். "செல்வத்தைப் புறக்கணிக்க வேண்டா. வந்த விருந்தினரைத் தெய்வமாகக் கருது. உனக்காக மட்டும் உணவு உண்டாக்கினால் போதாது. நாட்டுக்குப் பயன்படுமாறு உணவு ஏராளமாக உண்டாக்கு. பொருள் உண்டாக்குவது உனக்காக அல்ல: மற்றவர்களுக்காக. எவருக்கும் இடமில்லை என்று சொல்லாதிருப்பாயாக. இதுவே ஒழுக்கம்." இவை உபநிடதங்களிலே காணப்படும் உபதேசங்களுக்குச் சில உதாரணங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுபதேசங்களிலே முக்கியமாகப் பிறர் நலம் பேணும் குறிக்கோள் வற்புறுத்தப்படுவதைக் காண்கின்றோம். இதைவிட உயர்ந்த குறிக்கோள் எதையும் வேறெந்தச் சிறந்த இலக்கியத்திலும் காண இயலாது. இதனோடு சேர்ந்த விருந்தோம்பலுக்கு உபநிடதங்களிலே கொடுக்கப்பட்ட இடமும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. யமன் தன்னிடம் விருந்தினனாக வந்த நசிகேதனை அவனது வருகையை அறியாத காரணத்தால் மூன்று நாள் காக்கவைத்த குற்றத்தை உணர்ந்ததும் அடைந்த துயரையும், அதற்குப் பிராயச்சித்தமாக மூன்று வரங்கள் கேட்குமாறு யமன் நசிகேதனை வேண்டியதையும் விருந்தோம்பலுக்கு எவ்வளவு முக்கியமான இடத்தை உபநிடதங்கள் கொடுத்துள்ளன என்பதை உணர்த்துவதற்கு உதாரணமாக இங்கு குறிப்பிடலாம்.

. . . . . . . . . . . . . . . . . . . . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாகம மரபு - ஓர் அறிமுகம்

பேராசிரியர் - ப கோபாலகிருஷ்ணஐயர்

யாதாயினும் ஒரு சமயத்தை மெய்யென்று நம்புகின்றவன் அந்தச் சமயத்தின் வழி ஒழுகும் ஒழுக்கம் இல்லாத பொழுது, பயன்பெறான். அந்தச் சமயத்திற்கு உரிய கடவுள் இவரென்பதும், அவருடைய இலக்கணங்களும் அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங்களும், விலக்கப்பட்ட பாவங்களும் அந்தப் புண்ணிய பாவங்களின் பலன்களாகிய சுக துக்கங்களும், அவரை வழிபடும் முறைமையும் அந்த வழிபாட்டினாலே பெறப்படும் பிரயோசனமும் ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாதபொழுது அந்த ஒழுக்கம் உண்டாகாது. சற்குருமுகமாக விதிப்படி பெறப்படுஞ் சமய நூற் கல்வி கேள்விகள் இல்லாத பொழுது அந்த அறிவு உதியாது. ஆகவே கல்வியும் அறிவும் ஒழுக்கமுமாகிய இந்த மூன்றும் வேண்டும். இது எல்லாச் சமயத்தாருக்கும் ஒத்த துணிவு.

(நாவலர் சரித்திரம், 1916, பக்43)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், 1860 ஆம் ஆண்டு வெளியிட்ட ஒரு விக்கியாபனத்தில் தெரிவித்துள்ள இக்கருத்து சைவசமய மரபில் சமயநூற் கல்விகேள்வி ஆகியவை மக்களது சமய ஒழுக்கத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுவன என்பதை வற்புறுத்துவதாக உள்ளது. சைவசமயியின் வாழ்க்கையை வளம் படுத்துவதிலும் அவனது ஆன்மிக சாதனைக்கு நிலைக்களனாகவுள்ள ஆலய வழிபாட்டினை நெறிப்படுத்துவதிலும் ஆகமங்கள் இன்றியமையாத மூலங்களாகக் காலங்காலமாக விளங்கி வருகின்றன. வரலாற்று மூலங்களைக் கொண்டு பார்க்குமிடத்தும் திருக்கோயிற் பண்பாட்டிற்கு ஆகமங்கள் உதவியுள்ளமை நன்கு தெரியவரும். ஆகமங்களை உரியவாறு பேணுவதிலும் அவை கூறும் வழியில் வழிபாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளை ஒருங்கிணைத்து நடை முறைப்படுத்துவதிலும் சைவ சமயச்சார்புடையோர் அக்கறை உள்ளவர்களாக இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுவது இயல்பே. எமக்கு முன்னர் வாழ்ந்த சைவச்சான்றோர் பலரும் எம்மத்தியில் வாழும் சமய அறிஞர்களும் ஆகமம் தொடர்பான அறிவுப் பரம்பலுக்குத் தம்மாலான பங்களிப்பினை நல்கியுள்ளனர் என்பது மறுக்கமுடியாத உண்மை. சைவ ஆகமங்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். மற்றும் அவை கூறும் விடயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வு இன்று அறிஞரிடையேயும் மக்களிடையேயும் மேலோங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக, யாழ்ப்பாணத்திலே இன்று ஆலயங்களிலே நடைபெறும் நித்திய நைமித்திகக் கிரியைகள் பற்றிச் சிவாசாரியார்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் அவ்வப்போது ஐயங்கள் ஏற்படும் வேளை ஆகமங் கூறும் ஒழுங்கு யாது அல்லது ஆகம சம்மதம் எத்தகையது என ஆராய்ந்து ஏற்படும் ஐயங்களுக்குத் தெளிவு பிறப்பித்துக் கொள்ள வேண்டிய தேவையும் இருந்து வருகின்றது. இந்நிலை தவிர்க்க முடியாததொன்றாகும். சிற் சில வேளைகளில் ஒரு சிலரது கவனக் குறைவினாலும் அக்கறையின்மையாலும் ஆகம நெறிமுறைகளில் நெகிழ்ச்சி ஏற்படுமிடத்தும் ஆகமங் கூறும் ஒழுங்கில் ஆலயக் கிரியைகளை நெறிப்படுத்த வேண்டும் என்ற நம்பிக்கை சிவாசாரியார்களிடையேயும் சைவசமயிகளிடையேயும் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சைவசமய மரபிற்குக் காப்பரணாக ஆகமங்கள் விளங்கி வருகின்றமைக்கு இந்நிலையே தக்க சான்றாகும்.

காமிகம் முதல் வாதுளம் ஈறாகவுள்ள இருபத்தெட்டு மூல சிவாகமங்களிலும் இன்றைய நிலையிற் கிடைக்கக் கூடிய ஆகமங்கள் பற்றிய விளக்கம், அவை கூறும் அடிப்படை விடயங்கள், அவை பற்றிய மரபு வழிக் கருத்துக்கள் தொடர்பான அறிவுத் தேடல் முயற்சி இலங்கை, இந்திய நாட்டைச் சேர்ந்த அறிஞர்களாலும் மேலை நாட்டறிஞர் சிலராலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடயம் தொடர்பாகப் பலரும் எழுதியுள்ளனர். எவ்வாறாயினும் சமய மரபில் அவை பெறும் முக்கியத்துவம் பற்றியும் சைவ சமயி ஒருவனது வாழ்க்கையில் இலட்சியம் ஈடேற அவை கூறும் வழிமுறை யாது என்பது பற்றியும் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டிய தேவை உள்ளது. சைவ சமய மரபில் ஆகமங்கள் என்ற விடயத்தைப் பற்றி எம் மண்ணைச் சார்ந்த சைவங்காத்த சான்றோர்கள் கூறியுள்ள விளக்கங்களையும் கருத்துக்களையும் ஒன்றிணைத்துப் பார்த்துத் தெளிவு கொள்வது இன்றைய தேவைக்கேற்ற முயற்சியாகும்.

## II

சைவசமய மரபைப் பேணத் துணை புரியும் ஆகமங்கள் பற்றி நாம் பல்வேறு கோணங்களில் நின்று ஆராய்ந்து அவற்றின் பல்வேறு பரிமாணங்களை அறிந்து கொள்ளக் கூடிய அளவுக்குத் தரவுகள் உள்ளன. ஆகமங்கள் உண்மையில் திருக்கோயிற் பண்பாட்டுக் கருவூலங்கள். ஆன்மா கடவுளை அடைதலே பிறப்பின் நோக்கம். இந்த நோக்கத்தை இலகுவில் அடையக் கூடிய வழியைத் தன்னகத்தே கொண்டுள்ள சமயமே சைவசமயம் -நாவலர். **சற்சமயமாகிய சைவசமயம்** எனக் குறிப்பிடுகின்றார். சைவ சமயத்தைப் பொறுத்தவரை இந்நோக்கத்தையடைவதற்கு இன்றியமையாததாகிய இறைவன் திருவருளைப்பெற உதவும் சாதனமாகவே ஆகமங்கள் கொள்ளப்படுகின்றன. கடவுள், ஆன்மாக்கள், கடவுள்வழிபாடு, நல்வினை, தீவினைகள், சைவ வாழ்க்கை, சைவ ஒழுக்கம், சைவத்தின் மேன்மை, சைவ சித்தாந்த அடிப்படை, ஆலயம், அங்கு இடம் பெறும் இறைவன் திருவுருவங்கள், நித்திய நைமித்திகக் கிரியைகள் ஆகியவை பற்றிய கருத்துக்களை சாஸ்திர ரீதியில் உணர்த்தும் நூல்களாகவும் அவை விளங்குகின்றன. இக் காரணங்களினால் எமது நாட்டில் நாவலரும் அவரைச் சார்ந்த ஞானபரம்பரையினரும் சைவ சமயத்தின் முதனூல்களாகிய சிவாகமங்களின் சிறப்பினையும் முக்கியத்துவத்தினையும் வலியுறுத்தி வந்துள்ளனர்.

நாவலர் வேதாகமம் திருமுறைகள் புராணங்கள், ஆகியவற்றைக் கொண்டு சைவமரபு பேணியவர். அம்மரபு வாழ மாண்புறு பணி புரிந்தவர். ஆலயங்களில் ஆகம மரபு பேணப்பட வேண்டும் என்பதை உறுதிபட எடுத்தியம்பியவர். அவர் எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்ட **சைவ தூஷண பரிகாரம்** என்ற நூலில் ஸ்ரீவேதாகமோக்த சித்தாந்த சைவப்பிரகாச சமாசீய விக்கியாபனத்தில் சைவசமயத்திற்கு வேதமும் ஆகமும் மற்றும் திருமுறைகளும் திராவிட சித்தாந்தங்களும் பிரமாணம் என்பதை மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் எடுத்துக் கூறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

> இந்நூல்கள் எல்லாவற்றாலும் உணர்த்தப்படும் சைவமே சற்சமய லக்ஷணங்களெல்லாங் குறைவற அமைந்த சத்திய சமயமென்று சுருதி யுக்தி அனுபூதிகளாலே நிச்சயித்து ஆதிகாலந் தொடங்கிப் பரத கண்டத்திலுள்ள நமது முன்னோர்களாகிய சகல மகான்களும் அதனையே அங்கீகரித்துக் கொண்டு வந்தனர். அவ்வாறே நாமனைவரும் அந்தச் சைவமே சற்சமயமென்று நிச்சயித்து அங்கீகரிக்கின்றோம்.
>
> (சைவ தூஷண பரிகாரம் 1956 பக் 3-4)

என்ற அவரது குறிப்பு சைவ சமய மரபிற்குரிய பிரமாணங்களாக வேதாகமங்கள் உள்ளன என்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. மேலும் சைவதூஷண பரிகாரத்தில் பிறிதோர் இடத்தில் பதிப் பிரகரணத்தில் வேதாகமங்களை 'நாங்கள் மெய்நூல்களெனத் துணிந்த வேதாகமங்கள்' எனப் போற்றுகின்றார். பிற சமயத்தவர் கூறும் பழிப்புரைகளுக்கும் தூஷணங்களுக்கும் ஏற்ற பரிகாரம் காண்பதற்கும் சைவசமயிகளது உள்ளத்தில் தாம் கைக்கொள்ளும் சமயம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும். வேதாகமங்களின் மேன்மையைத் தெளிவாகவும் உறுதிபடவும் கூறியதன் வெளிப்பாடே சைவ தூஷணபரிகாரமாகும். சைவ நூல்களினுண்மையை உணர வைப்பதும் இந்நூலின் முக்கிய நோக்கமாக அமைந்தது. சிவன் கடவுளல்லரென்றும் வேதாகமங்கள் பொய்யென்றும் சைவர்கள் அஞ்ஞானிகளென்றும் பிறசமயத்தவரால் பரப்பப்பட்ட பெருந்தூஷணங்களுக்கெதிராக சிவனொருவரே பரமபதி யென்றும் சைவமே சற்சமயமென்றும் சைவசமயிகள் துணிந்துள்ளனர் என்பதை எடுத்து விளக்கியவர் நாவலர். சைவ நூலுணர்ச்சி சிறிதுமின்றி பிறசமயத்தவர் செய்யும் சிவதூஷணம். சிவசாஸ்திர தூஷணம், சிவாசாரிய தூஷணம் முதலியவற்றைக் கண்டியாது இருப்பதும் சைவத்தின் மகிமையை உபதேசியாது இருப்பதும் அதிபாதகம் என்பதைப் பிரமாணங்கள் வழி உறுதிபடக் கூறியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர், **சர்வோக்தம்** என்ற சிவாகமத்தின் உபபேதங்களுள் ஒன்றாகிய **சிவதருமோத்திரம், வேதமந்திரம், பராசரஸ்மிருதி, திருவாசகம், சித்தாந்தசிகாமணி, கந்தபுராணம், கூர்மபுராணம், ஸ்ரீ அப்பைய தீக்ஷிதரின் சிவதத்துவ விவேகவிருத்தி** ஆகியவற்றிலிருந்து எமது மண்ணில் சிவசாஸ்திர உண்மைகளை நிலைநிறுத்துவதற்கு அவர் மேற்கொண்ட செயற்பாட்டின் முக்கியத்துவத்தை உணர முடிகின்றது.

யாழ்ப்பாண மண்ணிலே வேரூன்றிய சைவம், வைதிகசைவம் எனச் சிறப்படைந்தது. சைவசமய மரபில் வேத ஆகமங்களின் சிறப்பினை நாம் உரியவாறு தெரிவித்துக் கொள்ள வைதிக சைவம் பற்றிய விளக்கத்தினையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும். பண்டிதர் ச.பஞ்சாட்சரசர்மா அவர்கள் எழுதிய தமிழாகமம் என்ற கட்டுரையில் வைதிக சைவத்திற்குரிய விளக்கத்தினைத் தந்துள்ளார் (பஞ்சாட்சரம் 1987 பக் 125)

> "நாவலர் பெருமானும் அவர்களுக்கு முன்னும் பின்னும் இந்நாட்டில் வாழ்ந்த சைவப் பேரறிஞர்களும் எமது சைவசமயத்தை வைதிகசைவம் என்று சிறப்பித்துச் பேசினர். வேதத்தை மூலமாகக் கொண்டு அதன் வழிவந்த சைவசமயம் என்பதே வைதிக சைவம் என்பதற்குப் பொருளாகும். பாரத நாட்டின் ஆஸ்திக மதங்கள் அனைத்துமே வேதத்தை ஏற்றுப் போற்றுவனவே. அவற்றுட் சிலவற்றுக்குச் சிறப்பான பிரமாண நூல்கள் சில இருப்பினும் பொதுப் பிரமாணமாக வேதமே விளங்குகின்றது. சைவசமயமும் சிறப்பு நூலாக ஆகமத்தைக் கைக்கொண்டாலும் பொது நூலாக வேதத்தையே போற்றி மதிக்கின்றது"

வைதிக சைவம் பற்றிய இச்சிந்தனைக்குரிய ஊற்றை நாம் தோத்திர நூல்களிலும் சாஸ்திர நூல்களிலும் காணலாம். திருமூலரது **திருமந்திரமும் ,சேக்கிழாரின் பெரியபுராணமும், மெய்கண்ட சாஸ்திரங்களில் சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம்** போன்றவையும் சைவத்தின் சிறப்பு நூலெனப் போற்றப்படும் ஆகமங்களின் மேன்மையை எடுத்துரைக்கின்றன. வேதங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமங்களையும் திருமூலர் 'மெய்யாம் இறைவன் நூல்' எனக்கூறி நாதனுரை எனப் புகழ்கின்றார். வேதங்கள் பொது என்றும் ஆகமங்கள் சிறப்பென்றும் இவ்விரண்டு நூல்களிடையே வேறுபாடற்ற தன்மை உளதென்றும் குறிப்பிடுகின்றார். **(திருமந்திரம் -8:15:35)** "அருமறையாகமமுதனூல்" எனக் குறிப்பிடும் **சிவஞானசித்தியார்** அவையே ஆதி நூல் என்றும் போற்றுகின்றது(8:14).

சிவப்பிரகாசத்தில்(1:1)

**பல்கலையாகமம் வேதம் யாவையினும்**
**கருத்துப் பதி பசு பாசம் தெரித்தலாம்**

எனக் குறிக்கப்படுபவதிலிருந்து வேதாகமங்களின் உட்பொருள் முப்பொருள் விளக்கமே என்பது தெளிவாகின்றது. சேக்கிழார் கண்ணப்பநாயனார் புராணத்தில் " எய்திய சீர் ஆகமத்தில் இயம்பிய பூசனைக்கேற்ப" (பெரியபுராணம் 16:135) என்ற குறிப்பு ஆகமமரபு பற்றியதாகும். திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணத்தில் சேக்கிழார்,

**எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்**
**உண்மையாவது பூசனை எனவுரைத்தருள**
**அண்ணலார்தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்**

(பெரிய புராணம் 25:50)

எனக் குறிப்பிடும் பாடல்வழி ஆகமத்தின் தெய்வீகச் சிறப்பை எமக்குக் காட்டுகின்றார். ஆகமத்தின் இயல்பினால் இறைவனுக்கெனச் செய்யப்படும் வழிபாடு அர்ச்சனை, பூசனை ஆகியவையாகும். இவ் வழிபாட்டினால் கிடைக்கும் அனுபவம் பக்தியே. திருமூலநாயனாரது புராணத்திலும் வரும் ஆகமவிதி, ஆகமத்திறன், ஆகமத்தியல்பு, ஆகமத்துண்மை போன்ற குறிப்புக்கள் ஆகமத்தின் மேன்மையைக் காட்டி நிற்கின்றன.

தன்னைச் சிவனாகப் பாவித்தல் சிவோகம்பாவனை ஆகும் இப்பாவனை பற்றிச் சித்தியார் (9:7)



7 – CM 014072

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டை மறைகளும் அது நானானே னென்று பாவிக்கச் சொல்வது இப்பாவகத்தைத் தானே**

எனக் கூறும் இவ்வடிகள் பண்டைய மறைகள் கூறும் 'தத்துவமஸி', 'சோ அகம் அஸ்மி' போன்ற மகாவாக்கியப் பொருள் சிவோகம்பாவனையே என்பதை உணர்த்துவதாக உள்ளன. சித்தியார் தரும் இக்கருத்தின் மூலம் சைவசித்தாந்தம் மறைகளைப் பிரமாணமாக ஏற்றுள்ளதை அறியமுடிகிறது.

III

இத்தகைய சமய நூல்கள் தரும் கருத்துக்களை அடித்தளமாகக் கொண்டே சிறப்பாக யாழ்ப்பாணத்தில் சைவச் சான்றோர்கள் வைதிகசைவம் என்ற சிந்தனையை வளர்க்க முற்பட்டுள்ளமை தெளிவாகின்றது. நாவலரைத் தொடர்ந்து அவரது வழியில் சைவப்பணியாற்றிய சைவப்பெரியார்களும் வைதிக சைவத்தைப் போற்றியுள்ள நுட்பத்தையும் நாம் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகும். நாவலர் மீது கொண்ட அபிமானத்தினால் பண்டிதமணி அவரைப்பற்றி எழுதிய பல கட்டுரைகளை உள்ளடக்கிய **ஆறுமுகநாவலர்** (1979) என்ற நூலில் இடம்பெற்றுள்ள "வைதிகசைவ மணங்கமழத் தொண்டாற்றிய நாவலர்" என்ற கட்டுரையும் "நாவலர் சரிதை -வைதிக சைவ வழிகாட்டி" என்ற கட்டுரையும் இங்கு குறிப்பிடத்தக்கன. எமது நாட்டில் நிலவிய சைவசமய மரபின் பரிமாணத்தை நாம் ஓரளவு மட்டிட்டுக் கொள்வதற்குப் பண்டிதமணியின் சிந்தனைகள் உதவுவனவாய் உள்ளன. முதற் கட்டுரையில் பண்டிதமணி,

> 'நாவலர் சரித்திரம் வைதிக சைவ சரித்திரம்; வைதிகமானது தூய அறிவு நெறி; அந்நெறி சிவசம்பந்தம் உறும்போது சைவம் எனப்படும். நமது சமயம் வைதிக சைவம், அதனை ஞாபகப்படுத்தலினாலே நாவலர் சரித்திரத்தை அவ்வாறு கூறுகின்றோம்.

எனக் குறிப்பிட்டு வைதிகத்திற்கும் சைவத்திற்குமிடையேயுள்ள தொடர்பை நாவலர் சரித்திரத்தோடு தொடர்புபடுத்திக் காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> 'நாவலர் கோட்டில் நின்று ஒன்று சொன்னாலுஞ்சரி ஒருவனைச் சினந்து வைதாலுஞ்சரி நாவலருடைய சொற்கள் எழுத்துக்கள் செயல்கள் அனைத்தும் வைதிக சைவ மணங்கமழ்வனவேயாம்'

எனப் பண்டிதமணி குறிப்பிடுமளவிற்கு எமது நாட்டில் வேதம், ஆகமம் ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்ட வைதிக சைவ மரபு வேரூன்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. நாவலர் பேணிய சைவசமயமரபிற்கு வேதாகமங்களும் அவற்றின் வழி வந்த நூல்களும் உயிர்த்துணையாக அமைந்தன. எனவே நாவலர் வைதிக சைவத்திற்கு வழிகாட்டி எனப் பண்டிதமணி குறிப்பிடுகின்றார்.

பண்டிதமணியின் 'கந்தபுராணம் வைதிக சைவ பொக்கிஷம்' **(சிந்தனைக் களஞ்சியம் 1978)** என்ற கட்டுரையில் வேதநெறி சைவநெறி பற்றி மேலும் விரிவாகத் தெளிவுபடுத்துவதை அவதானிக்கலாம்.

> நமது சைவம் வைதிக சைவம். வைதிகம் வேதசம்பந்தம். சைவம் சிவ சம்பந்தம். வித்அறிவு , வித் - என்பதிலிருந்து பிறந்தது வேதம் வைதிகம் அறிவு நெறி - வேத நெறி எனவும்படும். சைவம் - சிவநெறி; அருள் நெறி எனவும்படும். அறிவு நெறியாகிய வைதிகம் சைவத்திற் சென்று முற்ற வேண்டும்

> அங்ஙனம் சென்று முற்றாத வழி அவைதிகமாம். சைவம் வேத நெறியாகி வைதிகத்தின் வழிவருவது. அங்ஙனம் வராதேல் அது அசைவமாம் .....வைதிகம் உடல்; சைவம்- உயிர் உயிரைப் பிரிந்த வழி உடல் என்னாம். உடம்பாலாய பயனைப் பெறாது உயிர் பிரிந்த வழி அவ்வுயிர் என்னாம்.

என்ற குறிப்பு வைதிக சைவத்தின் அடிப்படையைத் தெளிவு படுத்துகின்றது. எமது மண்ணில் வேதாகமங்கள் வழிவந்த வைதிக சைவம் வேரூன்றியமையைச் சைவப் பெரியார்களின் இத்தகைய விளக்கங்கள் காட்டி நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப அதிபர் பொ.கைலாசபதி அவர்களின் இத்துறை பற்றிய கருத்துக்களும் சிந்தனைக்குரியவை. ஒப்பீட்டடிப்படையில் இவ்வறிஞர்களது சிந்தனைகள் எமது சைவ சமய மரபு வேதாகமங்களை அடித்தளமாகக் கொண்டதென்ற உண்மையை உணர்த்தி நிற்கின்றன. பொ. கைலாசபதி அவர்கள் ஆகமத்தின் விளக்கத்தை வேதத்தோடு தொடர்புபடுத்திப் பிறிதோர்நிலையிலே சிந்திக்கின்றார்

> காரியம் என்ன என்று அறியும் மார்க்கம் வைதிகம்; அறிந்துவிடும் மார்க்கம் சைவம்; (ஒருவாற்றால் இல்லறமும் துறவறமும் போல) வேதத்தை ஆராய்ந்து செல்பவர்கள் ஒரு அளவில் நிறுத்தி ஒன்றைப் பற்றிக் கொண்டு அதனைச் சாதகம் பண்ணி உண்மையைக் காண்பர். இப்படி நின்று கண்ட ஒவ்வோர் சாராரின் ஆசாரத் தொகுதியே ஆகமம் ஆகலாம்.
>
> (பொ.கை. சிந்தனைகள் பக்.38)

ஆசாரத் தொகுதியே ஆகமம் என்ற இவரது விளக்கம் சைவசமய மரபிற்கு நன்கு பொருந்துவதாகும்.மேலும்,

1. ஆகமம் (மறை போல) சமயங்களுக்கெல்லாம் மூலம்
2. சமயத் துறைகள் (வேதம் போல) அவரவர் பக்குவத்திற்கேற்ப லபிக்கின்றன.
3. சமயத்துறையின் பூரணம் சித்தாந்தம் (வேதத்திற்கு வேதாந்தம்போல)

(பொ.கை. சிந்தனைகள் பக் 38)

என்ற குறிப்பில், ஆகமங்களே ஒரு சமயத்துறைக்கு மூலம் என்பதை வேதத்துடன் தொடர்புடுத்தி பொ.கைலாசபதி கூறியுள்ளார். சைவ சமயமரபில் ஆகமங் கூறும் வழி நின்று மனிதன் பூரணத்துவம் அடையச் சிறந்த வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அவரவரது பக்குவத்திற்கும் அனுபவத்திற்குமேற்பத் தமக்குரிய வழியைத் தேர்ந்து கொள்ளலாம். சரியைவழி, கிரியைவழி, யோகவழி, ஞானவழி என நான்கு வழிகள் கூறப்பட்டுள்ளன. பொ.கைலாசபதியின் கருத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி சமயத்துறையின் பூரணத்துவம் சித்தாந்தம் என்பதாகும். சைவ சமய மரபின் உயர் நிலை ஞானமடைதலே இதனையே **சிவப்பிரகாசம் (பாயிரம், 10 )** தரும்.

கிரியையென மருவுமவை யாவும்
ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்.

என்ற குறிப்பில் சிவாகமங்களினால் நிச்சயிக்கப்பட்ட கிரியை முதலியனவே என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். பொ.கைலாசபதி வேதநெறி, சைவ நெறி பற்றி மேலும் சில கருத்துக்களைக் கூறியுள்ளார்.

வேத நெறி; அந்நெறி சென்று முடியுந்துறை சைவத்துறை; சைவத்துறை யடையாதவர்க்கு வீடு இல்லை; வேத நெறியிற் செல்லாதவர்கள் சைவத் துறையை அடையாதவர்கள்
(பொ.கை. சிந்தனைகள், 1994, பக். 38)

என்பது அவர் தரும் விளக்கம் "வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க" என்ற சேக்கிழாரது வாக்கு (34.1) இக்கருத்தோடு உடன்படுகிறது. ஆகமம் சுத்த தந்திரம் என்றும் வேதவிரோதமல்ல (பொ.கை.சிந்தனைகள், பக். 52) என்றும் தெளிவுபடக் கூறுகிறார் பொ.கைலாசபதி அவர்கள்.

எமது மண்ணில் வேதங்களையும் ஆகமங்களையும் முதனூல்களாக ஏற்றுக் கொண்ட வைதிக சைவ மரபு, திருமுறைகள், மற்றும் மெய்கண்ட சாஸ்திரங்களின் பிரமாணங்களூடாக மேன்மையுற்றுச் சைவர்களது ஆன்மிகவாழ்வுக்கு உறுதுணை புரிந்துவந்துள்ளதை நாவலரும், அவர்வழி சைவங்காத்த சான்றோர்களும் தரும் விளக்கங்களிலிருந்து நாமறியலாம்.

## IV

சைவசமய மரபில் ஆகமங்கூறும் கிரியை நெறியோடு தொடர்புறும் செயல் வழியும் ஞான நெறியோடு தொடர்புடைய அறிவுவழியும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. ஞான நிலையில் நிற்பவர்களுக்கு ஆழமான பயிற்சியும் அறிவு விளக்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமானவை. இவ்விரு நிலைகளிலும் கைதேர்ந்தவர்கள் மிகச் சிலரே, இது தவிர்ந்த கிரியை நெறி நிற்போர் ஏனையோராவர். அறிவுநெறி நிற்போருக்குப் பயன்படத்தக்க நூல்களும் விளக்கங்களும் சமஸ்கிருத மொழியிலும் தமிழிலும பெருமளவில் உள்ளன. கிரியைநெறி பற்றிய விளக்கம் தரும் நூல்கள் மிகச்சில என்று, அவ்வகை நூல்கள் வெளி வரவேண்டிய அவசியத்தைப் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் கோடிட்டுக் கட்டியுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கதாகும். **(சைவத்திருக்கோயிற் கிரியை நெறி, 1963பக் XVI)**

ஆகம நூல்களும், அவற்றின் வழி கிரியைகளை ஆற்றுவதற்கேற்ற வழிமுறைகளைக் கூறும் பத்ததிகளும் சமஸ்கிருத மொழியிலேயே உள்ளன. இம்மொழிப்பயிற்சி யுடையோரே இவற்றைப் பயன்படுத்தக்கூடிய நிலை இருந்ததினால் ஏனையோருக்கு அவை பற்றிய விளக்கம் தேவைப்படலாயிற்று. கிரியைகளை ஆலயங்களில் பரார்த்த நிலையில் அடியவர்களுக்காகத் தலையேற்று நடத்தும் சிவாசாரியர்களே இந்நூல்களைத் தலைமுறை தலைமுறையாகப் பேணி வந்துள்ளனர். குருகுல முறையிலும் குருசீட முறையிலும் இவை தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு வந்துள்ளன. சைவ மரபிற் சிறப்புப்பெறும் ஆகமம் தரும் அடிப்படை விடயங்களினால் பிற்காலத்தில் பல பிரிவுகளில் நூல்கள் வெளியாகி உள்ளன.

1. ஆகமம் கூறும் கிரியா பாத விடயங்களை விளக்கும் நூல்கள்-அவை பத்ததிகள் எனச் சிறப்படைந்தன, இப்பத்ததிகள் ஆகமக் கிரியைகளுக்குரிய வழிகாட்டியாக அமைவன. எடுத்துக்காட்டாக அகோரசிவாசாரிய பத்ததியைக் குறிப்பிடலாம்.

2. ஆகமங்கள் திருவுருவ வழிபாட்டை முதன்மையாகக் கொண்டதினால், அவை தெய்வங்களின் திருவுருவங்கள் பற்றிக் கூறும் விதிமுறைகளை அடியொற்றி எழுந்த சிற்ப சாஸ்திரங்கள், மற்றும் கோயிற் கட்டிடக் கலை பற்றிக் கூறும் வாஸ்து சாஸ்திரங்கள். எடுத்துக் காட்டு: சகளாதிகாரம், **ஸ்ரீகாசியபசில்ப சாஸ்திரம், மானசாரம்** போன்றவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆகமங்கள் கூறும் ஞானபாதத்தின் விளக்கமாக எழுந்த சைவசித்தாந்த நூல்கள். இவை சமஸ்கிருத மொழியிலும் தமிழிலும் பெருமளவில் வெளிவந்துள்ளன.

சமயம், கலை, தத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கிய திருக்கோயிற் பண்பாட்டிற்கு விளக்கமாக இந்நூல்கள் அமைந்தன.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பிரிவும் கூறும் நூல்கள் பற்றித் தனித்தனியே விரிவாக ஆராயக்கூடிய அளவுக்கு அவை முக்கியத்துவம் பெற்றுள்ளன. வடமொழியில் உள்ள ஆகமப்பொருளைத் தமிழிலே தரவே திருமூலர் தோன்றியதாகச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

**தண்ணிலவார் சடையார் தாம் தந்த ஆகமப்**
**பொருளை**
**மண்ணின் மிசைத் திருமூலர் திருவாக்கால்**
**தமிழ்வகுப்ப**

என்ற வாக்கிற்கேற்பவே திருமூலரது வாக்கும் அமைகின்றது.

**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே**

என்பது திருமந்திரம்.

எனவே ஆகமப் பொருளைத் தமிழில் அறிந்து கொள்ளும் முயற்சிக்குத் திருமந்திரம் தமிழாகமமாக விளங்கி உதவுகின்றது. ஆகமங்கூறும் கருத்துக்களைத் திருமந்திரம் கூறும் கருத்துக்களோடு ஒப்பீடு செய்வதனால் இதனை நாம் அறியலாம்.(பஞ்சாக்ஷசரம், 1987, பக். 127-132) திருமந்திரம் வேதாகமங்களை முதனூல்களாகக் கொண்டெழுந்த வைதிக சைவநன்னூல் என்பது அறிஞர் கருத்து.

ஆகமங்கூறும் கிரியை நெறிகள் சாதனைக்குரியவை. எனவே அவற்றின் நடைமுறை விளக்கங்களையும் ஒழுங்குமுறைகளையும் அவற்றைப் பொறுப்பேற்று நடத்தும் சிவாசாரியார்களுக்கு எடுத்துக் கூறும் வகையிலான பத்ததிகள் உருவாகினவே தவிர, சைவ மரபில் இடம்பெறும் கோயிற் கிரியைகள் பற்றி யாவரும் அறிந்துகொள்ளக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய நூல்கள் அதிகம் உருவாகவில்லை. மக்கள் அறிந்து கிரகிக்கும் விளக்க நூல்களின் முக்கியத்துவத்தினைப் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் குறிப்பிட்டுள்ளார்.

> கிரியைகளின் விபரங்களைக் கூறுவதுடன் நின்றுவிடாது விளக்கங்கூறும் முறையையும் பழைய வைதீகக் கிரியை நூல்களாகிய பிராமணங்கள் முதன் முதலாக மேற்கொள்ளக் காண்கிறோம். இம்மரபு தொடர்ந்து பிற்காலக் கிரியை நூல்களில் எல்லாம் காணப்படுவனவே. எனினும் அவற்றைத் தொகுத்துச் சுவைபட வாசிக்கத்தக்கவாறும், விஷயங்கள் பலவற்றைத் தெரிந்துகொள்ளக் கூடியவாறும் வரலாற்று முறையாக எழுதப்பட்ட நூல்கள் இதுவரை தோன்றவில்லை. ஆகமங்கூறுஞ் சைவக் கிரியைகளைப் பற்றிய அளவில் இந்நூலே முதன் முதலாக எழும் வரலாற்று நூல் எனலாம்.
> (சைவத் திருக்கோயிற் கிரியை நெறி, 1963, பக். 6)

பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் எழுதி வெளியிட்ட **சைவத் திருக்கோயிற் கிரியை நெறி** என்ற நூல் ஆகமம் வழிவந்த சைவ சமய மரபைத் திருக்கோயிலோடு தொடர்புபடுத்தி அறிய இன்றியமையாத விளக்க நூலாகும். இதன் நோக்கத்தைப் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> கிரியைகளின் சிறப்பியல்புகளையும் இவை விரிந்து வளர்ந்து இன்று விளங்கும் நிலையினை எய்திய வரலாற்றையும் எழுதி இந்நூலை உருவாக்கினால் இதை வாசிப்போர் கிரியைகள் பற்றித் தெளிவான விளக்கங்களையும் நன்கு அறிந்து தெளிந்த மனதுடன் கிரியை வழியில் மேலும் உறுதியான நம்பிக்கையுடையோராய்த் தொடர்ந்து செல்வர் என எண்ணியே இந்நூலை உருவாக்குகின்றோம். ஆங்கிலத்திலும் இந்நூல் இனித் தோன்றும் பொழுது அயல் நாட்டவர்கள் கிரியைகள் பற்றி அறிய வாய்ப்புக் கிடைக்கும். இது எங்கள் சமயத்தைப் பற்றித் தவறான விளக்கங்களை அவர்கள் கொள்ளாதவாறு அதன் உண்மையான உயர் நிலையை அவர்க்கு உணர்த்தி நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குறிப்பிலிருந்து ஓர் உண்மை எமக்குத் தெளிவாகின்றது. எவ்வாறு நாவலர் மரபைப் பாதுகாக்க, சமயம் தொடர்பான விளக்கநூல்களை எழுதி வெளியிட்டாரோ அது போன்றே சமஸ்கிருத மொழியில் புலமையும் ஆகம மரபில் தேர்ச்சியுமிக்க பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் அவர்களும் இவ்வரிய கிரியை தொடர்பான விளக்க நூல் மூலம் மக்கள் மத்தியில் சைவ மரபு மேன்மையடைய முயற்சி மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆகம வழியில் மேன்மையுற்ற சைவமரவு தொடர்பான அறிவுப் பரம்பலுக்கு இவ் விளக்க நூல் இன்றியமையாததொன்றாகும். சைவத் திருக்கோயிற் கிரியை நெறி என்ற இந்நூல் கிரியைகளின் - சிறப்பாக ஆகமமரபுவழி நின்று நித்தியக் கிரியைகள், நைமித்தியக் கிரியைகள், பரிவார தெய்வங்கள், கிரியைகளின் உட்பொருளும் உயர்நோக்கும் ஆகிய அம்சங்களில் விபரங்களைத் தொகுத்தும் விளக்கியும் கூறியுள்ளது. சைவ ஆகம முறைசார்ந்த கிரியைகள் பற்றிய அறிவைத் தெள்ளிதில் தோற்றுவிப்பதே இந்நூலின் குறிக்கோளாகும்.

சைவ மரபில் ஆகமங்களின் மேன்மையை எடுத்துக் காட்டிய சான்றோர்களில் அச்சுவேலி, ச.குமாரசுவாமிக் குருக்களின் பணியும் குறிப்பிடத்தக்கதாகும். நாவலரைப் பின்பற்றிக் குருக்கள் அவர்களும் நூல்களை எழுதியும், ஆகமங்களிலிருந்து தொகுத்தும் மொழி பெயர்த்தும், நூல்களைப் பதிப்பித்தும், நூல்களுக்கு உரை எழுதியும் அருந்தொண்டாற்றிச் சைவமரபைப் பேணியவர். திருக்கோயிற் கிரியைகளை வழிநடத்தும் குருமாருக்குப் பயன்படத்தக்க பிரதிஷ்டா நூல்களைப் பெருமளவில் ஆகமங்களிலிருந்து தொகுத்து, பத்ததிகளாக வெளியிட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அவரது **சிவலிங்கப் பிரதிஷ்டா விதி** என்ற பத்ததி நூல் இலங்கையில் மாத்திரமன்றித் தென்னிந்தியாவிலும் நல்ல வரவேற்பைப் பெற்றது. அண்மையில் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் அன்னாரது திருவுருவத் திறப்பு விழா நடைபெற்றபோது சிவலிங்கப் பிரதிஷ்டா விதி மறுபதிப்பாக (1994) வெளிவந்தமை இந்நூலின் மேன்மைக்குத் தக்க சான்றாகும். சைவப்பற்று, தமிழபிமானம், ஆழ்ந்த சமய ஞானம் ஆகிய அம்சங்கள் இவரது நூல்களில் மிளிர்கின்றன. சைவ சாஸ்திர விடயங்களை வெளிப்படுத்துவதற்கும் நூல்கள் அழிந்து போகாது அவை கூறும் சிந்தனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாக்கப்படுவதற்குமான ஒரு சைவ சஞ்சிகை அவசியமென உணர்ந்ததன் வெளிப்பாடே **சைவ சாஸ்திர பரிபாலனம்** என்ற சைவ சஞ்சிகையாகும். நாவலரது சைவப் பணியைப் பற்றிக் குருக்கள் குறிப்பிட்டுள்ளதை அப்படியே இங்கு தருவது பொருத்தமாகும்.

> ஆறுமுகநாவலர் பழைய வைதிக சைவத்தைப் புனருத்தாரணம் செய்ய வந்த பெரியார். சமய குரவர், சந்தான குரவர் முதலிய அருட் செல்வர்கள் காட்டிய நெறியிலே நின்று நமது சற்சமயமாகிய வைதிக சைவத்தைப் பரிபாலனஞ் செய்தார். அதுவன்றிப் புதியதொரு நெறியை நிறுவினாரல்லர். அவர் பரிபாலித்த சைவம், அதிபரமாப்தராகிய பரமசிவன் அருளிச் செய்த வேதங்களையும் ஆகமங்களையும் முதல் நூலாகக் கொண்டு தேவாரம், திருவாசகம், திருமந்திரம், சிவஞானபோதம் முதலிய நூல்களினாலே பேசப்பட்ட வைதிக சைவ சித்தாந்த சமயமேயாம். ஆகையினாலே எந்தக் காலத்துக்கும் எல்லோருக்கும் பயன்படுமாறு நூல்களை வெளியிட்டருளினார் நாவலர் பெருமான் என்பது நிச்சயிக்கப்படும்
>
> (வேதாகம நிரூபணம், I , 1950 , பக்20-21)

என உறுதிபடக் கூறியுள்ளார். இந்நூலில் குருக்கள் தாம் உருவாகி வந்த பரம்பரை பற்றிக் கூறும் கருத்தும் குறிப்பிடத்தக்கது.

> நாவலரும் (சங்கர) பண்டிதரும் திருத்தி வைத்த பரம்பரையே நம்நாட்டில் இன்றும் சைவத்தைப் புரந்து வருகின்றது.
>
> (வேதாகம நிரூபணம் I, 1950, பக். 21)

என்ற அவரது இக்குறிப்பு சைவமரபு சார்ந்த பெரியோர்கள் மீது கொண்ட அபிமானத்தைக் காட்டி நிற்கிறது.

> சிவாலயக் கிரியைகள், விரத நிர்ணயங்கள் முதலிய சமய காரியங்களிற் கலக்கமுறுங் காலங்களில் ஒரு கலங்கரை விளக்காய்த் தெளிவுசெய்து வந்தவர்கள் குருக்கள் அவர்கள்

எனப் பண்டிதமணி குறிப்பிட்டதிலிருந்து சைவமரபை முன்னெடுத்துச் செல்வதில் குருக்கள் ஆற்றிய பணிகளின் முக்கியத்துவத்தை நாம் கணித்துக் கொள்ள முடிகின்றது. ஆகமங்களின் அடிப்படை விளக்கம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயோகம் ஆகியவற்றின் தேவைகளை உணர்ந்து செயலாற்றிய சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் சைவமரபின் வழி காட்டியாகவே திகழ்ந்தார்.

சைவ வாழ்வியலுக்கேற்ற நூல்களாகிய அனுட்டான விதி, சைவ வினாவிடை, சிவாலய தரிசனவிதி, நித்தியகரும விதி போன்றவற்றை நாவலர் எழுதியதைப் போன்று சைவமரபு பேணுவதற்கேற்ற இரு நூல்கள் குறிப்பிடத்தக்கன. சைவமரபில் புனிதமாகவும் பூஷணமாகவும் பேணப்படும் விபூதி, உருத்திராக்கம் ஆகிய இரண்டையும் பற்றி வேதம், சிவாகமங்கள், தமிழ் வேதம், சித்தாந்தம் ஆகிய நூல்களிலுள்ள கருத்துக்களைத் தொகுத்து **சைவபூஷண சந்திரிகை** (1929) என்ற பெயரில் மேலைப் புலோலி நா.கதிரைவேற்பிள்ளை அவர்கள் எழுதி, நாவலரது அருஞ் செயல்களின் நினைவாக அர்ப்பணித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்விரு சிவசின்னங்கள் தொடர்பான விளக்கங்கள் சைவசமயத்தவர்க்கு ஒரு வரப்பிரசாதம் எனக் கூறலாம்.

அதேபோன்று காஞ்சிபுரம் ஸ்ரீ பஞ்சாக்கரயோகிகள் செய்த **சைவபூஷணம்** (1925) என்ற நூல் வடமொழி மூலத்தையும் தமிழ் வியாக்கியானத்தையும் உடையது. இந்நூல் தேவகோட்டை சித்தாந்த பரிபாலன சங்கத்தாரால் வெளியிடப்பட்டது. சிவாகமங்கூறும் கிரியாபாதத்திலுள்ள முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாக சைவமரபு பற்றிய ஒரு பிரமாண நூலாகச் சைவ சமயிகளுக்குக் கிட்டியுள்ளது. சைவசமயி ஒருவனது தனிமனித ஆத்மிக மேம்பாட்டிற்குரிய விடயங்கள், ஆகமங்களின் அடிப்படை விடயங்கள், சிவபூசை பற்றிய விபரங்கள், சிவ சின்னங்களின் மேன்மை, சிவாக்கினி வழிபாடு, சைவர்களுக்கு இன்றியமையாத தீட்சை, சைவாசாரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு கைந்நூலாகத் திகழ்கின்றது.

ஏழாலையைச் சேர்ந்த பண்டிதர் மு.கந்தையா அவர்கள் சிவாகமங்களின் அடிப்படைச் சிந்தனைகளை உள்வாங்கிய நிலையில் வெளியிட்ட சைவமரபு சார்ந்த நூல்கள் இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கன. சைவமரபில் உயர்நிலையிற் கொள்ளப்படுவது சிவபூசை, சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட ஆகமங்கள் இதற்கு முக்கிய இடம் அளித்துள்ளன. சிவாகமங்களோடு தொடர்புடைய பத்ததிகளும் ஆலய பூசைக்கே முதன்மை கொடுக்கின்றன. அத்தகைய பூசைகளின் சித்தாந்த விளக்கத்தினைத் தருவது **சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்** (1978) என்ற நூலாகும். சைவசமயி ஒருவனது சைவசித்தாந்த அனுபவத்தை வளர்க்கக் கூடிய வகையில் பல விளக்கங்கள் இங்குள்ளன. காஞ்சிபுரம் க.வச்சிரவேல் முதலியார், இந்நூல் பற்றிக் குறிப்பிடுமிடத்து,

> சிவநெறி நின்று ஒழுகுவோரும் அதுபற்றி உண்மையாக அறிய விரும்புவோரும் இன்றியமையாது கற்றுணர்வதற்கு உரியது. வேதசிவாகமம், திருமுறை, சாத்திரங்கள், கிரியா பத்ததிகள் என்பவற்றின் பிழிவாயுள்ளது.

என்று கூறிய குறிப்பு இந்நூலின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.

திரு.மு.ஞானப்பிரகாசம் அவர்கள் ஆலயத்தின் சிறப்பினைக் கூறுமிடத்து, சைவசித்தாந்த உணர்ச்சி சைவாகம அறிவின்றி முற்றுப் பெறுவதில்லை, அங்ஙனமே சைவாகம உணர்ச்சி சைவ ஞானம், சைவக்கிரியை ஆகிய இரண்டும் உண்மையில் ஒன்றெனக் காணும் பேறுபெற்றாலன்றி முற்றுப் பெறுவதில்லை. இந்த அடிப்படை உண்மையில் வைத்து எடுக்கப்பட்டனவே எங்கள் சைவ ஆலயங்கள் எனக்குறிப்பிட்டு இந்நூல் சைவ சமூகத்தின் திறவு கோலாய் அமைய வேண்டுமென்ற தமது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

> மந்திர சக்தி வாய்ந்த ஞானநிமித்தமான கிரியைகள் பற்றி வடமொழியிலும் தென்மொழியிலும் அநேக நூல்கள் உண்டு. அவற்றை ஆராய்ந்து சைவக்கிரியைகள் சித்தாந்த விளக்கில் விளக்கம் செய்யப்பட்டுள்ளன.

எனப் பண்டிதமணி இந்நூல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

சைவசமய வரலாற்றில் சைவமரபு தொடர்பான நூல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் நலனுக்கென ஆகம சம்மதமாக உருவாகிச் சிறப்படைந்துள்ளதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

ஆகமநெறியில் சைவமரபை முன்னெடுத்துச் செல்ல இருவகையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. ஆகமத்தோடு தொடர்புடைய சமஸ்கிருத மொழியில் எழுந்த நூல்களைக் கற்றல், பேணுதல் மற்றும் பதிப்பித்தல். (இவ்வரிசையில் பத்ததிகள் மற்றும் சைவசித்தாந்தம் தொடர்பான நூல்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்)

2. ஆகமங் கூறும் வழியில் சைவமரபைப் பேண அவை கூறும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பெரும்பாலான சைவ சமயிகளின் நன்மைகருதி, தமிழில் நூல்கள் வெளியிடுதல்.

" இத்தகைய நூல்களை அவ்வப்போது வெளியிட்டவர்களுடைய உள்ளக்கிடக்கையும் நோக்கமும் யாது? என்பதையும் சற்றுச் சிந்திப்பது அவசியமாகின்றது.

1. தொன்மையான காலம் முதல் பேணப்பட்டுவரும் சமய மரபில் கவனக்குறைவால் நெகிழ்ச்சி அல்லது முறிவு ஏற்படாது பாதுகாத்தல், அம்மரபினைத் தொடர்ந்து பேணுதல்.

2. ஆலயங்கள் தொடர்பான ஆகம நெறிமுறைகளில் ஆகம விரோதம், ஆகம நிந்தனை, அல்லது ஆகம முரண்பாடு என்ற குறைபாடு இடம்பெறுவதைத் தடுப்பதும் ஆகம சம்மதம் என்ற நிலையில் ஆகம ஒழுங்குக்கு முக்கியத்துவம் அளித்தலும்.

3. மக்களிடையே சமயமரபு, தத்துவமரபு தொடர்பான விளக்கத்தை ஏற்படுத்தி அறிவுச்சுடர் கொளுத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இம்மரபைச் சிதையவிடாது அடுத்த தலைமுறையினருக்கு வழங்குதல்.

5. பிறமத தூஷணங்களினின்றும் இம்மரபைப் பாதுகாத்து அதில் மக்கள் உறுதியான நம்பிக்கை கொள்ளச் செய்தல்.

6. "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற மரபுவழிக் கோட்பாட்டிற்கேற்பத் தனிமனிதன், அவனது குடும்பம், அவனது சுற்றம், அவன் வாழும் கிராமம், அவன் வாழும் நாடு என்ற வரையறைகளைத் தாண்டி உலகம் சார்ந்த நலனைச் சைவமரபு கொண்டுள்ளது என்பதை உணரவைத்தல். ஆலயத்தில் இடம் பெறும் கிரியைகளின் முடிவில் 'அனைத்து உலகமும் இக் கிரியைகளினால் நன்மை பெறுவதாகுக!' என்ற பிரார்த்தனை இதற்குச் சான்று.

எனவே ஆகமஞ் சார்ந்த சைவமரபினைக் காக்க எழும் ஒவ்வொரு நூலும் காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதோடு அம்மரபின் வளர்ச்சியையும் தொடர்ச்சியையும் காட்டி நிற்பது கவனித்தற்குரிய தொன்றாகும்.

## IV

சமயநெறியொன்றினை வளங்குன்றாது பாதுகாப்பதற்கு அந்நெறியோடு தொடர்புடைய மூலநூல்களைத் தேடிக் கண்டுபிடித்தல், பதிப்பித்தல், பேணுதல் ஆகியவை அவ்சியமான தேவைகளாகும். இவ்வரிய பணி அவ்வப்போது பல்வேறு நிறுவனங்களாலும் அறிஞர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இந்தியாவிலுள்ள சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரியில் உள்ள பிரான்ஸ்நாட்டு இந்திய ஆராய்ச்சிக் கழகம் (Institute Fran cais D. Indogie, Pondichery) போன்றவை இவ்வரிய பணியிற் கொண்டுள்ள ஈடுபாடு குறிப்பிடத்தக்கது. குறிப்பிடத்தக்க ஆகமங்கள், மற்றும் பத்ததிகள் இந்நிறுவனங்களின் முயற்சியின் பயனாய் வெளிவந்துள்ளது. **காமிகாகமம்** பூர்வபாகம் (1889), **காமிகாகமம்-** உத்தரபாகம் (1899), **காரணாகமம்-**பூர்வபாகம் (1900),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காரணாகமம்**- உத்தர பாகம் (1902), **மதங்க பாரமேஸ்வர ஆகமம்**-வித்யாபாகம் (1925), **மகுடாகமம்**-பூர்வபாகம் (1977)**மிருகேந்திர ஆகமம்**-யோக,ஞான பாதங்கள் (1928) **சுப்ரபேதம்** (1928), **பௌஷ்கராகமம்** (1925), **வாதுளாகமம்**-ஞானபாதம், **கிரணாகமம்** ஞானபாத தமிழ் மொழிபெயர்ப்பு (1986), **இரௌரவாகமம்**-பாகம் I (1961), **இரௌரவாகமம்**- பாகம் II (1972) **அஜிதாகமம்-பாகம்** I (1963) **அஜிதாகமம்**-பாகம் II (1967), **இரௌரவோத்ராகமம்** (1983), **சோமசம்பு பத்ததி**-பாகம் I (1963), **சோமசம்பு பத்ததி-பாகம்** II (1968), போன்றவை பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளன. இவை எமது சைவ மரபின் அரும் பொக்கிஷங்கள். சென்னை குப்புஸ்சாமி சாஸ்திரி ஆய்வு நிறுவனம் ஆகமங்களை ஆய்வு செய்து விளக்க நூல் ஒன்றினை வெளியிட்டுள்ளது. **சிவாலயமும் ஆலய வழிபாடும் (Siva-Temple and Temple Rituals, 1988)** என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் வெளிவந்த இந்நூலில் என்.ஆர்.பட்(Bhatt), எஸ்.எஸ். ஜானகி பிரட்குளோதி (Fred.W.Clothey) வயின் சேர்டம் (Wayne Surdam) போன்ற அறிஞர்களால் ஆகமம் கூறும் திருக்கோயிற் கிரியைகளைப் பற்றிய பல்கோணப் பார்வையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றை ஒன்றிணைத்துப் பார்க்குமிடத்து ஒப்பீட்டடிப்படையில் ஆகம மரபு பற்றிய பரிமாணங்களை அறிய முடிகின்றது.

இந்தியாவில் ஏறக்குறைய பன்னிரண்டு மாதங்களுக்கு (1976-1977) மேலாக மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரர் கோயிலில் சி.ஜே. புல்லர் (C.J.Fuller) என்பவர் வெளிக்கள ஆய்வினை மேற்கொண்டு அதன் பெறுபேறாக வெளியிட்ட நூலில் ஆலய வழிபாட்டில் ஆகம மரபு சார்ந்த செயற்பாடுகளும் மற்றும் சிவாசாரியர்கள் அம்மரபினைப் பேணிப் பாதுகாப்பதில் காட்டும் ஈடுபாடும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. (Servants of Goddess The Priests of South Indian Temple, 1984) ஆகமஞ் சார்ந்த ஆகம நடைமுறைகள் பற்றிய ஐயங்கள் முரண்பாடுகள் ஆலயங்களில் தலைதூக்கும் இற்றைக் காலத்தில் ஆகமம் தொடர்பான ஆய்வுகள் பல்வேறு நிலைகளில் விரிவடைய வாய்ப்பு உள்ளது. கிடைக்கப்பெறும் ஆகமங்கள் கூறும் விடயங்களை ஒப்பீடு செய்து அவை கூறும் விடயங்களின் பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களையும் சிறப்பு அம்சங்களையும் அறிந்து கொள்வது அவசியமாகும். ஆகமம் தொடர்பான அறிவுப்பரம்பலுக்கு உதவும் வகையில் ஆகமங்களை மொழிபெயர்த்தலும் அவசியமாகின்றது. இதில் புதுச்சேரி பிரான்ஸ் நாட்டு இந்திய ஆராய்ச்சிக் கழகத்தின் ஆய்வுப்பணி குறிப்பிடத்தக்கது. பிரெஞ்சு அறிஞரான பிலியோசா (Jean Filliozat) சைவக்கிரியை மரபுகளைச் சிவாகமங்களை மூலமாகக் கொண்டு மேற்கொண்டுள்ள ஆய்வு ஒப்பீட்டடிப்படையிலான சமய அறிவை விருத்திசெய்ய உதவுவது. இந்நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள ஆகமங்கள் நாகரலிபியில் அமைந்த சமஸ்கிருத மூலத்துடனும் பிரெஞ்சு மொழிபெயர்ப்புடனும் உள்ளன. குறிப்பிட்ட ஒரு கிரியை அல்லது ஆலய அமைப்பு அல்லது தெய்வ விக்கிரகத்துக்குரிய உருவமைப்பு அல்லது பிரதிஷ்டை தொடர்புடைய விபரங்களை ஓர் ஆகமம் குறிப்பிடுமிடத்து அவ்விடயங்களுக்கு ஏற்றவாறு ஏனைய ஆகமங்கள் தரும் விபரங்களையும் சேர்த்து அடிக்குறிப்பில் உரிய விபரங்களுடன் தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க ஆய்வு முயற்சியாகும். குறிப்பிட்ட விடயம் பற்றி ஏனைய ஆகமங்கள் தரும் விபரங்களை ஒன்றிணைத்துப் பார்க்குமிடத்து ஆகமமரபின் விளக்கத்தைப் பெறவும் அது தொடர்பான அறிவு விரிவடையவும் வாய்ப்பு உண்டு.

ஆகம அறிவினையும் பயிற்சியையும் வழங்குவதில் சைவ மரபிற் குருகுலங்கள் முக்கிய இடத்தினை வகித்து வருகின்றன. மரபுசார்ந்த சமயக் கல்வியைப் பெறுவதற்காக அமைக்கப்பட்டனவே இக்குருகுலங்கள். யாழ்ப்பாணத்தில் உள்ள சிவானந்த குருகுலம் சிவாசாரிய பயிற்சியினை வழங்குவதில் முக்கிய பங்கு வகித்து வந்துள்ளது. இதேவரிசையில் இணுவிலில் உள்ள ஸ்ரீதர்ம சாஸ்தா குருகுலம், நல்லூர் ஸ்ரீ வித்தியா குருகுலம் போன்றவையும் சிவாசாரிய மாணவர்களுக்குரிய ஆகமப் பயிற்சிகளை அளித்து வருகின்றன. இந்தியாவில் உள்ள ஆதீனங்களிலும் உரிய பயிற்சி பெற்று சைவமரபைப் பேணும் பணியில் குருமார் ஈடுபட்டுள்ளனர். 1994 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஸ்ரீ பரமேஷ்வரன் ஆலயத்தில் சேர் பொன். இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனம்தொடக்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஸ்ரீபரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபையினர் இதற்கான உதவிகளைச் செய்து வருகின்றனர். சைவமரபு மற்றும் ஆகமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்த ஆய்வுகளும் பயிற்சிகளும் புதிய பரிமாணங்களைப் பெற இந்நிறுவனத்தின் மூலம் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் கீழ் இயங்கும் சிவாசாரிய குருகுலத்தில் மாணவர்க்கு உரிய வேத ஆகமப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இக்கட்டுரையாக்கத்திற்கு உதவிய நூல்கள்


01. **சைவதூஷணபரிகாரம்** ஆறுமுகநாவலர், 1956.

02. **சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள்**
கந்தையா,மு. மானிப்பாய் இந்துசமயவிருத்திச் சங்கம், 1978

03. **சிவாலயசேவை ஏன்? எப்படி?**
கந்தையா, மு சைவசமய அபிவிருத்திச்சங்கம் சுன்னாகம், 1986.

04. **சிந்தனைக் களஞ்சியம்**
கணபதிப்பிள்ளை, சி, இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். பாராட்டு விழாச்சபை, உரும்பிராய், 1978.

05. **சைவ நற்சிந்தனைகள்**
கணபதிப்பிள்ளை.,சி உரும்பிராய், 1995.

06. **ஆறுமுகநாவலர்**
கணபதிப்பிள்ளை., சி., இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் தென்மராட்சி பாராட்டு விழாச்சபை 1979.

07. **சைவபூஷண சந்திரிகை**
கதிரைவேற்பிள்ளை, நா.,வித்தியாரத்நாகர அச்சுயந்திரசாலை, சென்னை, 1929.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. **வேதாகம நிருபணம்**
குமாரசுவாமிக் குருக்கள்,ச.,கரணவாய் சைவ ஆராய்ச்சிச் சங்கம், 1950,1951.

09. **நீர்வேலி ஸ்ரீலஸ்ரீ சிவ-சங்கர பண்டிதர் சரித்திரம்,**
குமாரசுவாமிக் குருக்கள்,ச., ஞாபகார்த்த சபை, நீர்வேலி, 1954.

10. **சைவத் திருக்கோயிற் கிரியை நெறி**
கைலாசநாதக் குருக்கள், கா., இந்துகலாபிவிருத்திச் சங்கம், கொழும்பு, 1963.

11. **நாவலர் சரித்திரம்** கைலாசபிள்ளை, த., 1916.

12. **சைவபூஷணம்** ஸ்ரீ பஞ்சாக்கரயோகிகள், சிவாகம சித்தாந்த பரிபாலன சபை, கும்பகோணம், 1925.

13. **சிவாகமங்களும் திராவிட நாகரிகமும்,**
சபாரத்தினம், குல .டாக்டர், உயராய்வு 2, 3, பதிப்பாசிரியர், டாக்டர்பொன். கோதண்டராமன், சென்னைப்பல்கலைக்கழகம்,சென்னை,1984-85.

14. **காசிவாசி செந்திநாதையர்**
பதி. கணேசலிங்கம்,செந்திநாதையர் ஞாபகார்த்த சபை. குப்பிழான், 1978.

15. **பொ. கைலாசபதி அவர்களின் சிந்தனைகள்,**
பதிப்பாசிரியர்கள் சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு . 1994.

16. **சித்தாந்த சாத்திரம்-பதினான்கு**
மூலமும் உரையும், சைவ சித்தாந்த மகாசமாஜம், சென்னை,1940

17. **சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் பாராட்டு விழாமலர்,**
பதிப்பாசிரியர் ச. அம்பிகைபாகன், 1960.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ ஆகமங்கள் - ஒரு நோக்கு

முனைவர் - க.பாஸ்கரன்

## முன்னுரை

சீரும் சிறப்பும் மிக்க இந்தியப் பாரம்பரியத்தில் சமய இலக்கியங்கள் ஈடு இணையற்றவையாகத் திகழ்கின்றன. இவை வேறுவேறு காலத்தவை; பல வகைப்பட்டவை; பலமொழிப்பட்டவை எனினும், இடைக்கால வடமொழி இலக்கியத்தின் மிகச் சிறந்த பகுதியாக ; பெரும் பகுதியாக விளங்கியவை ஆகமங்கள் என்று வல்லுநர்களால் கருதப்பட்டன. ஆனால் இச்சிறந்த ஆகமங்கள் தாம் பெற்றிருக்க வேண்டிய வரவேற்பைப் பெறாதமை கண்டு இந்தியச் சமயங்களிலும் வடமொழி இலக்கியங்களிலும் ஆய்வார்வம் காட்டும் அனைவரும் வியப்பும் வருத்தமும் தெரிவிக்கின்றனர். இன்று வரை வேதங்களும் உபநிடதங்களும் அறிமுகமாயிருக்கும் அளவிற்கு ஆகமங்கள் அறிமுகமாகவில்லை என்பது கசப்பான உண்மையாகும். ஆகம ஆராய்ச்சியரில் திரு. கேண்டா அவர்கள் இந்நிலை குறித்துக் குறிப்பிடுகிறார்.

'இவற்றிற் பெரும்பான்மையான பகுதிகள் தாம் பெறவேண்டிய கவனங்களைப் பெறவில்லை. இந்தியச் சமயங்களின் மூல ஆதாரங்களாகத் திகழும் இவை பற்றி ஆராய்ச்சியாளர்களும் மிகு ஆர்வம் காட்டவில்லை. பெரும்பாலானவற்றிற்குத் தொகுப்பாசிரியர்களே தெரியவில்லை. மேலும், இந்நூல்களுக்கு மிகக் குறைந்த அளவிலேயே மொழி பெயர்ப்புகள் உள்ளன. உண்மையில் இந்நூல்களிலேயே இந்து சமயத்தின் முதன்மையும் முக்கியத்துவமும் வாய்ந்த ஆதாரங்கள் கிடைக்கின்றன.'

எனவே ஆகமங்கள் மிகுதியாக அறிமுக மாகாமலிருப்பதற்குச் சரியான பதிப்புகளோ முறையான மொழி பெயர்ப்புகளோ இல்லாமல் இருப்பதையும் இங்கு நாம் காரணமாகக் குறிப்பிடலாம். உண்மையில் ஆகமங்களிற் கூறப்பட்டுள்ள கோட்பாடுகளோ, நடைமுறைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டுக் குறிப்புகளோ பொது மக்களால் விரும்பப்படா தவையாகவும் , ஒதுக்கப்படக்கூடியனவாகவும் இல்லை. பொதுமக்களால் விரும்பப்படவில்லை, எனவே இவற்றை ஒதுக்கிவிட்டனர் என்று எவரும் கூறிவிடமுடியாது. எட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு பதினான்காம் நூற்றாண்டு வரை சமய வாழ்வில் ஆல்போல் செழித்து, அறுகுபோல் வேரோடித் தோன்றும் இச்சமய இலக்கியங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் சைவ வைணவ சமயங்களின் நடைமுறைகளை வகுத்துத் தரக்கூடிய செல்வாக்கைப் பெற்றனவாகவே இன்றும் விளங்குகின்றன.

வடமொழியிலேயே இயற்றப்பட்டதாகக் கூறப்படும் இந்த இலக்கியங்கள் ஏன் வடமொழி வல்லுநர்களாற் கூட வெளியுலகத்திற்குச் சரிவர அறிமுகப் படுத்தப்படவில்லை என்பது இன்று வரை புதிராகவே உள்ளது. வடமொழியில் இருப்பினும் எழுத்துக்கள் கிரந்தங்களாக இருந்தமை ஒரு காரணம் எனக் கூறப்பட்டாலும், இக்காரணம் நம் ஐயத்தினை முழுமையாக நீக்கிவிட மாட்டாது.

வேதகாலம், உபநிடத காலம், புராண இதிகாசக் காலம் ஆகம காலம் ஆசார்யர்காலம் என்று கருதப்படும் வரிசையில் வேத காலம் பற்றிச் செய்திகள் அதிகம் கிடைக்கப் பெறுகின்றன. உபநிடதங்கள் பற்றிய செய்திகளும் புராண இதிகாசங்கள் பற்றிய செய்திகளும் புகழ் பெற்று விளங்குகின்றன. ஆசார்யர் காலம் என்பது அனைவரும் அறிந்த ஒன்றேயாகும். இக்காலங்கட்கு இடையே மிக நீண்ட இடைவெளி இருந்தாலும் அதில் ஒரு வகையான தொடர்ச்சி அமைந்துள்ளது. இத்தொடரில் ஆகமங்கள் பற்றிய செய்திகள் மட்டும் எப்படி அறியப்படாமல் இருந்தன என்பதே நமது வேதனை கலந்த வியப்பாகும்.

வடமொழி இலக்கியத் தொடர் வளர்ச்சியை நோக்கும்போது வேறொரு ஒழுங்கையும் நம்மால் அறிய முடிகிறது. வருணன், இந்திரன், வாயு, அக்னி என்னும் இயற்கைச் சக்திகள் தெய்வ கணங்களாக வழிபடப்பட்டு வந்த வேதகாலம், மந்திரங்கள் என்னும் வழிபாட்டுப் பாடல்கள் நிறைந்த காலமாகவும் இருந்துள்ளது. இம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரங்களெல்லாம், இயற்கை வழிபாட்டையும் இயற்கையையே சமயமாகக் கொண்ட உண்மையையும் முத்திரையிட்டுக் காட்டுவனவாகவே உள்ளன. உண்மையில் இவை ஆரியர்களின் சொந்த இருப்பிடத்திலிருந்து இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டவையே என்னும் பேராசிரியர் ஹரியண்ணா அவர்களின் கருத்து அறிஞர்கள் பலருக்கும் உடன்பாடானதே.

இப்போது மற்றொன்றையும் நாம் சிந்திக்க வேண்டும். பிற்காலத்தில் சிறந்து வளர்ந்த இந்து சமயத்தில் மிகு செல்வாக்குடன் விளங்கும் சிவனும், விஷ்ணுவும் வேதகால ஆரியர்களால் முக்கியமானவராக வழிபடப்படவில்லை. அல்லது கருதப்படவில்லை என்பதையும் சிந்திக்க வேண்டும். மாறாக ஆரியர்களுக்கு முன்பே இங்கு வாழ்ந்த திராவிட மக்களிடமிருந்தும், அவர்களின் தெய்வங்களிடமிருந்தும் தங்களைக் காத்துக் கொள்ள தமது கடவுள் வழிபாட்டை வேத காலத்திலேயே நடத்தியுள்ளனர் என்றும் நமக்குத் தெரியவருகிறது. குறிப்பாக வருணன், இந்திரன் ஆகிய இரு கடவுளரிடத்திலேயே அவர்கள் நம்பிக்கை வைத்திருந்தனர். 'அனைத்து உயிர்களின் மிகப் பெரிய அரசர்கள்' என்றே இருவரும் வணங்கப்பட்டனர். வருணன். 'நன்னெறி காப்பவன்' என்றும் இந்திரன் 'ஆரியர் பகையை வெல்பவன்' என்றும் கருதப்பட்டதாகப் பேராசிரியர் ஹரியண்ணா குறிப்பிடும் செய்திகள் ஒரு கால கட்டத்தின் முக்கியமான நிலையை நமக்குத் தெரிவிக்கின்றன.

ஆரியர்களை வென்று தம்மைக் காப்பவன் என்னும் நம்பிக்கையுடன் 'ருத்ரன்' என்னும் கடவுளைத் திராவிடர்கள் ஏற்றுக் கொண்டு சிவ வழிபாட்டுடன் ருத்ரனையும் இணைத்துக் கொண்டமை பற்றிச் சிவ வழிபாட்டின் வரலாற்றை ஆய்ந்துவரும் மரியசூசை தவமணி போன்றவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

விஷ்ணுவின் வழிபாடு வேதகாலத்தில் அவ்வளவாக இல்லையோ என்று தோன்றுகிறது. பழைமையான ரிக் வேதத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷ்ணு பக்தி இருந்ததாகப் பேராசிரியர் அனிமா சென்குப்தா அவர்கள் குறிப்பிட்டாலும், வருணனும் இந்திரனும் பெற்றிருந்த இடத்தைச் சிவனும் விஷ்ணுவும் அந்தக் காலகட்டத்தில் பெற்றிருக்கவில்லை என்பதே பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தாகும். வளர்ந்து செல்வாக்குப் பெற்ற சைவ வைணவ மரபுகளால் வருணனின் தன்மைகளும் இந்திரனின் தன்மைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டமையால் அவர்கள் சிறு தேவதைகளாக மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டமையால் ஏற்பட்ட மாற்றம் நாம் புரிந்து கொள்ளக்கூடியதே.

பல தெய்வ வழிபாடும், தெய்வங்களைவிட, வேத வழிபாட்டை நடத்தி வைக்கக் கூடியவர்களின் ஆதிக்கமும் மேலோங்கிய காலத்துக்குப் பின்னர் 'ஒன்றே பரம்பொருள்' (Ekam Sat) 'நானே பிரம்மம்' அல்லது 'ஆன்மாவே பிரம்மம்' (Aham Brahmasmi) என்னும் புதிய சிந்தனைகள் முழங்கிய உபநிடதங்கள் தோன்றி, சடங்குகள் நிரம்பிய வேதமரபை மீறி, ஒரு தத்துவார்த்தச் சூழ்நிலையை உருவாக்கியுள்ளன. அதையொட்டி மேலான பரம்பொருளை எட்டாத ஒன்றாகப் போய் விடாமல் பார்த்துக் கொள்ளப் புராணங்கள் பல தோன்றி மனித அந்நியோன்யத்தை நிலைநாட்டவும் முயன்றிருக்கலாம்.

பழைய மரபுகளும் புதிய சிந்தனைகளும் கலந்து, ஒன்றையொன்று அனுசரித்தும் முரண்பட்டும் வளர்ந்த சூழ்நிலைகளின் வரிசையில் மீண்டும் சடங்கு சம்பிரதாயங்கள் தலை யெடுத்தபோது ஆகமங்களும் வளர்ந்தன. இச்சடங்குகள் மேலோங்கிய போது அந்தச் சூழ்நிலையை அர்த்தமுள்ளதாக்கவோ அவற்றை யொட்டிய மேலோங்கிய சிந்தனைகளை வளர்க்கவோ ஆசார்யர்கள் காலம் உதவியிருக்கலாம் என்று கருதலாம்.

நாம் முன்னர் குறிப்பிட்ட ஒழுங்கு என்பது சடங்குகள் மிகுந்தபோது தத்துவார்த்தச் சிந்தனைகளும் (metaphysical thinking) தத்துவம் தனி மனிதப் பிடியிலிருந்து மேலே போகிறபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றிற்கு மனித அந்நியோன்யம் ஏற்படுத்தும் முயற்சியில் சடங்குகளும் மாறி மாறி வந்திருக்கின்றன. இவையெல்லாம் நம்முடைய ஊகங்களே.

இந்த வளர்ச்சிப் போக்கில் ஆகமங்கள் ஒரு வகையான திருப்பு முனையாகவே அமைந்திருக்கக்கூடும். வேத காலத்தில் உருவ வழிபாடு இல்லை. எந்தக் காரியமாக இருந்தாலும் அக்னியின் மூலமாகவே செய்கிற வழக்கம் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டது. ஏதோவொரு விதமான, தனிப்பட்ட, உருவங்கொண்ட கடவுளை மனத்தில் வைத்துக் கொண்டு செய்யப்பட்டாலும், கோயில் என்னும் உணர்வோடு கூடிய மென்மையான பக்தியென்றும் வகுக்கப்பட்ட வழிபாட்டு மரபுகள் ஆரியர்களுக்கு அறிமுகம் ஆகாதவையேயாகும்.

எனவே ஆலய வழிபாட்டையும் அதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்திய ஆகமங்கள் வேத மரபிலிருந்து ஓரளவு விலகிச் சென்றன என்றே நாம் கொள்ளலாம். இந்தியாவின் இத்தகைய சமய வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கல்லாக நோக்கமாக-மாற்றத்தின் நிலையாக விளைந்த ஆகமங்கள் ஏன் அவற்றிற்குரிய இடத்தையும் முக்கியத்துவத்தையும் பெறவில்லை என்பதே வேதனையுடன் கூடிய ஐயத்தை அதிகப்படுத்துகிறது. இருப்பினும் ஆகமங்களில் பல குறிப்பாக வைணவ ஆகமங்கள் சிறப்பாக வைகாநச ஆகமங்கள் தங்கள் வேதவழிப்பட்ட தன்மையை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றன. இன்னும் சொல்லப்போனால் இந்தியப் பண்பாட்டில் சிறப்பு என்பது பழைமையை முழுதும் ஒதுக்கிவிடாமல் காலத்திற்கேற்ற மாறுதல்களைச் செய்து கொண்டு பழைமையின் கருத்துக்களைத் தன்னுடன் இணைத்துக் கொள்வதேயாகும். இந்த அம்சம் பெரும்பாலான ஆகமங்களிற் காணப்படுகிறது. ஆகமங்களில் பெரும் பகுதியை ஆட்கொள்கிற கிரியை - தீ வளர்த்து வழிபாடு செய்கிற பழக்கம் வேத வழிபாட்டுப் பழக்கமேயாகும். இதை அப்படியே ஏற்றுக் கொண்டு உருவ வழிபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய நிர்மாணம் போன்ற மாறுதல்களைச் செய்து கொண்டு ஆகமங்கள் வளர்ந்துள்ளன. பேராசிரியர் ஹிரியண்ணா அவர்கள் உபநிடதங்களின் வளர்ச்சி பற்றிக் குறிப்பிடும்போது இந்தியப் பண்பாட்டின் சிறப்பு அம்சம் என்னவெனில் ஒன்று புதிதாக வளர்ச்சியடையும் போது பழைமையினை ஒதுக்கிவிடாமல் அதனுடன் புதுமையினை இணைத்துக் கொள்வதேயாகும் என்று குறிப்பிடுவார். அந்த வகையிலேயே நாம் ஆகமங்களின் வளர்ச்சியை நோக்கலாம்.

ஆகமம்' என்ற சொல் கூட 'மரபு'(Tradition) என்ற பொருளையே கொண்டிருக்கிறது. ஆனால் ஆதிசங்கரரால் இம்மரபு வேதத்துக்கு ஏற்புடையதாக ஏற்றுக் கொள்ளப் படவில்லை என்னும் கருத்தும் நிலவுகிறது. சைவமும் வைணவமும் வேத வழியான வழிபாட்டு மரபிற்கு அப்பாற்பட்ட சிலவற்றையும் தம்முள் கொண்டிருந்தன. அவற்றை விளக்குவதற்கும் அல்லது அப்படியொரு மரபை உருவாக்குவதற்கும் ஆகமங்கள் பயன்பட்டுள்ளன. அவற்றுள் ஆகமங்கள் குறிப்பிடும் மேலான பரம்பொருளின் பக்தி வழிபாடு மிகமிக முக்கியமானதாகும்.

சைவ - வைணவ ஆகமங்கள் பெரிதும் போற்றுகின்ற சிவ-விஷ்ணு வழிபாடும் பக்தியும் வேதகாலத்திலும் அதன் பின்னரும் எப்படி இருந்தன என்று பார்க்கும் வரலாற்றுப் பின்னணி ஆகமங்களைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள உதவும் என்பதால் அந்த வளர்ச்சி பற்றி இப்போது சிந்திக்கலாம்.

வேத காலத்தில் வழங்கி வந்த உருவம் இல்லாத இறை வணக்கம் (ImpersonalTheism) வேத காலத்துக்குப் பின்னரும் தொடர்ந்தது. 'ப்ரஜாபதி' என்று வேத காலத்தில் வணங்கப்பட்ட கடவுள் காலப்போக்கில் 'பிரம்மா'என்று வழங்கப்பட்டார். ஆனால் பெரிதும் வணங்கப்பட்ட பிரம்மாவின் இடத்தைச் சிவனும் விஷ்ணுவும் பெற்றனர் என்பது வரலாறு காட்டும் உண்மையாகும். சிவனும் விஷ்ணுவும் ப்ரஜாபதிக்கு முன்னரே வணங்கப்பட்ட கடவுளர்கள். இவர்கள் ஓரளவிற்கு உருவங்களோடு வணங்கப்பட்டிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித(உருவ)வயப்பட்ட இறை வழிபாடு (personal Theism) மக்கள் மனதில் செல்வாக்குப் பெறப்பெற பிற வகை வழிபாடுகள் பின்னுக்குத் தள்ளப்பட்டன. காலப்போக்கில் தெளிவான வடிவங்கள் கற்பிக்கப்பட்டு சிவனும் விஷ்ணுவும் அடையாளம் காட்டப்படக்கூடிய அளவிற்கு வித்தியாசமாக்கப்பட்ட கடவுள்களாக வடிவெடுத்திருக்கலாம் என்பது வரலாற்று நோக்கில் பார்க்கும்போது தெரியவரும் உண்மைகள் ஆகும்.

மிகத் தொன்மையான வேதப் பாடல்களிலேயே குறிப்பிடப்படும் ருத்ரன்' சிவனாக இருக்கக்கூடும் என்று கருத்தப்படுகிறது. மொஹஞ்சதாரோ ஹரப்பா ஆராய்ச்சிகள் சிவவழிபாடு ஆரியர்களுக்கு முற்பட்டது என்று உறுதிப்படுத்தினாலும், வேத காலத்தில் 'சிவன்' ருத்ரன் என்னும் பெயரிலேயே வழங்கப்பட்டிருக்கலாம் என்று எண்ணுவோர் உண்டு. அந்தச் சூழ்நிலையில் 'ருத்ரன்' அழிவுகளை உண்டாக்குகிற 'புயல்' 'மின்னல்' இவற்றோடு உவமிக்கப்பட்டு மின்னலாகவும், புயலாகவும், அவற்றோடு கூடிய உறுமலாகவும் கருதப்பட்டான். 'ருதிர்' என்றாலே 'உறுமுதல்' அல்லது 'மிகுந்த ஒளியை உண்டாக்குதல்' என்று பொருள். இடியும் மின்னலும் உருவாக்குகிற உறுமல்கள் அவனைப் பற்றிய ஒரு பயத்தை உருவாக்கியிருக்கக் கூடும். அந்த அச்சமே 'அவன் காட்டில் வாழ்பவன்' ,'சடைமுடி தரித்தவன்', 'புலித்தோல் ஆடை உடுத்தவன்' என்ற அச்சமிகு தோற்றத்தை உடையவனாகக் கருத இடமளித்திருக்கும்.

கால ஓட்டத்தில் துறவிகளின் கடவுளாக ருத்ரன் கருதப்பட்டான். கடுமையான தோற்றம் கொண்ட இந்தக் கடவுளைச் சாந்தப்படுத்த வழிபாடுகள் நடத்தப்பட்டன. அவற்றின் மூலம் அவன் மங்களகரமான 'சிவமாகக்' காட்சி தருவான் என்று நம்பினார்கள். இவ்வாறு தொடக்க காலத்தில் கடுமையாகக் காட்சி தந்த ருத்ரன், வேத கால முடிவில் இனிமையான சிவனாக வடிவம் பெற்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது. 'பெரும் கடவுள்' என்னும் பொருள்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மகாதேவன் என்னும் சிறப்புப்பட்டமும் சிவபெருமானுக்கு அமைந்தது.

சுவேதாசுவதர உபநிடத காலத்தில் சிவவழிபாடு உயர் நிலையை அடைந்தது. சிவனுக்கு 'பக்தி' - அதாவது அன்பின் வழிப்பட்ட வழிபாடு பற்றிச் சுவேதாசுவதர உபநிடதத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இறைவனின் அருள் (ப்ரசாத்) பற்றியும் அது குறிப்பிடும்.

'பக்தி' என்னும் சொல் 'பஜ்' என்ற வடமொழியின் வேரில் பிறந்ததாகும். பக்தி என்பது பக்தர்கள் ஆண்டவனிடத்தில் செலுத்துகிற அன்பு மட்டுமின்றி ஆண்டவன் பக்தர்களிடத்தில் காட்டுகிற கருணையும் ஆகும் என்று மரியசூசை தவமணி குறிப்பிடுகிறார்; அதாவது பக்தி வயப்படுகிறபோது அடியவன் ஆண்டவனிடத்திலும் ஆண்டவன் அடியவனிடத்திலும் ஒன்றிவிடுகிற பாங்கை அவர் குறிப்பிடுவதாக நாம் கொள்ளலாம்.

மேலும் மகாபாரதம் வழக்கில் இருந்த காலத்தில் கூட சிவவழிபாடு செல்வாக்குப் பெற்றே விளங்கியது. எனவே பழங்காலந் தொட்டே இங்கு வழங்கி வந்த சிவ வழிபாடு இடையில் பலப் பல மாற்றங்கட்கு உட்பட்டு மீண்டும் செல்வாக்குப் பெற நீண்டகாலம் பிடித்திருக்கலாம். "தக்ஷயக்ஞம்" பற்றிக் குறிப்பிடாத புராணமே இருக்க முடியாது. சிவ வழிபாடு முக்கியமான முரண்பாட்டைச் சந்தித்த ஒரு குறியீட்டுக் கல்லாகவே நாம் 'தக்ஷயக்ஞத்தை'ப் புரிந்து கொள்ளலாம். "கீழான கடவுள்" என்னும் காரணத்துக்காக 'சிவன்' யக்ஞத்துக்கு அழைக்கப்படவில்லை என்று காணப்படும் குறிப்பு வைதிக மரபுக்கும், சிவவழிபாட்டுக்கும் ஏற்பட்ட மோதலைக் குறிக்கும் அடையாளமாகவே நமக்குப்படுகிறது. வேத காலத்துக்கு மிகப் பின்னர் தோன்றிய சைவ உபநிடதங்கள் சிவ வழிபாட்டையும், சிவனே பரம்பொருள் என்னும் கருத்தையும் நிறுவப் பெரிதும் முயன்றுள்ளன என்பது உபநிடத வரலாற்றைப் புரிந்து கொள்கிறவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புக்கொள்ளும் செய்தியாகும்.

சூரிய வழிபாட்டிலிருந்து சிவ வழிபாடு வந்திருக்கலாம் என்று கருதுவோரின் கருத்தையும் நாம் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். அதேபோல அக்கினி வழிபாடும் சிவ வழிபாட்டுக்கு முன்னோடியாக இருந்திருக்கக் கூடும் என்று கருதுவோர் உண்டு.

வேத காலத்தில் அக்கினி மிக முக்கிய கடவுளாக ஏற்றுக் கொள்ளப்பட்டான். அக்கினியை முன்னிட்டுத்தான் அனைத்துக் காரியங்களும் செய்யப்பட்டன. தெய்வங்களை அடைய அக்னி வழியாக இருந்தது ஒரு நிலை. அதற்கும் மேலாக அக்னியே சிவன் என்னும் நிலைக்கு உயர்த்தப் பட்டிருக்கலாம் அல்லது அக்னி வழிபாடு சிவவழிபாட்டோடு ஒன்றியிருக்கலாம் என்றும் கூறுகிறார்கள்.

சிவன் அக்கினிப் பிழம்பாக நிற்க விஷ்ணுவும், பிரம்மாவும் அடியையும் முடியையும் தேடிப் போனார்கள் என்று சொல்லப்படுகிற புராணக்கதை சிவனின் பெருமையை உணர்த்துவது மட்டுமல்லாமல் அக்னியும் சிவனும் ஒருமைப்படுத்தப்பட்டுவிட்ட ஒரு கால கட்டத்தையும் குறிக்கிறது என்று நாம் எண்ணலாம். ஒழுங்குபடுத்தப்படாத தீப்பிழம்பின் வடிவம், ஒருவகையான ஒழுங்கு நிலைக்கு உட்படுத்தப்பட்ட சிவலிங்க வடிவம் பெற்றது என்று எண்ணலாம்.

சிவவழிபாடு சூரிய வழிபாட்டிலிருந்து வந்திருக்கலாம் என்று சொல்லுகிறவர்கள் 'சிவன்' என்னும் சொல்லின் அடிப்படையிலும் தங்கள் விளக்கத்தை அமைக்கிறார்கள். 'சிவன்' என்னும் சொல் 'சிவப்பு' என்ற சொல் அடிப்படையில் பிறந்தது. சூரியன் சிவந்தவன் சிவந்து இருக்கிற சூரியனைக் கண்டு வியப்படைந்த மக்கள் அந்தச் சிவப்பனையே தங்கள் கடவுளாக ஏற்றுக் கொண்டார்கள். சிவப்பு செம்மையைக் குறிக்கும். செம்மை என்பது முழுமை, மங்களம், நன்மை என்பனவற்றைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் முழுமை, மங்களம், நன்மை இவற்றின் வடிவம். எனவே சூரியன் சிவப்பாக இருப்பதாலும் வளங்களைத் தருவதாலும் இரவின் அச்சத்தை நீக்கும் இரவியே, வாழ்க்கை இரவின் அச்சத்தை நீக்கக் கூடிய பரம்பொருளாகிய சிவனாக இருக்க வேண்டும் என்று நினைந்து வழிபட்டிருக்கக் கூடும் என்று நம்புவோர் உண்டு. சிவவழிபாட்டில் சூரிய பூசையும் முக்கிய அங்கம் வகிப்பதால் அதுவே சிவபூசை என்று எண்ணியவரும் உண்டு. சூரியனே சிவன் என்று கூறும் மத்ஸ்ய புராணத்தின் வழிப்பட்ட நம்பிக்கையாக இது வளர்ந்திருக்கக்கூடும். பிற்காலங்களில் சூரிய வழிபாட்டை உள்ளடக்கிய சூரிய மரபைச் சிவமரபாக ஆக்கிய மாற்றம் எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் நிகழ்ந்திருக்கலாம் என்று சொல்ல முடியாது.

இந்த மரபின் அடிப்படையிலோ, தாக்கத்தின் காரணமாகவோ திருமுறை நூல்களில் ஒன்றாகக் கருதப்படும் திருமுருகாற்றுப்படை தொடங்கும்போதே 'உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு, பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு ஓவற இமைக்கும் சேண் விளங்கு அவிரொளி' என்று முருகப் பெருமானுக்குச் செலுத்தும் வணக்கத்தைச் சூரிய வணக்கத்தோடு இணைத்துப் பேசுகிறது. முருகப்பெருமானையே நினைத்துப் பாடப்பட்ட திருமுருகாற்றுப்படை சங்க நூல்களில் ஒன்றானாலும், திருமுறைகளிலும் இடம் பெற்றிருக்கிற சிறப்புக்கு காரணம் அது சூரிய வழிபாட்டோடு தொடங்குவதாலும், சூரிய வழிபாடு சிவவழிபாடே என்று கருதப்பட்ட நம்பிக்கையின் தாக்கத்தாலுமாக இருக்கக்கூடும் என்றும் கருதலாம்.

அஜித, மகுட, சிந்திய, ஸ்வயம்புவ, ஆகமங்கள் சூரிய வழிபாட்டை நித்திய சிவ பூசையின் தவிர்க்க முடியாத அங்கமாகவே கருதுகின்றன. சில அதைக் குறிப்பிடுவதில்லை. வேறு சில ஆகமங்கள் வழிபாடு செய்வோரின் விருப்பத்துக்கே அதைவிட்டு விடுகின்றன. ஆனால், பின்னர் வந்த பத்ததிகள், சூரியன் சிவபெருமானின் வெளிப்பாடு , ஆகையால் சூரிய பூசை, சிவபூசைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் நடைபெற வேண்டியதே என்று குறிப்பிடுகின்றன.

இறுதியாக, சைவாகமங்களைப் பற்றிய பொதுவான சிந்தனைகளையும் நாம் காண வேண்டும். ஆகமங்கள் நீண்ட தூரம் பரவி இருந்தன என்பதற்கான கல்வெட்டுச் சான்றுகளைத் திரு. கோண்டா அவர்கள் குறிப்பிடுகின்றார். மேலும். சைவ -வைணவ ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. சைவ ஆகமங்களைப் பற்றிக் கூறும் போது' முத்தி நிச்சயம் என்ற நூல் பின்வருமாறு கூறுகிறது.

***"உள்ள மலநீக்கி ஓங்கு சிவானந்த***
***வெள்ளந் திளைத்து அதுவாய் மேவுதலே- கள்ளவிழ்பூங்***
***கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்திற்***
***சித்தாந்த முத்தியெனச் சொல்"***

இந்த வெண்பா சிவபெருமானே ஆகமங்களின் ஆசிரியன் என்றும், சிவனோடு கலந்து ஆனந்தந்துய்ப்பதைக் கூறுவதே சிவாகம நூல்களின் நோக்கமென்றும் கூறுகிறது.

ஆகமங்கள் கூறுகிற சரியை முதலான நிலைகளை 'விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும் அரும்பு, மலர், காய், கனி போன்றது' என்று வளர்ச்சிப் படிகளாகத் தாயுமானவர் குறிப்பிடுகிறார்.

சிவஞான சித்தியார் சரியை, கிரியை, யோகம், ஞானம் பற்றிக் குறிப்பிடும்போது சரியையைத் தாசமார்க்கம் என்றும் கிரியையை சத்புத்ர மார்க்கம் என்றும் யோகத்தை சகமார்க்கம் என்றும் ஞானத்தைச் சன்மார்க்கம் என்றும் குறிப்பிடுகிறது. சைவ சித்தாந்தம் ஞானத்தால் வருகிற முத்தியே உயர்முக்தி அல்லது பரமுக்தி என்று கூறும்.

***"ஞானத்தால் வீடுஎன்றே நான்மறைகள் புராணம்***
***நல்ல ஆகமம் சொல்ல அல்லவாமென்னும்***
***ஊனத்தார் என்கடவர்.........***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஆகமங்களும், வேதங்களும் ஞானத்தை முக்திச் சாதனமாகச் சிவஞான சித்தியாரும், அதுபோன்றே பிற நூல்களும் குறிப்பிட்டாலும், ஆகமங்கள் நாமறிந்தவரை கிரியை நூல்களே. ஒரு வேளை கிரியைகள், ஞானம் என்னும் உயர்படிக்கு எடுத்துச் செல்வதாகக் கருதப்பட்டதால், ஆகமங்கள் ஞானத்தைக் குறிப்பால் உணர்த்துவனவாகவே நாம் கொள்ளலாம்.

ஆகமங்கள் சைவ, வைணவ, சாக்த ஆகமங்கள் என மூன்று முக்கிய பிரிவுகளில் அடங்கும். ஆகமம் என்ற சொல்லே 'புனிதமான பாரம்பரியம்' அல்லது 'வந்தது' என்று பொருள்படும். வைணவ ஆகமங்கள் பெரும்பாலும் சம்ஹிதைகளென்றும், சாக்த ஆகமங்கள் தந்திரங்கள் என்றும் வழங்கப்படுவதால், ஆகமங்கள் என்று பொதுவான சொல் சைவ ஆகமங்களையே குறிப்பிடும் வழக்கம் காலப்போக்கில் படிந்துவிட்டது. ஆனாலும், ஆகமம், தந்திரம் என்று குறிப்பிடும் சொல், பிரம்ம, சூர்ய, ஸ்கந்த, குமார என அனைத்து ஆகமங்களையும் உள்ளடக்கியதாகும்.

ஆகமங்கள் புராணங்களைப் போன்று கதைகள் சொல்லுவதில் ஆர்வம் காட்டுவன அல்ல. மேலும் எல்லாப் புராணங்களுமே எல்லா ஆகமங்களுக்கும் முற்பட்டவை என்றும் கூற முடியாது. சில புராணங்கள் ஆகமங்களாலும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும்.

பொதுவாக ஆகமங்கள் பரம்பொருள், தனிப்பட்ட ஆத்மாக்கள், கண்ணில் தெரியும் உலகம் என்ற முப்பொருள்களைப் பற்றியும் சிந்திக்கின்றன. எல்லா ஆகமங்களுமே முழுமையாக ஆராய்ச்சிக்குக் கிடைக்காத வரையில், அவை எந்த வகையில் தம்மோடு முரண்பட்டு நின்றன என்னும் முடிவுக்கு வரமுடியாது. எப்படியிருந்தாலும், சைவ, வைணவ, சாக்த ஆகமங்களே முப்பெரும் பிரிவின என்பதிலும், அவை மேற்காணும் முப்பொருள்களைப் பற்றியும் சிந்திக்கின்றன என்பதிலும் கருத்து வேறுபாடில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், ஆகமங்கள் வேத வழிக்கு முரண்பட்டவை என்று சொல்லுகிற போக்குத் தொடர்ந்தே வந்துள்ளது. பலர் ஆகம வழியை ஒத்துக் கொண்டுள்ளனர். சைவ-வைணவ மரபினர் வேதத்தின் ஆதாரத்தை மறுக்காமல் ஒத்துக் கொண்டு, தம்முடைய மரபு வேத வழிக்கு முரண்பட்டதன்று என்றும் நம்புகின்றனர். ஆனால் சிலர், வேதத்துக்கு அப்பாற்பட்ட மரபு தங்கட்கு உண்டென்றும், அது இரகசியமாகக் காப்பாற்றப்பட்டுப் பின்னர் ஆகமங்களைத் தொகுத்தவர்கட்கு வெளியிடப்பட்டது என்றும் கூறுகின்றனர். பொதுவாக, வைணவர்கள் தங்கள் வைதிகத் தொடர்ச்சியை வலியுறுத்தித் தங்கள் சமயம் வேதப் பிராம்மணீயப் பாரம்பரியத்தைத் தொடர்வதாகக் கூறுவார்கள். தென்னாட்டுச் சைவர்களில், சிலர், தமிழ் மொழியில் எழுதப்பட்ட ஆகமங்களே வடமொழிக்கு மாற்றப்பட்டன என்று சாதிக்கின்றனர். ஆனால் இந்தக் கருத்து ஐயத்துக்கு அப்பாற்பட்டதாய் நிறுவப்படவில்லை.

ஆகமங்கள் 'தந்திரங்கள்' என்றும் வேதங்கள் 'நிகமங்கள்' என்றும் சொல்லப்பட்டன. ஆகமங்கள் அடிப்படையில் சாதன சாத்திரங்களே. அவை 'தன்னை அறிய வைக்கும் அறிவியல்' என்று சொல்லப்பட்டன. சாதகர்கள் அல்லது உபாசகர்களுக்கு அவர்கள் நன்மையைக் கருதி குறிப்பிட்ட வாழ்க்கை முறையைப் பரிந்துரைக்கின்றன. அவை நடைமுறைப்படுத்துவதன் மூலம், தாங்கள் எந்த மரபைச் சார்ந்திருக்கின்றனவோ அவற்றின் இலட்சியங்களை அடைய உதவ முற்பட்டன. சைவ ஆகமங்கள் ரிக் வேதத்தையும், சாக்தம் யஜுர் வேதத்தையும், வைணவம் சாம வேதத்தையும், தழுவின என்று சொல்வோரும் உளர்.

ஆகமங்களின் நோக்கங்கள் உயர்ந்தவையாக இருந்தாலும் அவ்வப்போது தலைதூக்கும் ஏற்றத் தாழ்வு உணர்வுகள்- செய்திகள் ஓரளவு அயர்வைத் தோற்றுவிக்கின்றன.

உயர் தத்துவங்களை உரைப்பனவாக ஆகமங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னாலும், உரிய தத்துவ விசாரணை ஆகமங்களில் இல்லை என்றே தோன்றுகிறது. தத்துவ விசாரணை என்று நாம் சொல்லும்போது மூன்று விஷயங்கள் இருக்க முடியும்.

1. அடிப்படைப் பொருள்களைப் பற்றிய சிந்தனை.

2. அவற்றுக்கு எடுத்துக்காட்டான ஆதாரங்கள், வாதங்கள்

3. மேற்சொன்னவற்றிலிருந்து பெறப்பட்ட முடிவுகள்

ஆகிய இந்த மூன்றும் இணையும்போது தான் தத்துவ விசாரணை முற்றுப்பெறுகிறது. குறைந்த பட்சம் நமக்குக் கிடைத்துள்ள விஷயங்களை வைத்துப் பார்க்கும்போது, ஆகமங்கள் அடிப்படையான பொருள்களைப் பற்றி ஆங்காங்கே உதிரியாகச் சிந்திக்கின்றன. ஆனால், அவை வாத விவாதங்களோடு தொடர்ந்த முடிவுகளை நோக்கி தம்மைக் கொண்டு செல்லுவதில்லை. அதனால் ஆகமங்கள் தத்துவ விசாரணையில் ஈடுபடுவதில்லை என்று நாம் கருதலாம்.

இப்படிச் சுட்டிக் காட்டுவதால் ஆகமங்களின் சிறப்புக்கு எந்தக் குறையும் வந்துவிடப்போவதில்லை. காரணம், அவற்றின் நோக்கம் எந்தக் தத்துவ அமைப்பையும் உருவாக்குவது இல்லை. அந்த நோக்கம் இல்லாத போது ஆகமங்கள் தத்துவ விசாரணையில் இறங்கவில்லை என்று கூறுவது நாம் சொல்லுகிற அர்த்தத்தில் ஆகமங்கள் நாம் காணாத ஒரு விஷயத்தைச் சொல்லுவதாக அமையுமேயல்லாமல் அவற்றில் குறை கண்டுபிடிப்பதாக ஆகாது. ஆகமங்கள் பற்றிய விபரங்கள் மிகுதியாகக் கிடைக்காமற் போனமைக்கு இரகசியம் என்று கருதிப் பலவற்றை மறைத்தமையும், மறைத்தவற்றைப் பாதுகாவாமையும், பாதுகாத்தவற்றிற்கும் பொருள் புலப்படாமையுமே காரணங்கள் ஆகும். ஆனால் சைவ வைணவ ஆகமங்கள் தாம் மேற்கொண்ட பணிகளைக் குறைவறவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துள்ளன என்பதே உண்மை.

## துணை நூல்கள்


1.காமிகாகமம், கிரியாபாதம் பூர்வபாகம், தமிழ் சந்திரிகையுடன் (முதற் பகுதி) தென்னிந்திய அர்ச்சகர் சங்கம் - சென்னை, 1977

2. Janaki, S.S.(ED) Siva Temple and Temple Rituals, Kupuswami Sastri Research Institute, Madras, 1988

3.Narayana Iyer, C.V. Origin and Early History of Saivism in South India, University of Madras, Madras, 1936

4 Parvati, S.D., Virasaivism of the Saivagamas, Hubli, 1927

5.Shivapadasundaram,S., The Saiva School of Hinduism, London, 1934





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகமங்கள்

நந்தினி சண்முகலிங்கம்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டமைந்தது சைவசமயம். இச்சமயத்தின் அடிப்படைப் பிரமாண நூல்களாக விளங்குபவை சிவாகமங்கள். ஆ-பாசம், க-பசு, ம-பதி எனும் மூன்றினைப் பற்றியும் விளக்கிக் கூறுவதால் "ஆகமம்" எனப்படுகிறது. 'ஆ' என்பது ஞானத்தையும் 'க' என்பது மோட்சத்தையும் 'ம' என்பது ஆணவமலத்தின் அழிவினையும் குறிப்பதால் ஞானத்தால் மலத்தை நீக்கி வீடுபேறு அளிக்கும் நூலாகவும் 'ஆகமம்' கொள்ளப்படுகின்றது. மேலும் ஆகமம் என்பது வந்து நின்று இறைவன் செய்து காட்டிய செயல்கள் என்ற வகையிலும் கொள்ளப்படுகின்றது. இதனால், ஆகமங்களை 'அபௌர்ஷேயம்" (புருஷனால் செய்யப்படாதது) என்பர். ஆயினும் ஆகமங்களும் வேதத்தைப் போலவே இறைவனாற் செய்யப்பட்டவை என்ற கருத்து சித்தாந்திகளுக்கும் இராமானுஜருக்கும் உண்டு. இதனை மேல்வரும் பாடல் மூலம் அறியலாம்.

***"வேதமொ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்***
***ஓதும் பொதுவும் சிறப்புமென் றுள்ளன***
***நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்***
***பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே"***

- திருமந்திரம் 2397

வேதத்தையும் ஆகமத்தையும் இறைவன் அருளிய மெய்நூல்கள் என ஏற்றுக்கொண்டு வேதத்தைப் பொது நூலெனவும் ஆகமத்தைச் சிறப்பு (உண்மை) நூலெனவும் கொண்டு இவை இரண்டும் ஒரே கருத்துக்களை மட்டுமே கூறுகின்றன என்கிறது சைவசித்தாந்தம்.

இறைவனால் இயற்றப்பட்ட நூலாகிய ஆகமமானது தந்திரம், மந்திரம், வழிபாடு, உபதேசம் ஆகியவற்றைப் பற்றிக் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானமுனிவரும் ஆகமத்தைப் பொதுவியல்புடையன, சிறப்பியல்புடையன என இரண்டாக அமைத்துக்கூறுகின்றார். பொதுவியல்பு என்பது அளவை முகத்தானும், இலக்கண முகத்தானும் கூறப்பட்டுக் கேட்டல், சிந்தித்தல் ஆகிய இரண்டாலும் உணரப்படுவது. சிறப்பியல்பு என்பது கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் ஆகியவைகளால் உணரப்படுவது ஆகும்.

சிவாகமங்கள் இருபத்தெட்டு மூல ஆகமங்களையும் இருநூற்று ஏழு உபாகமங்களையும் கொண்டமைந்தவை. (பின் இணைப்பு) அவற்றில் மூல ஆகமங்கள் இருபத்தெட்டும் சிவனின் ஐந்து முகங்களான சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்பவற்றிலிருந்தே தோன்றின என சிவஞானமுனிவர் கூறுகிறார். அவை முறையே சத்தியோஜாதத்திலிருந்து காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம் என்பனவும்; வாமதேவத்திலிருந்து தீப்தம், சூக்குமம் ஸஹஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம் என்பனவும்; அகோரத்திலிருந்து விஜயம், நிசுவாசம், சுவாம்புவம், அனலம், வீரம் என்பனவும்; தத்புருஷத்திலிருந்து ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், பிம்பம் என்பனவும்; ஈசானத்திலிருந்து புரோத்கீதம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம் என்பனவும் தோன்றின. இவற்றில் காமிகம் தொடங்கி சுப்பிரபேதம் ஈறான முதல் பத்து ஆகமங்களும் சிவபேதம் கொண்டதாகவும், விஜயம் தொடங்கி வாதுளம் ஈறான இறுதி பதினெட்டு ஆகமங்களும் உருத்திரபேதம் கொண்டவையாகவும் அமைந்துள்ளன. இவ் ஆகமங்களை ஸ்ரீகண்டருத்திரர் நந்திதேவருக்கும் நந்திதேவர் தேவர்கள், முனிவர்கள் மற்றும் கணங்களுக்கும் உபதேசித்தார் என்பர்.

சிவாகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பாதங்களாக அமைந்து பதி, பசு, பாசம் எனும் மூன்று பொருள்களை விளக்குகின்றன எனக் சூரியபட்டர் கூறுகிறார்.

## சரியாபாதம்

சரியா பாதத்தில் பிராயச்சித்த விதி, பவித்ர விதி, சிவலிங்க இலக்கணம், உமாமகேஸ்வரர் முதலிய வடிவங்களின் இலக்கணம், நந்தி முதலிய கணநாதர் இலக்கணம், யோகபட்டம், தண்டம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமண்டலம் ஆகியவற்றின் இலக்கணமும் அந்தியேஷ்டி விதியும் சிரார்த்த விதியும் கூறப்படுகிறது.

சரியை முதலான நான்கு பாதங்களிலும் தனித்தனியே முப்பொருளைப் பற்றிப் பேசப்படுகின்றது. சரியாபாதம் என்பது முக்கியமாக ஆலய வழிபாட்டைக் கூறுவது. வழிபாடு செய்யப்படுபவராய் இருத்தல் பற்றிப் பதியும், வழிபாடு செய்வது பற்றிப் பசுவும், வழிபடுவதற்குச் சாதனங்களாகவும் இறைவனிடம் அர்ப்பணிக்கத் தகுந்தவையாக விளங்குதல் பற்றிய பாசமும் சரியாபாதத்தில் ஆராயப் பெறுகின்றன.

## கிரியாபாதம்

மந்திரங்களின் உத்தாரணம், சந்தியாவந்தனம், பூஜை, ஜெபம், ஹோமம், சமய, விசேஷ, நிர்வாண, ஆச்சார்ய அபிஷேகங்களும், உபாய தீட்சை முதலியனவும் கூறப்படுகின்றன.

கிரியாபாதத்தில் முக்கியமாகக் கூறப்பெறுவது தீட்சையாகும். இதில் அனுக்கிரகம் புரியும் கருத்தாவாக விளங்குதல் பற்றிப் பதியும், திருவருளைப் பெறுவதற்குத் தகுதியுடையதாக விளங்குதல் பற்றிப் பசுவும், ஆன்மாவினால் நீக்கத்தக்கவை என்பது பற்றிப் பாசமும் ஆராயப்பெறுகின்றன.

## யோகபாதம்

முப்பத்தாறு தத்துவங்கள் தத்துவ ஈசுவரன், ஆன்மா, பரமசிவன், சக்தி, மாயை, மகாமாயை, இயமம், நியமம், ஆசமனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தியானம், தானம், சமாதி, மூலாதாரம் முதலிய ஆறாதாரம் ஆகியவைகளின் முறைமைகள் கூறப்பெறுகின்றன. எட்டு, ஆறு அங்கங்கள் கொண்ட இருவகையான யோகநெறிகள் பற்றி ஆகமங்கள் கூறுகின்றன. மூல ஆகமங்களான சுப்பிரபேதம், கிரணம், மகுடம் என்பவை யோகபாதம் பற்றிச் சிறப்பாகக் கூறுகின்றன. அவற்றுள் கிரண ஆகமம் ஷடங்க(6) யோகமுறையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறது. உபாகமமாகிய மிருகேந்திரமும் யோகபாதம் பற்றிக் கூறுகின்றது. பதஞ்சலி முனிவர் தமது நூலில் அஷ்டாங்க யோகமுறை பற்றியே கூறுகிறார்.

யோகபாதத்தில் சிறப்புப் பெறுவது தியானம் ஆகும். தியானிக்கப்படும் பொருளாக இருத்தல் பற்றிப் பதியும், தியானிக்கும் கர்த்தாவாக இருத்தல் பற்றிப் பசுவும், தியானத்தால் மறக்கத் தகுந்தவையாக விளங்குதல் பற்றிப் பாசமும் யோகபாதத்தில் ஆராயப்பெறுகின்றன.

## ஞானபாதம்

சிவபெருமானுடைய சொரூபம், சகலர், விஞ்ஞானகலர், பிரளயாகலர் ஆகியோரின் சொரூபம், ஆணவம், மாயை முதலானவற்றின் சொரூபம், சக்தி சொரூபம், முப்பத்தாறு தத்துவ உற்பத்தி, புவன சொரூபம், பிரளயம் ஆகியன பற்றிக் கூறப்படுகின்றன. மேலும் பாசுபதம், மாவிரதம், காபாலம் ஆகிய சமயங்களின் இயல்புகளும் கூறப்படுகின்றன.

மூலாகமங்களான காமிகம், காரணம், அஜிதம், சுப்பிரபேதம், சுவாயம்புவம், ரௌரவம், மகுடம், கிரணம் என்பவை ஞானபாதம் பற்றிக் கூறுகின்றன. அவற்றில் கிரணாகமம் பசு இலக்கணம், ஆணவமல மாயாமல வேறுபாடு, சத்திநிபாத விளக்கம், இறைவன் திருமேனி கொள்வதன் நோக்கம் போன்றவற்றைக் கூறுகின்றது.

மேலும் பௌஷ்கராகமம், மிருகேந்திர ஆகமம், மதங்கபாரமேசுவர ஆகமம், தேவிகாலோத்தரம் ஆகிய உபாகமங்களும் ஞானபாதம் பற்றிக் கூறுகின்றன. பௌஷ்கர ஆகமம் மூவகை உயிர்வர்க்கங்களின் இயல்புகள், பிந்து தத்துவ மகிமை, மாயையின் இயல்புகள், கன்மம் செயற்படும் முறை, இருவினையொப்பு, சித்தாந்த அளவையியல், வாக்குகளின் இயல்பு என்பனவற்றைச் சிறப்பாக விளக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகேந்திர ஆகமம் இறைவனின் திருமேனி, ஐந்தொழில்கள், சத்திநிபாத வகைகள் என்பனவற்றை நுட்பமாகக் கூறுகின்றது. மதங்கபாரமேசுர ஆகமம் தத்துவங்கள் தோன்றும் முறை, அவற்றின் இயல்பு, அவற்றால் உயிர்கள் பெறும் பயன்கள், அவற்றில் காணப்படும் புவனங்கள், அப்புவனங்களின் அதிபதிகள் என்பனவற்றை முறையாகவும் விரிவாகவும் கூறுகின்றது.

நான்கு பாதங்களுள் முதன்மையானது ஞானபாதமே. ஞானபாதத்தில் பதி, பசு, பாசங்கள் நிரூபணம் செய்யப்படுகின்றன. சிவாகமங்களில் சரியை, கிரியை, யோகம் எனப்படும் பகுதிகள் தம்முள் வேறுபாடு கொண்டவையாக இருப்பினும் ஞானப்பாதப் பகுதி வேறுபாடு கொண்டிருக்காது. அதுவே அடிப்படையானதும் முதன்மையானதுமாகும். இதன் காரணமாகவே சிவாகமங்களை 'சிவஞானம்' என்னும் சிறப்புச் சொல்லாற் கூறுகின்றன. இதனை "........பரஞானம் அபரஞானம் இரண்டும் சிவஞானம் எனப்படும் அவற்றுள் பரஞானத்தைப் போதிப்பது எல்லா அபரஞானங்கட்கும் பொதுவாதலின் ஈண்டுச் சிவஞானம் என்றது அவ்வபரஞானமாகிய சிவாகமமேயாம்" என்ற மாதவச் சிவஞானமுனிவரின் கூற்றின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

## ஆகமங்கள் கூறும் செய்திகள்

ஒரு நிலத்திற் காணப்படும் பொருள்கள், உயிரினங்கள் என்பனவற்றிற்கு ஏற்ப சிவாகமங்கள் பன்னிரண்டு விதமான நிலங்களைக் கூறுகின்றன. அவை சைவபூமி, பிரம்மபூமி, விஷ்ணுபூமி, இந்திரபூமி, பசுபூமி, பூதபூமி, அசுரபூமி, பைசாசபூமி, இராட்சதபூமி, வாயுபூமி, வருணபூமி, ஆக்னேயபூமி என்பனவாம். தவிர சாத்வீகம், ராஜஸம், தாமஸம் ஆகிய முக்குணங்களின் அடிப்படையிலும் நிலங்கள், நாகரம், வேஸரம், திராவிடம், காலிங்கம், வராடம், சார்வதேசிகம் என ஆறு வகையாகப் பிரிக்கப்படுகின்றன.

இதே போன்று பன்னிரு விதமான கிராமங்கள் பற்றியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமிகாகமம் கூறுகின்றது. அவை அக்கிரகாரம், சிராமம், குடிகம், நகரம், கர்வடம், பட்டினம், கேடகம், கண்டகை, சிபிரம், ஸேனாமுகம், ஸேனாஸ்தானம், மடம் என்பனவாம். ஓவ்வொரு கிராமமும் அதன் நிலப்பரப்பிற்குத் தகுந்தாற் போல் ஓவ்வொரு வடிவத்தில் அமைக்கப்பெறும். "வில்" போன்ற அமைப்புடைய கிராமம் "கார்முகம்" என்றும், "தாமரை" போன்ற அமைப்புடைய கிராமம் "பத்மகம்" என்றும் அழைக்கப்படும். மேலும் தாண்டகம், சர்வதோபத்திரம், நந்தியாவர்த்தம், ஸ்வஸ்திகம், பிரஸ்தரம், சதுர்முகம், பிரகீர்ணம், ஸம்பத்கரம், பராகம், ஸ்ரீப்ரதிஷ்டிதம், ஸ்ரீவத்ஸவம், எனப்பலவகை வடிவங்களில் கிராமங்கள் நிர்மாணிக்கப்படும் என்பதை ஆகமங்கள் எடுத்துரைக்கின்றன.

கிராம அல்லது நகர நிர்மாணத்தில் முக்கியத்துவம் பெறுவது ஆலயங்களாகும். அவ் ஆலயங்கள் ஒரு கிராமத்தில் அல்லது நகரத்தில் எத்திசையில் அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் ஆகமங்கள் கூறுகின்றன. முதலில் ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தைத் தேர்ந்தெடுத்து அதற்கு பிரவேசபலி, சங்குத்தானம் பதவின்யாசம், வாஸ்து சாந்தி என்பனவற்றைச் செய்து பின்னர் கருப்பநியாசத்தைச் செய்ய வேண்டும். தொடர்ந்து வடகிழக்கு, வடக்கு, கிழக்கு, தென்கிழக்கு எனும் திசைகளில் ஒன்றில் பாலாலயம் அமைத்து வழிபட்டு, மூலாலயத்திற்கான கட்டட வேலைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதன் பின் உபபீடம், அதிட்டானம், பாதம், பிரஸ்தரம், கோஷ்டம், பஞ்ஜரம், கர்ணகூடம், வேதிகை, களம், சிகரம், தூபி எனப்படும் அங்கங்களை உடையதாகவும், பிரகாரங்களை உடையதாகவும் ஆலயத்தை அமைக்க வேண்டும். மேரு, ரம்மியம், மந்திரம், ருக்ஷமாலி, தியுமணி, சந்திரசேகரம், மாலியவான், பாரியாத்திரை, ரத்னசீர்ஷம், தாதுமான், பஞ்சகோசம், புஷ்பஹாஸம், ஸ்ரீகரம், ஸ்வஸ்திகம், மஹாபத்மம், பத்மகூடம் எனும் பதினாறு வகையான ஆலயங்களின் அமைப்பைக் காமிகாகமம் கூறுகின்றது. மேலும் நாகரம், வேஸரம், திராவிடம் எனப்படும் விமான வகைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியும் ஸாலாகாரசிரோகோபுரம், மண்டபாசிரோகோபுரம், லூபாகாரசிரோ கோபுரம், சத்திராகாரசிரோ கோபுரம் எனும் கோபுர வகைகளைப் பற்றியும் ஆகமங்கள் கூறுகின்றன.

சிவாகமங்கள் ஆலயங்களின் அமைப்பைப் பற்றிக் கூறுவதோடு அவற்றில் விளங்கும் தெய்வப்படிமங்களை அமைக்கும் முறை, அவற்றைப் பிரதிஷ்டை செய்யும் முறை என்பன பற்றியும் கூறுகின்றன. ஓர் ஆலயத்தில் ஐந்து வகையான இலிங்கங்கள் உண்டு என பாரமேசுவர ஆகமம் கூறுகின்றது. இலிங்கம் என்பதற்குரிய பொருள் பற்றிக் காரணம், கிரணம், சுப்ரபேதம், வாதுளம் ஆகிய ஆகமங்கள் சிறப்பாகக் கூறுகின்றன. மேலும், நாத, விந்து தத்துவமாக இருக்கும் சிவலிங்கம் பற்றியும் இவை இரண்டும் சேர்தல் பிரதிஷ்டை என்றும் யோகஜம் எனும் ஆகமம் கூறுகிறது. இறைவனின் (சிவன்) மகேசுர மூர்த்தங்கள் பற்றி வாதுளாகமம் கூறுகின்றது.

வழிபாட்டின் மூலம் கிடைக்கும் பேறுகளின் காரணமாக சிவலிங்கம் பலவகைப்படுகிறது. குறிப்பிட்ட இலிங்கத்தை வழிபடுவதனால் கிடைக்கும் பலன்கள் போன்ற விடயங்களை ஆகமங்கள் விரிவாகக் கூறுகின்றன. சிவலிங்கம் சுயம்பு, தைவிகம், திவ்வியம், ஆருடம், மானுடம், இராட்க்ஷசம், பாணம் என ஏழு வகைப்படும். அவற்றில் சுயம்பு இலிங்கம் பற்றி பாரமேசுவரம், காரணம், வாதுளம், சூக்குமம், சுப்பிரபேதம் எனும் நான்கு ஆகமங்களும் கூறுகின்றன. இறைவன் திருக்கூத்து செய்த போது ஜடையில் இருந்த கங்கை நீர்த்துளிகள் உலகில் சிதறின. அவ்வாறு சிதறிய நீர்த்துளிகள் இறுதி இலிங்க வடிவம் பெற்றன. அவையே சுயம்பு இலிங்கங்கள் எனப்பட்டன.

தேவர்களாற் பிரதிஷ்டை செய்யப்பட்ட இலிங்கம் தைவிக இலிங்கமாகும். இதனைப் பற்றிக் காமிகம், விஜயம், சுவாயம்புவம், அனலம் எனும் நான்கு ஆகமங்களும் கூறுகின்றன.

திவ்வியலிங்கம் தேவ இருடிகளால் தாபிக்கப்பட்டதாகும். சிந்தியம், ஸஹஸ்ரம், தீப்தம், அஜிதம் எனும் நான்கு ஆகமங்களும் இதற்குரியனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுட இருடிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்டது ஆர்ஷ இலிங்கமாகும். இதனைப் பற்றி யோகஜம், மகுடம், நிசுவாசம், ரெளரவம் என்பன கூறுகின்றன.

அரசரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது மானுஷ இலிங்கமாகும். வீரம், விமலம், சந்திரஞானம், பிம்பம் என்பன இதற்குரியனவாகும்.

இராட்சதர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது இராட்சத இலிங்கமாகும். இதனைப் பற்றி புரோத்கீதம், லலிதம், சித்தம், சந்தானம் எனும் நான்கும் கூறுகின்றன.

பாணாசுரனால் பூசை செய்யப்பெற்று ஸ்ரீசைலம், நீலகண்டம், நேபாளம் முதலிய பல இடங்களில் காணப்படுவது பாணலிங்கம். இதனைப் பற்றிப் பாரமேசுவரம், சர்வோக்தம், அம்சுமான், கிரணம் என்னும் நான்கு ஆகமங்களும் கூறுகின்றன.

சிவலிங்கம் மட்டுமல்லாது ஆலயத்தில் அமைக்கப்படும் ஏனைய தெய்வப்படிமங்கள் பற்றியும் அவற்றை அமைப்பதற்கு வேண்டிய வழிமுறைகள், ஆலயத்தில் அவை பிரதிஷ்டை செய்வதற்குரிய இடங்கள், அவற்றை பிரதிஷ்டை செய்யும் போது செய்ய வேண்டிய கிரியைகள் என்பனவற்றையும் ஆகமங்கள் விளக்கமாகக் கூறுகின்றன.

மேலும் முறைப்படி உருவாக்கப்பட்ட ஆலயத்திற்குச் செய்யப்படும் கும்பாபிஷேகம் பற்றியும், அதன் பயன் பற்றியும், தினமும் ஆலயத்தில் நடாத்தப்பெறும் ஆறுகால பூசைகள், அப்பூசைகளை செய்வதற்குத் தகுதியுடையோர், இருபத்தைந்து அபிஷேகத் திரவியங்கள் பற்றியும், அவற்றினைச் செய்வதற்குரிய வரிசை முறையையும், ஒவ்வொரு அபிடேகத்திரவியத்தால் கிடைக்கும் பயன்பற்றியும் ஆகமங்கள் விளக்கிக் கூறுகின்றன.

கடவுள் வழிபாட்டிற்கு உகந்த மலர்களைச் சாத்துவிகம், இராசதம், இராசத சாத்துவிகம் என மூன்று வகையுள் வகுத்து அவற்றாற் பெறப்படும் பயன்கள் பற்றிக் கூறுவதோடு, ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவுக்குமான (அதி) தெய்வங்கள் பற்றியும் ஆகமங்கள் விளக்குகின்றன.

காரணாகமம் ஆலயத்திற்கும் இறைவனுக்கும் தூபமிடுதல் சிவபுண்ணியம் எனக் கூறுகிறது. தூ-தோஷ நீக்கம், ப-மகிழ்ச்சிப்பேறு. அதாவது எல்லாவித தோஷங்களையும் நீக்கிப் பேரானந்தத்தைக் கொடுப்பது என்பதாம். இதே போன்று ஆலயத்தில் விளக்கேற்றுவதால் சிறந்த ஞானம் கிடைக்கும் எனவும் ஆகமம் கூறுகிறது. தீ-அறியாமை நீக்கத்தையும், ப-அறிவின் மலர்ச்சியையும் குறிக்கிறது. இறைவனுக்குரிய தீபங்களாக பதினாறு வகையான தீபங்களையும் அவற்றால் ஏற்படும் பயன்கள் பற்றியும் ஆகமங்கள் விளக்குகின்றன.

ஆலயங்களிற் செய்யப்பட வேண்டிய மாதப்பூசைகள், வருடப்பூசைகள் (பிரம்மோற்சவம்) என்பன பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் ஆகமங்கள் விரித்துக் கூறுகின்றன. ஒவ்வொரு மாத பௌர்ணமிக்கும் ஆலயங்களிற் சிறப்புப் பூசைகள் செய்யப்படல் வேண்டும். இறைவனுக்குத் தைமாத பூச நட்சத்திரத்திலே தேனபிஷேகமும், மாசிமாத மக நட்சத்திரத்திற் கம்பள பூசையும், பங்குனிமாத உத்தர நட்சத்திரத்திலே தயிர் அபிஷேகமும், சித்திரைமாதச் சித்திரை நட்சத்திரத்திலே தமனோற்சவமும், வைகாசி விசாகத்திலே கந்த பூசையும், ஆனி மூலத்திலே பழபூசையும், ஆடி உத்தரத்திற் ஷீர பூசையாகிய பாற்பூசையும், ஆடிப்பூரத்தில் இறைவிக்குப் பூரகர்ம உற்சவமும், ஆவணி அவிட்டத்திற் சர்க்கரைப் பூசையும், புரட்டாதி உத்திரட்டாதியில் ஆபூப பூசையும், ஐப்பசி அசுவினியில் அன்னாபிஷேகமும், கார்த்திகை மாதக் கிருத்திகையிலே தீபாவளி (கார்த்திகைத் தீப) பூசையும், மார்கழி முழுவதும் உஷத் காலப் பூசையையும் சிறப்பாகச் செய்யவேண்டும் என்று ஆகமங்கள் வலியுறுத்திக் கூறுகின்றன.

சித்திரை மாதத்தில் செய்யப்படும் தமனோற்சவத்தின் மூலம் நாட்டில் எல்லாவகைச் செல்வங்களும் கொழிக்கும் என ஆகமங்கள் கூறுகின்றன. மார்கழி மாத உஷத் காலத்தில் ஒரு சந்தியில் செய்யும் பூசை ஆயிரம் நாளிற் செய்த சிவ பூசைக்குச் சமனாகும் என்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமிகாகமம். ஆடி, ஆவணி, புரட்டாதி, ஐப்பசி என்னும் நான்கு மாதங்களுள் ஏதாவது ஒரு மாதத்தில் 'பாவித்திர உற்சவ'த்தைக் கட்டாயமாகச் செய்தல் வேண்டும். ஒரு வருடத்தில் நாள்தோறும் செய்யும் பூசையில் மந்திரக் குறைவு, திரவியக்குறைவு கிரியைகளில் குறைவு என்பவற்றாலும் கள்ளர் பயம் முதலியவற்றால் நேர்ந்த குறைபாடுகளை நிறைவு செய்யும் பொருட்டும் செய்யப்படுவது பவித்திர உற்சவம். அதாவது பூசையில் நேர்ந்த குறையை நீக்கிப் பரிசுத்தம் செய்வதாற் "பவித்திரம்" எனப்படும் என்கிறது காமிகாகமம்.

மிருகேந்திர ஆகமம் இறைவனின் ஐந்தொழில்கள் பற்றியும் சத்திநிபாத வகைகளைப் பற்றியும் விளக்குகின்றது. ஆலயங்களில் நடைபெறும் பெருவிழாக்கள் பிரம்மோற்சவம் (உற்சவம்) எனப்படும். இது இறைவனின் ஐந்தொழில்களையே குறிக்கிறது. உ-த்-படைத்தல், ஸ-காத்தல், வ-அழித்தல் என்பனவாகும். இம்மூன்று தொழில்களுள் மறைத்தல், அருளல் என்பன உள்ளடங்குகின்றன. இவ் உற்சவம் சாகல்யம், பாவனம், சாந்து, மாங்கல்யம் என நான்கு வகைப்படும். இதில் சாகல்யம் என்பது துவஜாரோகணம் தொடங்கி தீர்த்தவாரி வரையானது. துவஜாரோகணம் தவிர்ந்த சாகல்யத்திற்குரியது போன்ற ஏனைய அனைத்தையும் கொண்டது பாவனம் ஆகும். காலையில் ஹோமம், பலி என்பனவற்றைச் செய்து பின் மாலையில் உற்சவம் செய்வது சாந்தி எனப்படும். தன் நன்மைக்காக ஒரு குறிப்பிட்ட நாளில் விழாச் செய்வது மாங்கல்யம் ஆகும்.

பெரும்பாலும் ஆலயங்களில் சாகல்ய உற்சவமே நடைபெறும். இது ஒன்பது வகைப்படும் என்கிறது காரணாகமம். அவையாவன சௌரம்-27 நாள்கள், சாந்திரம்-17 நாள்கள், சாவித்திரம்-15நாள்கள், சௌமாரம்-13நாள்கள், தைவிகம்-9நாள்கள், பௌவனம்-7நாள்கள், பௌதிகம்-5நாள்கள், கௌணம்-3நாள்கள், சைவம்-1நாள் என்பனவாம். இவை ஒவ்வொன்றினாலும் கிடைக்கும் பயன்பற்றிச் சிறப்புறக் காமிகாகமம் கூறுகிறது. சௌரத்தை நீக்கிப் பைத்ருகத்தைச் (11) நாள்கள்) சேர்த்து ஒன்பது வகை உற்சவங்கள் பற்றி சூட்சுமாகமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறது. இவ்வாறு செய்யப்படும் உற்சவங்கள் அனைத்தும் உலக ஜீவராசிகளுக்கு நன்மை ஏற்படுத்தவே செய்யப்பெறுகின்றன.

பிரம்மோற்சவம் ஒன்றில் ரிஷப யாகம் துவஜாரோகணம், பிருகத்தாளம் (பேரீதாடனம்) அங்குரார்ப்பணம், யாகசாலை, அஸ்த்ரயாகம், பலிதானம், யானக்கிரமம் (வாகன உற்சவம்), பரிவேடம், நீராஜனம், கௌதுகம், தீர்த்த ஸங்கிரகணம், சூர்ணோற்சவம், தீர்த்தவாரி, துவஜ அவரோகணம், ஸபனம், திருக்கல்யாணம் , பக்த உற்சவம் எனப் பதினெட்டு வகைப் கிரியைகள் இடம்பெறும். அவற்றில் ரிஷபயாகம், துவஜாரோகணம், பேரீதாடனம், அங்குரார்ப்பணம், திருக்கல்யாணம் என்பவை படைத்தல் தொழிலைக் குறிக்கும். யானக்கிராமம், ஹோமம், பலி என்பவை காத்தல் தொழிலைக் குறிக்கும். மிருக யாத்திரை (வேட்டைத்திருவிழா), இரதாரோகணம் (தேர்த்திருவிழா), என்பவை அழித்தல் தொழிலைக் குறிக்கும். தீர்த்தவாரி, கும்பாபிஷேகம், துவஜ அவரோகணம் என்பவை மறைத்தல் தொழிலைக் குறிக்கும். சண்டேசுவர உற்சவம் ஆசாரிய உற்சவம் என்பவை அருளல் தொழிலைக் குறிக்கும். உற்சவத்தில் முக்கியமானதாக விளங்குவது தேர்த்திருவிழாவாகும். ஆகமங்கள் விஜயரதம், காந்தரதம் , ஸ்ரீகேசரரதம், விசாலரதம், நிபத்திரரதம், ஸ்ரீவிசாலரதம், பத்திரரதம் பத்திரவிசாலரதம் என எட்டுவகைத் தேர்களின் அமைப்பைப் பற்றிக் கூறுகின்றன. இவை இரண்டு முதல் பன்னிரு சக்கரங்களைக் கொண்ட பலவகைப்பட்ட தேர்களாகும்.

ஆகமங்கள் ஆலய அமைப்பு, உற்சவங்கள் என்பன பற்றிக் கூறியதுடன் நின்றுவிடாமல் ஒரு மனிதன் வாழ வேண்டிய விதி முறைகள் பற்றியும் கூறுகின்றன. ஒரு மனிதன் ஒழுக்கமாக வாழ்வதற்குச் செய்ய வேண்டிய செயல்கள், அவற்றைச் செய்யும் முறை, அனுட்டானம் செய்யும் முறை, ஆலய வழிபாடு செய்யும் முறை ஆகியவற்றைக் கூறியதோடு அவற்றின் பயன்பற்றியும் எடுத்துரைக்கின்றன. மனிதர்கள் செய்ய வேண்டிய ஸ்தான வகைகளை வாருணம், ஆக்னேயம், மானதம், மாகேந்திரம், வாயு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்திவம், கௌரவம், சிவநிர்மால்யம், கபிலம் எனப்பலவகையாகக் கூறுகின்றன. தீட்சை பெற்ற ஒவ்வொருவரும் தினமும் ஸ்னானம் செய்த பின் சந்தியாவந்தனம் செய்தல் வேண்டும் என ஆகமங்கள் வலியுறுத்துகின்றன.

தவிர, சிவசின்னங்களான விபூதி, உருத்திராக்கம் பற்றியும் அவற்றின் பயன்கள் பற்றியும் ஆகமங்கள் விரிவாகக் கூறுகின்றன. உருத்திராக்கம் ஒன்று முதல் பதினான்கு முகங்கள் கொண்டமைந்தவை. அவை ஒவ்வொன்றினாலும் கிடைக்கும் பயன்பற்றியும் விரிவாக ஆகமங்கள் கூறியுள்ளன.

மேலும் ஆகமங்கள் பசுவின் பெருமையைப் பற்றியும் கூறுகின்றன. நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என ஐவகைப் பசுக்கள் பற்றி ஆகமங்கள் கூறியதோடு, அவற்றின் ஒவ்வொரு பாகங்களிலும் காணப்படும் கடவுளர்களைப் பற்றியும் விரிவாக எடுத்தியம்புகின்றன. கொம்புகளின் அடியில் பிரம்மா விஷ்ணுவும், கொம்புகளின் நுனியில் புண்ணிய நதிகளும் சராசரி ஆன்மாக்களும், தலையில் சிவனும், நெற்றியில் சிவசக்தியும், மூக்கில் முருகனும், கண்களில் சூரிய சந்திரரும், பற்களில் வாயு பகவானும், நாவில் வருண பகவானும், நெஞ்சில் கலைமகளும், கழுத்தில் இந்திரனும், முதுகில் உருத்திரர்களும், யோனியில் சப்தமாதர்களும், குதத்தில இலக்குமியும், உரோமங்களில் மகாமுனிவர்களும் விளங்குகின்றனர். இதனாற் பசுக்களைத் தினமும் நாம் போற்றி வழிபடுதல் சிறப்புடையது என்கின்றன ஆகமங்கள்

இவ்வாறாக எல்லாவித விடயங்கள் பற்றியும் அவற்றின் விளக்கங்களையும் மூலாகமங்கள், உபாகமங்களில் விரிவாக அறியக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகமங்களைப் பற்றித் தோத்திர சாத்திரங்களிற் காணப்படும் கருத்துக்கள்

பேராசிரியர் வி.சிவசாமி

சைவசமயத்திலே வேதங்களும் ஆகமங்களும் முதநூல்களாகக் கொள்ளப்படுகின்றன. வேதங்கள் இறைவனால் அருளப்பட்டவை. இறைவன் திருவருளால் ஞானிகளால் கேட்கப்பட்டவை, வழிவழியாக செவிமரபில் பேணப்பட்டு வந்தவை. இவ்வாறான காரணங்களால் அவை "சுருதி" எனப்படும். வேதங்கள் போலவே ஆகமங்களும் இறைவனால் அருளப்பட்டவை என்ற கருத்து தேவாரம், திருவாசகம் போன்ற திருமுறைகளிலும் சித்தாந்த நூல்களிலும் கூறப்பட்டுள்ளது.

இங்கு தோத்திரங்கள் திருமுறைகளையும், சாத்திரங்கள் சைவசித்தாந்த நூல்களையும் குறிக்கும். ஆகமங்களைப்பற்றிச் சில குறிப்புகள் தேவாரங்களிலும் சிறப்பாக திருமந்திரம், திருவாசகம் ஆகியனவற்றில் குறிப்பாக காணப்படுகின்றன.

திருமூலரின் திருமந்திரம் ஆகமங்களின் சாரம் போலவும் காணப்படுகின்றன. திருமூலர் 28 சிவாகமங்களிலே காரணம், காமிகம், வீரம், வாதுளம், யாமளம், சிந்தியம், காலோத்தரம், சுப்பிரபேதம், மகுடம் என்னும் ஒன்பது ஆகமங்களின் சாரமாகவே உள்ளதெனக் குறிப்பிடுகிறார். இவற்றுள் யாமளம் தந்திரநூல்எனக் கருதப்படுகின்றது. மேலும் சிவபிரானை சிந்தித்து ஆகமமாகிய திருமந்திரத்தைத்தாம் இயற்றியதாகப் பின்வருமாறு கூறுகினறார்.

*"அந்திமதிபுனை அரனடி நாள்தோறும்*
*சிந்தைசெய்தாகமஞ் செப்பலுற்றேனே"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அவர் கூறுவதிலிருந்து திருமந்திரம் ஆகமம் எனவும் கொள்ளப்படுவதை அவதானிக்கலாம். வேதம் "**பொது**", ஆகமம் "**சிறப்பு**" என திருமூலரும் வேறு ஞானிகளும் கூறியுள்ளனர்.

ஆனால் வேதங்களையும் ஆகமங்களையும் ஒப்பிட்டுநோக்கும் போது அவை வெவ்வேறு மரபுகளிலிருந்து தோன்றி காலப்போக்கில் ஒன்றிணைந்து ஒரே மரபாகக் கொள்ளபடுத்தலை அவதானிக்கலாம்.

சைவசமயத்திலுள்ள கோவில் வழிபாடு, பூசைமுறைகள் ஆகமவழியாக வந்தவை. மந்திரங்கள், கிரியைகள் வேதங்கள் வழியாக வந்தவை. வேதங்கள் வடஇந்திய வைதிக மரபைச்சார்ந்தவை. ஆகமங்களா குறிப்பாக தென்னகதிராவிட சமய மரபையொட்டியவை எனவும் அறிஞர்கள் கொள்ளுவர். எவ்வாறாயினும் இவை இரண்டும் ஒரே மரபினவாகவே இன்றும் கொள்ளப்படுகின்றன.

ஆகமம் என்னும் பதம் மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் தான் மிகச் சிறப்பாக வந்துள்ளது. சிவபுராணத்திலே

***"வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே"***

என வேதங்கள் பற்றியும்,

***"ஆகமமாகிநின்று அண்ணிப்பான்தாள் வாழ்க"***

என ஆகமங்கள் பற்றியும் அவர் குறிப்பிட்டிருப்பது கவனித்தற்பாலது.

பின்னையநிலே சிவபிரானே ஆகமமாகி ஆன்மாக்கலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருள் பாலிக்கிறான். என்ற கருத்து வந்துள்ளது. மேலும் பிறிதொரிடத்திலே சிவபிரானே மகேந்திர மலையிலிருந்து ஆகமங்களை வெளிப்படுத்தியுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. எனவே வேதங்கள் போல ஆகமங்களும் இறைவனால் வெளிப்படுத்தப்பட்டவை என்ற கருத்து திருமுறைகளில் காணப்படுகின்றது. ஆகமங்கள் கூறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நாற்பாதங்களிலும் ஞானபாதமே சைவ சித்தாந்தம். எனவே சைவசித்தாந்த நூல்களில் ஆகமங்கள் பற்றிய குறிப்புகள் வருவது இயல்பே.

சைவசித்தாந்த சாத்திர நூல்களிலும் இதே போக்கே காணப்படுகின்றது. வேத, ஆகம, தேவார, திருவாசக சைவசித்தாந்தத் தொடர்புகள் சைவசித்தாந்த முதனூலாகிய சிவஞான போதத்திலும் உள்ளன.

***"வேதம் பசு அதன்பால் மெய்யாகமம் நால்வர் ஓதும்***
***தமிழ் அதனின் உள்ளறுநெய்போதமிகு நெய்யின்***
***உறுசுவையாம்***
***நீள் வெண்ணை மெய்கண்டான் செய்ததமிழ் நூலின்***
***திறம்"***

எனும் செய்யுள்மூலம் தெளிவாகும்.

ஆரம்பகால சைவசித்தாந்த நூல்களிலொன்றான மனவாசகங்கடந்தாரின் உண்மை விளக்கத்தில் சிவபிரான் திருவாய் மலர்ந்தருளிய ஆகமங்களில் உள்ளவாறே தாம் கூறுவதாக்கு குறிப்பிட்டுள்ளார்.

***"உள்ளபடி இத்தை உரைக்கக்கேள் உன்தனக்கு***
***வள்ளல் அருளால் அன்று வாய் மலர்ந்து தெள்ளியசீர்***
***ஆகமங்கள் சொன்ன அடைவிலே ஆனந்த யோகம்***
***நிகழ்புதல்வா உற்று"***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறப்பட்டிருப்பது கவனித்தற்பாலது. மேலும் இந்நூலாசிரியரின் சிறப்புப்பற்றிக் கூறும் ஒருசெய்யுள்

***"..........பன்மறைகள் வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள் வழுவா நுண்மை விளக்கம் செய்தான் உற்று"***

எனக் கூறுவதிலும் வேதங்கள் குறிப்பாக ஆகமங்களையொட்டியே ஆசிரியார் கூறியுள்ளார் என்பது புலனாகும். இவ்வாறு ஆகமங்கள் பற்றி தோத்திரங்களிலும், சாத்திரங்களிலும் கருத்துக்கள் வந்துள்ளன.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைணவ ஆகமங்கள்

பேராசிரியர் வி. சிவசாமி

வைணவத்தில் ஏற்பட்ட முக்கியமான வளர்ச்சியினை இங்கு வைணவ ஆகமங்களிலே காணலாம். இவை குறிப்பாக வழிபாட்டு முறைகளைக்கூறுவன. ஆகமம் எனும் பதம் பொதுவாக புனித நூல்களாக இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட நூல்களைக் குறிக்கும். ஆனால் இங்கு வேதங்களைத் தொடர்ந்து தோன்றிய வழிநூல்களையே சிறப்பாக குறிக்கின்றது. ஆகமம் குறிப்பிட்ட வரையறையிலே தந்திரம் என்று அழைக்கப்படும். இவ்வகையிலே இவை வேதங்களிலே கூறப்பட்டுள்ள கருத்துக்களை விரிவாக விளக்கிக்கூறும் நூல்களாகும். ஆகமங்கள் வைணவம் மட்டுமன்றி சைவம், சாக்தம் ஆகிய இந்து சமயப் பிரிவுகளுக்கும் உள்ளன. ஆகமங்கள் சம்ஹிதா (தொகுப்பு ஆக்கம்) என்றும் அழைக்கப்படும்.

ஆகமங்களின் காலத்தினைத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. இவை வேதகாலத்திற்குப்பிற்பட்ட காலம் தொடக்கம் சுமார் கி.பி. 800 வரையுள்ள காலப்பகுதியிலே தோன்றியிருக்கலாம். ஆகமங்கள் எழுதப்பட்டுள்ள வடமொழி, மொழி ரீதியிலே பிற்பட்டதாயினும் அவை கூறும் பொருள் வேதங்கள் போன்று பழைமையானவை என அறிஞர்களில் ஒரு சாரார் கருதுவர்.

அறிஞர்களின் கருத்துப்படி வைணவ ஆகமங்களின் மூலம் வேதங்களாகும். வைணவசமய பிரிவுகளில் ஒன்றான பஞ்சராத்திரம் பற்றிய ஆகமக் கருத்துக்கள் மகாபாரதத்திலே முதன் முறையாக வருகின்றன. இதிலே நாராயணப்பெருமானே பஞ்ராத்தினை முதன்முதலாக எடுத்துக் கூறியதாகக்கூறப்பட்டுள்ளது. வேதாந்த தந்திரங்களை எழுதிய வியாசரே மகாபாரதத்தையும் எழுதியதாகக்கூறப்படுகின்றது. அவர் பஞ்ராத்திரம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். எனவே வைணவ ஆகமங்கள் வேத காலத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னரும் மகாபாரதத்துக்கு முற்பட்டதுமான காலப்பகுதியில் எழுந்தன என ஒரு சாரார் கருதுவர்.

வைணவ ஆகமங்கள் விஷ்ணு வழிபாடு பற்றி மட்டுமே கூறுவன. திருமாலே முழுமுதற்கடவுளாக விளங்குகின்றார். இருக்கு வேதத்திலே விஷ்ணு பற்றிக்கூறும் பாடல் கவிகருத்துக்களின் அடிப்படையிலே விஷ்ணுவை முழுமுதற் கடவுளாக வழிபடும் வழிபாடு உருவாகி, பின்னர் ஆகமங்களிலே தனிப்பட்ட மேலான இறைவழிபாடாக மலர்ச்சி பெற்றுள்ளது. அவரை மட்டும் வழிபடுவதால், ஆன்மா முத்தியடையும் எனும் கருத்து நிலவிற்று. ஒரு தெய்வத்துக்கே- இங்கு விஷ்ணுவுக்கு வழிபாடு செய்தற்கு அவரின் வடிவம் அவசியமாயிற்று. எனவே அவரே விக்கிரக மூலமாக வழிபடுதற்கு விக்கிரகங்களை உருவாக்குதல், அவற்றை வழிபடுதற்கு, கோயில்கள் அமைத்தல், அக்கோயில்களிலே குறிப்பிட்ட விதிகளின்படி கிரியைகள் செய்தல், திருவிழாக்கள் நடத்துதல் முதலிய இன்னோரன்ன விடயங்கள் ஆகமங்களிலே- இங்கு வைணவ ஆகமங்களிலே எடுத்துக்கூறப்படுகின்றன. வைணவ சமயவளர்ச்சியில் ஆகமங்கள் முக்கியமான இடத்தினை வகிப்பன.

வைணவ ஆகமங்கள் அதன் இருபிரிவுகளான வைகானசம், பஞ்சராத்திரம் என இருவகைப்படும். முன்னைய பிரிவு வைதிக ரிஷியான விகாணஸ் என்பவரால் தொகுக்கப்பட்ட வைகானச கல்பசூத்திரங்களை அடிப்படையாகக் கொண்டது. இது மற்றைய பிரிவிலும் காலத்தால் முற்பட்டது எனவும் வேதங்களிலிருந்து கருத்துக்களை நேரடியாகவே பெற்றுள்ளதெனவும் கருதப்படுகின்றது. விகனஸ் என்பவரின் மாணவர்களான மரீசி, பிருகு, அத்ரி, கஸ்யப ஆகிய நான்கு ரிஷிகளுமே இந்த வைகானஸ முறையை விளக்கிக்கூறியுள்ளனர். விஷ்ணு பற்றிக் கூறும் இருக்கு வேதங்களில் (1.155.1)ல் வரும் குறிப்பினைப் பிரமாணமாகக்கொண்டு விஷ்ணுவுக்கான அன்றாட அர்ச்சனையை அந்தணரே தெரிய வேண்டுமெனக் கூறப்படுகின்றது. தைத்திரீய நாராயண உபநிஷத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமாணப்படி விஷ்ணுவே பரப்பிரம்மமான நாராயணன் எனப் போற்றப்படுகின்றார்.

சுக்லயஜுர்வேதத்தின் சாகைகளில் ஒன்றான ஏகாயன. என்பதன் (இது இன்று கிடைப்பதில்லை) அடிப்படையிலே பஞ்சராத்திரம் ஆகமங்கள் தோன்றின எனக்கூறப்படுகின்றது. பஞ்சராத்திரம் எனும் பதம் பலவாறு விளக்கப்படுகின்றது. வைஷ்ணவர் நாடோறும் பின்பற்றவேண்டிய சுபிகமன, உபாதான, இஜ்யா, ஸ்வாத்ய, யோகம் ஆகிய சமயக்கடமைகளைக் கூறுவதால் இப்பெயர் வந்ததென வேதாந்த தேசிகர் கூறியிருப்பதை ஒரு சாரார் ஏற்றுக்கொள்ளுவர். பரம்பொருளின் ஐந்து வெளிப்பாடுகளான பரி, வியூக, விபவ, அர்ச்சா, அந்தர்யாமி ஆகியவற்றைக் கூறுவதால் இப்பெயர் (பஞ்சராத்திரம்) பெற்றதென அஹிர்புத்ன்யா சம்ஹிதை கூறும். ஆகமங்களிலே விஷ்ணு பகவான் வாசுதேவ எனும் திருப்பெயர்களாலே பெருமளவு அழைக்கப்படுகின்றார். உபநிஷதங்கள் வலியுறுத்தும் பரபிரம்மமே வைணவத்திலே விஷ்ணு என அழைக்கப்படுகின்றார். ஒருசாரார் பஞ்சராத்திரம் வேதங்கள் சார்பற்றதெனக் கருதுவர். ஆனால் யமுனாசாரியார் தமது ஆகமப்ராமாணியத்திலும், ராமாநுஜர் தாம் வேதாந்தத்தத்திரங்களுக்கு எழுதியுள்ள உரையிலும் குறிப்பாக வேதாந்த தேசிகர் தமது பஞ்சராத்திரரிஷிலிலும் பஞ்சராத்திரம் வேதங்களுடன் கொண்டுள்ள தொடர்புகளை வலியுறுத்தியுள்ளனர்.

பஞ்சராத்திரம் சம்ஹிதைகள் அல்லது நூல்கள் பல உள்ளன. இவற்றின் தொகை 108 லிருந்து 154 வரை வேறுபடுகின்றது. இவற்றின் தொகை 210 எனக் தலாநிதி ஒட்டோ ஸ்கிசெடர் குறிப்பிட்டுள்ளார். பண்டிதர் வி. கிருஷ்ணமாச்சாரியார் 225 என எழுதியுள்ளார். இவை பல்வேறு காலப் பகுதிகளில் எழுதப்பட்டவை. ஒரு சில காலத்தால் முற்பட்டவை. இவற்றுள்ளே மிகப்பழைமையும் பிரமாணத்தன்மையும் உடையனவாக சாத்வத, பௌஷ்கர, ஜயாக்ய ஆகியன குறிப்பிடப்பாலன. இவை தெய்வீக ஞானிகளின் போதனைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகக்கொண்டவை. இவற்றினை அடிப்படையாகக் கொண்டு ஈஸ்வர, பரமேஸ்வர, பத்ம கம்ஹிதைகள் எழுந்தனவாகக் கூறப்படுகின்றது. மேலும் அவதாரக்கோட்பாடு, லஷ்மி பிரபத்தி பற்றிக்கூறும் அஹிர்புத்ன்யா சம்ஹிதா, லஷ்மீ தந்திரம் ஆகியனவும் குறிப்பிடப்படுகின்றன. பஞ்சராத்திர நூல்களிலிருந்து இறைவனின் ஆறு குணங்கள் (ஷாட்குணன்) வீடுகளிலும், கோவில்களிலும் வணங்குவதற்கான இறைவனின் திருவடிவங்கள், நாடோம். செய்ய வேண்டிய சமய அனுஷ்டானங்கள் நித்யவிபூதி பரமபதம் (மிகமேலான தெய்வீக உலகம்) பாகவதம் முதலியன பற்றிய கோட்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தத்துவரீதியில் ஆகமங்களில் அதிகம் கூறப்படவில்லை. தத்துவம் உபநிஷதங்களிலிருந்து பெருமளவு நேரடியாகக் கொள்ளப்பட்டுள்ளன.

வேதங்களைப் போன்று ஆகமங்கள் பற்றிய விரிவான ஆய்வுகள் வெளிவந்தன வாகத்தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலாகமங்கள் - 28, உபாகமங்கள் 207 இன் விபரப்பட்டியல்

### சிவபேத ஆகமங்கள் (10)

| | |
|---|---|
| 1) காமிகம் | 01) வக்த்ராரம் |
| | 02) பைரவோத்தரம் |
| | 03) நாரசிம்ஹமம். (மிருகேந்திரம்) |
| 2) யோகஜம் | 04) வீணாசிகோத்தரம் |
| | 05) தாரம் |
| | 06) சந்தம் |
| | 07) சந்ததி |
| | 08) ஆத்மயோகம் |
| 3) சிந்தியம் | 09) சுசிந்தியம் |
| | 10) சுபகம் |
| | 11) வாமம் |
| | 12) பாவநாசம் |
| | 13) பரோத்பவம் |
| | 14) அம்ருதம் |
| 4) காரணம் | 15) காரணம் |
| | 16) பாவநம் |
| | 17) தௌர்க்கம் |
| | 18) மாஹேந்திரம் |
| | 19) பீமம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20) மாரணம்
21) தவேஷ்டம்

5) அஜிதம் 22) பரபூதம்
23) பரோத்பூதம்
24) பார்வதீசம்ஹிதை
25) பதுமசம்ஹிதை

6) தீப்த்தம் 26) அமேயம்
27) சத்தம்
28) ஆச்சாதியம்
29) அசங்கியம்
30) அமிதௌஜஸம்
31) ஆநந்தம்
32) மாதவோத்பூதம்
33) அற்புதம்
34) அக்ஷதம்

7) சூக்ஷ்மம் 35) சூக்ஷ்மம்

8) ஸஹஸ்ரம் 36) அதீதம்
37) மங்களம்
38) சுத்தம்
39) அப்ரமேயம்
40) ஜாதிபாக்
41) ப்ரபுத்தம்
42) விபுதம்
43) ஹஸ்தம்
44) அலங்காரம்
45) சுபோதகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 9) அம்சுமான் | 46) வித்யாபுராணதந்த்ரம் |
| | 47) வாசவம் |
| | 48) நீலலோஹிதம் |
| | 49) ப்ரகாரணம் |
| | 50) பூததந்த்ரம் |
| | 51) ஆத்மாலங்காரம் |
| | 52) காசிபம் |
| | 53) கௌதமம் |
| | 54) ஐந்த்ரம் |
| | 55) ப்ராம்ஹ்யம் |
| | 56) வாசிஷ்டம் |
| | 57) ஈசரநம் |
| 10) சுப்ரபேதம் | 58) சுப்ரபேதம் |

## உருத்திர பேத ஆகமங்கள் (18)

| | |
|---|---|
| 11) விஜயம் | 59) விஜ(ச)யம் |
| | 60) உத்பவம் |
| | 61) சௌம்யம் |
| | 62) அகோரம் |
| | 63) மிருத்யுநாசனம் |
| | 64) குபேரம் |
| | 65) மஹாகோரம் |
| | 66) விமலம் |
| 12) நிச்வாசம் | 67) நிச்வாசம் |
| | 68) உத்தரநிச்வாசம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | 69) நிச்வாசமுகோதயம் |
| | 70) நிச்வாசநயநம் |
| | 71) நிச்வாசகாரிகை |
| | 72) கோரசம்ஞும் |
| | 73) யமாக்கியம் |
| | 74) குஹ்யம் |
| 13) ஸ்வாயம்புவம் | 75) ப்ரஜாபதி |
| | 76) பத்மம் |
| | 77) ஸ்வாயம்புவம் |
| 14) ஆக்நேயம் (அனலம்) | 78) அனலம் |
| 15) வீரம் | 79) ப்ரஸ்தாரம் |
| | 80) புல்லமல்லம் |
| | 81) ப்ரபோதம் |
| | 82) போதம் |
| | 83) போதகம் |
| | 84) அமோஹம் |
| | 85) மோஹசமயம் |
| | 86) ஹாடகம் |
| | 87) சாகடாதிகம் |
| | 88) ஹலம் |
| | 89) விலேகனம் |
| | 90) பத்ரம் |
| | 91) வீரம் |
| 16) ரௌரவம் | 92) காலக்னம் |
| | 93) கலாதீதம் |



11 – CM 014072

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | 94) ரௌரவம் |
| | 95) ரௌரவோத்தரம் |
| | 96) மஹாகாளமதம் |
| | 97) ஐந்திரம் |
| 17) மகுடம் | 98) மகுடம் |
| | 99) மகுடோத்தரம் |
| 18) விமலம் | 100) அநந்தம் |
| | 101) போகம் |
| | 102) ஆக்ராந்தம் |
| | 103) வ்ருஷபிங்கம் |
| | 104) வ்ருஷோதரம் |
| | 105) வருஷாத்புதம் |
| | 106) சுதந்தம் |
| | 107) ரௌத்ரம் |
| | 108) பத்ரவிதம் |
| | 109) அவோதம் |
| | 110) அதிக்ராந்தம் |
| | 111) அட்டஹாசம் |
| | 112) அலங்க்ருதம் |
| | 113) அர்ச்சிதம் |
| | 114) தாரணம் |
| | 115) தந்த்ரம் |
| 19) சந்திரஞானம் | 116) ஸ்திரம் |
| | 117) ஸ்தாணு |
| | 118) மஹாந்தம் |
| | 119) வாருணம் |
| | 120) நந்திகேஸ்வரம் |
| | 121) ஏகபாதபுராணம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

122) சங்கரம்
123) நீலருத்திரகம்
124) சிவபத்ரம்
125) கல்பபேதம்
126) ஸ்ரீமுகம்
127) சிவசாசனம்
128) சிவசேகரம்
129) தேவிமதம்

20) முகபிம்பம் 130) சதுர்முகம்
131) மலயம்
132) அயோகம்
133) ஸமஸ்தோபம்
134) ப்ரதிபிம்பகம்
135) ஆத்மாலங்காரம்
136) வாயவ்யம்
137) தௌடிகம்
138) தூடிநீரகம்
139) கலாத்யயம்
140) துலாயோகம்
141) குட்டிமம்
142) பட்டசேகரம்
143) மஹாவித்தை
144) மஹாசௌரம்

21) ப்ரோத்கீதம் 145) கவசம்
146) வாராகம்
147) பிங்களமதம்
148) பாசபந்தம்
149) தண்டதரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

150) அங்குசம்
151) தநுர்த்தரம்
152) சிவஞானம்
153) விஞ்ஞானம்
154) ஸ்ரீகால ஞானம்
155) ஆயுர்வேதம்
156) தநுர்வேதம்
157) சர்பதம்ஷ்ட்ரீவிபேதனம்
158) கீதம்
159) பரதம்
160) ஆதோத்யம்

22) லளிதம்
161) லளிதம்
162) லளிதோத்தரம்
163) கௌமாரம்

23) சித்தம்
164) சாரோத்தரம்
165) ஔசனோத்தரமும்
166) சாலாபேதம்
167) சசிகண்டம்

24) சந்தானம்
168) இலிங்காத்யக்ஷம்
169) சுராத்யக்ஷம்
170) சங்கரம்
171) அமலேஸ்வரம்
172) அசங்க்யம்
173) அநிலம்
174) த்வந்த்வம்

25) சர்வோத்தரம்
175) சிவதர்மோத்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

176) வாயு ப்ரோக்தம்
177) திவ்ய ப்ரோக்தம்
178) ஈசாநம்
179) சர்வோத்கீதம்

26) பாரமேஸ்வரம்
180) மதங்கம்
181) யிக்ஷிணிபத்மம்
182) பாரமேஸ்வரம்
183) புஷ்கரம்(பௌஷ்கரம்)
184) சுப்ரயோகம்
185) ஹம்சம்
186) ஸாமாந்யம்

27) கிரணம்
187) காருடம்
188) நைருதம்
189) நீலம்
190) ருக்ஷம்
191) பானுகம்
192) தேனுகம்
193) ப்ரபுத்தம்
194) புத்தம்
195) காலம்

28) வாதுளம்
196) வாதுளம்
197) உத்தரவாதுளம்
198) காலக்ஞானம்
199) ப்ரோஹிதம்
200) சர்வம்
201) தர்மோத்மகம்
202) ஸ்ரேஷ்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

203) நித்யம்
204) சுத்தம்
205) மஹாநநம்
206) விஸ்வம்
207) விஸ்வாத்மகம்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்களின் பட்டியல்

முதலாம் வினாப்பத்திரம்
Question Paper One

## வேதங்களும் ஆகமங்களும்
## The Vedas and Agamas


1. **வடமொழி இலக்கிய வரலாறு,**
   கா. கைலாசநாதக்குருக்கள்

2. **A. History of Sanskrit Literature,**
   A . Macdonnel

3 **'வேதங்களின் உலகப் பொது நோக்கு**
   சிறப்பு மலர், இரண்டாவது உலக இந்து மகாநாடு - இலங்கை 2003
   வி. சிவசாமி

4. **"சிவாகம மரபு ஓர் அறிமுகம்"**
   சிறப்பு மலர், இரண்டாவது உலக இந்து மகாநாடு - இலங்கை 2003
   ப. கோபாலகிருஷ்ணன்,

5. **"சைவ ஆகமங்கள் - ஓர் அறிமுகம்"**
   கழக வெளியீடு - 2002
   முனைவர். எஸ்.பி.சபாரத்தினம்

6. **"ஆலயங்களும் ஆகமங்களும்"**
   பிரதிபா பிரசுரம் - 2000
   நஜன்

7. **"இந்தியத்தத்துவ ஞானம்"**
   பழனியப்பா பிரதர்ஸ் -2007
   கி. லக்ஷ்மணன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் வினாப்பத்திரம்
## Question Paper Two

# சமயஞானிகளும் சமயப்பெரியார்களும்
# Saints and Leaders Of Religious Movements


1. **பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்,** ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை, 1987.

2. **ஸ்ரீ இராமானுஜர்,** முல்லை நிலையம்,சென்னை, 1990

3. **ஆறுமுகநாவலர் சரித்திரம்,** த. கைலாசபிள்ளை, ஸ்ரீஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியசாலை அறக்கட்டளை, சிதம்பரம், 1985.

4. **விவேகானந்தர்,** பினாய்கேராய், நியுசெஞ்சரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டெட், சென்னை, 1984.

5. **ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு,** இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு, 1996

6. **Studies of Ramanuja,** Sri Ramanija Vedanda (Centre) Publication, 1979

7. **சுவாமி விபுலானந்தர் வாழ்வும் பணிகளும்.** வெளியீடு: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. வடமொழி இலக்கியவரலாறு,

கா. கைலாசநாதக்குருக்கள்.

9. The Cultural Heritage of India

10. Shri Shankara Dig Vijayam

Ramakrishna Mission - Publication

11. Schools of Bhakthi Vedantha

Ramakrishna Mission - Publicatiion

12. Swamy Vivekanandar

Ramakrishna Mission -Publication.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் வினாப்பத்திரம்
Question Paper Three

## சைவசமய வரலாறு
## History of Saivism

1. **The Cultural Heritage of India**
Volume IV, Ramakrishna Mission, Calcutta, 1937

2. **இலங்கையில் இந்து கலாசாரம்**
இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2000 சி. பத்மநாதன் (பதிப்பாசிரியர்)

3. **'சைவசித்தாந்தம்'**
க. முத்துவேலு
சிறப்பு மலர்: இரண்டாவது உலக இந்து மகாநாடு - இலங்கை 2003

4. **வியத்தகு இந்தியா**
ஏ. எல். பசாம்.
அரச கருமமொழித் திணைக்களம், கொழும்பு, 1962

5. **"சைவசமயம் ஓர் அறிமுகம்"**
பேராசிரியர் ப. அருணாசலம்
குமரன் புத்தக இல்லம், கொழும்பு 12,

6. **Temple of Siva in Sri Lanka,**
Ed S. Patmanathan,
Chinmaya Mission, Colombo, 1999.Ramakrishna Mission Publication

7. **சைவ சமய வரலாறு,**
மா. இராசமாணிக்கனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் வினாப்பத்திரம்
Question Paper Four

# பன்னிரு திருமுறைகள்

## The Twelve Sacred Books of Saivism

1. **திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரப் பதிகங்கள்,**
   பதிப்பு : திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம் லிமிட்டெட், சென்னை. 1987

2. **திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்**
   திருப்பபனந்தாள் ஸ்ரீ காசிமடம், 1995.

3. **சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்**
   திருப்பபனந்தாள் ஸ்ரீ காசிமடம், 1987.

4. **திருவாசகம்,**
   ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், ஸ்ரீ இராமக்கிருஷ்ண தபோவனம், திருச்சி மாவட்டம், 1995

5. **திருச்சிற்றம்பலக்கோவையார்,**
   பாலசாரநாதன், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே.சாமிநாதய்யர் நூல் நிலையம், சென்னை, 1995

6. **திருவிசைப்பா, திருப்பல்லாண்டு (ஒன்பதாம் திருமுறை)**
   திருலோக்கி ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோயில் குடமுழுக்கு விழா வெளியீடு, திருப்பனந்தாள், காசிமடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **திருமந்திரம்,** திரு. ப. இராமநாதபிள்ளை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, மறுபதிப்பு 1993.

8. **திருத்தொண்டர் புராணம்,** மலேஷிய திருக்கைலாய குருபரம்பரை சைவசித்தாந்த நிலையம், சென்னை, ஒன்பதாம் பதிப்பு 1993.

9. **கந்தபுராணம் தொகுதி 1, 2, 3** பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் உரை, யாழ்ப்பாணம், 1984.

10. **பண்ணிசைத்தத்துவம்** எஸ்.கே. சிவபாலன், கவிக்குயில் அச்சகம், சென்னை, 1997

11. **திருமுறைப் பண்ணிசைத் திறனாய்வு,** பண்டிதர் இ. வடிவேல்.

12. **நாலாயிரத் திவ்விய பிரபந்தம் தொகுதி 1, 2,** ஸ்ரீ வத்ஸன், தி லிட்டில் பிளவர் கம்பனி, சென்னை, 1999.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் வினாப்பத்திரம்
Question Paper Five

## கோயில்களும் நுண்கலைகளும்
## Hindu temple Art and Architecture

1. **மானசார சிற்பசாஸ்திரம்,**
   பதிப்பு : வேங்கட் சுப்பிரமணிய சாஸ்திரி,
   திருச்சிராப்பள்ளி, சகாப்தம், 1855 (கி. பி. 1963)

2. **மகாபரத சூடாமணி, சென்னை 1955**

3. **நாட்டிய சாஸ்திர சங்கிரகம் தொகுதி 1,**
   சரஸ்வதி மஹால் நூல் நிலையம், தஞ்சாவூர்.

4. **தென்னாசிய நடனங்கள்,**
   சிவசாமி, வி. யாழ்ப்பாணம்.

5. **அறம் வளர்த்தனாரின் பரதசங்கிரகம்,**
   அண்ணாமலைப் பல்கலைக்கழகம, 1954

6. **கலைமாமணி சரஸ்வதி பரதநாட்டியக்கலை,**
   திருமகள் நிலையம், சென்னை, 1994.

7. **பரதக்கலை**
   பத்மா சுப்பிரமணியம்,
   (மூன்றாம் பதிப்பு) சென்னை, 1996

8. **இலங்கையில் இந்து கலாசாரம்**
   பத்மநாதன் சி. (பதிப்பாசிரியர்)
   வெளியீடு : இந்துசமய கலாசார அலுவல்கள்
   திணைக்களம், கொழும்பு 2000.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. **இந்து கலாசாரம் - கோயில்களும் சிற்பங்களும்**
பத்மநாதன் சி. (பதிப்பாசிரியர்)
வெளியீடு : இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு 2001.

10. **இந்து கலாசாரம் - நடனங்களும், ஓவியங்களும்.**
பத்மநாதன் சி. (பதிப்பாசிரியர்)
வெளியீடு : இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு 2002.

11. **இந்துக்கலைக்களஞ்சியம், தொகுதிகள் II-IV**
பத்மநாதன் சி. (பதிப்பாசிரியர்)
வெளியீடு : இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

12. **இரண்டாவது உலக இந்து மாநாட்டுச் சிறப்பு மலர்,**
(பதிப்பாசிரியர்) க. இரகுபரன், கொழும்பு 2003.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org